ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம் செப்டம்பர் 2013-172 | ஒலி 9 |
| --- | --- | --- |


## இந்தியாவில் இந்துக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எல்லையே இல்லை.

கி.பி. 711ஆம் ஆண்டு வரை இந்தியாவில் அனைத்து மக்களும் இந்துக்களாகவே வாழ்ந்து வந்தனர். ஒரு சதவிகிதத்தினர் கூட முகம்மதியர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ இருக்கவில்லை. கி.பி.711ஆம் ஆண்டுக்குப் பிறகு, முகம்மது பின் காசிம் என்னும் பெயர் கொண்ட அராபிய மன்னன் சிந்துப்பகுதி மீது படையெடுத்தான். இந்துக்கள் போராடிய போதிலும் வெற்றி கொள்ள முடியவில்லை. இவ்வாறே இந்திய நாட்டின் பெரும்பகுதிகள் அதாவது கி.பி. 987இல் ஆப்கானிஸ்தான், கி.பி. 1947இல் பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட போது முகம்மதியர்களால் அபகரிக்கப்பட்டன.

கி.பி. 1947ஆம் ஆண்டிற்கு பிறகு, இந்திய புண்ணிய பூமியில் அந்நிய சக்திகள் அதிகாரம் செலுத்த முற்பட்டன, செலுத்தி வருகின்றன. இந்துக்களின் மக்கள் தொகை குறையத் தொடங்கியது. கி.பி. 1989 - 1990 ஆகிய ஆண்டுகளில் காஷ்மீரில் நடைபெற்ற படுகொலைகள் காரணமாக, காஷ்மீரத்தில் வாழ்ந்து வந்த இந்துக்கள் அகதிகளாக

ஆக்கப்பட்டனர். காஷ்மீரி பண்டிதர்கள் என்றழைக்கப்பட்டு வந்த அறிவு சான்ற மக்கள் கூட்டம் அழிக்கப்பட்டது. ஏகாயன வேதத்தின் பிறப்பிடமே காஷ்மீராகும். வேதவிற்பன்னர்கள் நிறைந்த அந்த காஷ்மீர் பகுதியில், இன்றும் இந்துக்கள் நசுக்கப்படுகிறார்கள். கிஸ்த்வாரில் நடந்த கலவரத்தில் இந்துக்கள் தாக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்குக்கூட இந்து தலைவர்களுக்கு உரிமையில்லை என்ற நிலை காணப்படுகிறது. இந்திய நாட்டில் பல்வேறு பகுதிகளில் பயங்கரவாதிகள் ஊடுருவியுள்ளனர். இந்திய நாட்டின் பல பகுதிகளில் ‘மினி பாகிஸ்தான்கள்’, ‘மினி பங்களாதேஷ்கள்’ உருவாக்கப் பட்டுள்ளன. வன்முறையைக் கையாண்டு இந்து மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். இந்து மதத்தலைவர்கள் கொல்லப்படுகிறார்கள். உதாரணத்திற்கு வேலூர், மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற படுகொலைகளைக் குறிப்பிடலாம்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு 600 ஆண்டுகள் பல்வேறு இனத்தவர்களும், வேற்று நாட்டவர்களும் இந்தியாவின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்களை தங்களுக்கு அடிமையாக்கி கொண்டனர். இந்துக்கள் தங்கள் உடைமைகளையும், உயிர்களையும் இழந்தனர். பெண்களுடைய கற்பு சூறையாடப்பட்டது. ஆனால் சுதந்திரம் அடைந்த 60 ஆண்டுகளில் இந்துக்கள் இழந்ததோ கணக்கிலடங்கா. 600 ஆண்டுகள் பட்ட துன்பத்திற்கு மேல், இந்த 60 ஆண்டுகளில் இந்துக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இன்னும் 20 ஆண்டுகளில் இந்திய நாட்டில் இந்துக்கள் மைனாரிட்டியாக ஆகி விடுவார்கள். கி.பி. 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில் ‘ராமர் என்று ஒருவர் பிறக்கவேயில்லை’. ‘சேதுபாலம் என்ற ஒன்று கட்டப்படவே இல்லை’ என்று கூறப்பட்டிருந்தது. மன்மோகன் சிங்கின் தலைமையில் இயங்கி வரும் இந்த அரசு இந்துக்களுக்கு இழைத்துவரும் இதுபோன்ற அநீதிகளுக்கு எல்லையே இல்லை. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ப்ரமாணப்பத்திரத்தை இந்திய அரசு திரும்பப் பெற்றுக்கொண்ட போதும், மத்தியில் ஆளும் கட்சியின் இந்து விரோதப் போக்கை அது தெளிவாக வெளிப்படுத்தியது.

1947ஆம் ஆண்டு இந்தியா துண்டாடப்பட்டபோது, முகம்மதியர்கள் வாழும்பகுதிக்கு பாகிஸ்தான் என்று பெயரிடப்



பட்டதோடு மட்டுமல்லாமல் அது முகம்மதியர் களுக்குரிய நாடு என்று அறிவிக்கப்பட்டது. குர்ஆன் தான் அரசாங்கத்தின் மத நூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியா Secular நாடு என்று அறிவிக்கப் பட்டது. ஆனால் ஆட்சியில் அமர்ந்தோர்க்கு Secular என்றால், எப்பாடுபட்டேனும் சிறுபான்மையினரான முகம்மதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகளை அள்ளி வீசுவதோடு மட்டுமல்லாமல், இந்துக்களை ஒடுக்கு என்பதை அந்தச் சொல்லுக்கு பொருளாகக் கொண்டனர்.

"However, an outlandish 'secularism' was foisted on Bharat where anything which is anti-Hindu, pro-Muslim, divisive, sectarian, and even anti-national is 'secularism' ".

இதன் விளைவாக,இந்துக்கள் ஒடுக்கப்படுவதோடு மட்டு மல்லாமல், இந்திய நாட்டில் முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சிக்கு இவர்களே காரணம். கூடங்குளம் போராட்டக்காரர்களுக்கு மேலை நாடுகளிலிருந்து உதவித்தொகை வருவது இந்திய அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தபோதிலும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இரண்டாண்டுகளாக மீனவர்களை தம்வசம் இழுத்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர் பலர். நகைப்புக்குரிய சில கருத்துக்களை இந்திய நாட்டின் பிரதமர் 9.12.2006 அன்று வெளியிட்டார்.

**Prime Minister Manmohan Singh asserted that "Muslims must have the first claim or national resources" at the National Development Council's meeting on 9.12.2006.**

அரசியல் சட்டத்தின்படி இந்தியக் குடிமக்கள் அனைவரும் சட்டத்தின்முன் சமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய நாட்டு அரசியல் சட்டப்படி மைனாரிட்டி, மெஜாரிட்டி என்ற வகுப்புகள் இல்லை யென்றபோதும், மத்திய அரசும், மாநில அரசுகளும் ஒருவர்கொருவர் போட்டிபோட்டுக் கொண்டு சிறுபான்மையி னருக்குப் பல சலுகைகளை வழங்கி வருகின்றனர். சிறுபான்மையினருக்குப் பெருமளவில் கல்வி உதவித்தொகை, கடன் உதவி, சலுகைகள் வழங்கப்பெற்று வருகின்றன.

ஸம்ஸ்க்ருத கல்வி ஒழிக்கப்பட்டு வருகிறது. ஹஜ் யாத்திரை மேற்கொள்வதற்கு எந்த முகம்மதிய நாட்டிலும் வழங்கப்படாத சலுகைகளாக பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்திய வரலாறு திருத்தி எழுதப்பட்டு வருகிறது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி 2011ஆம் ஆண்டு பதவியேற்றபின் முகம்மதியர்களுக்கென்றே பல நலத்திட்டங்களை அறிவித்தார். முகம்மதியர்களுக்கென்று வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் திறக்கப்பட்டன. அலிகார் முஸ்லீம் பல்கலை கழகத்தின் கிளை ஒன்று, மேற்கு வங்கத்தில் அமைத்திட ஆணையிட்டார். மும்மதியர்களுக் கென்றே தனி கல்லூரிகளும் தொழில் பயிற்சி நிலையங்களும் அமைக்கப்பட்டன. முப்பதாயிரம் இமாம்களுக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.2,500 உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இந்துசமய அறநிலையத்துறை நிதியி லிருந்து பத்ரிநாத், கேதார்நாத், முக்திநாத் யாத்திரை போவதற்கு குலுக்கல் முறையில் பணஉதவி செய்வதாக அறிவித்த முதல்வர், ஹஜ் யாத்திரைக்கு மட்டும் பலகோடி ரூபாய் அரசாங்க நிதியைத் தந்துள்ளார். இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள கொழுத்த பணக்கார ஸ்தாபனங்களில் வஃக்போர்டும், கிறிஸ்தவ மிஷினரிகளும் அடங்கும். அவர்களிடம் இல்லாத பணமா? ஏன் வரிப்பணத்தை வீண் அடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பாகிஸ்தான் இந்திய எல்லையில் ஊடுருவலை நடத்தி வருகிறது. இவ்வாறு பாகிஸ்தான் ஊடுருவல் செய்கிறது என்பதைக்கூட ஒப்புக்கொள்ளத் தயங்கும் ஏ.கே. அந்தோணி தான் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர். பாகிஸ்தானோடு பேச்சுவார்த்தை, பாகிஸ்தான் பிரதமரை கட்டித்தழுவுதல் போன்ற நிகழ்ச்சிகளில்தான் இந்தியா அமைதி காண விழைகிறது.

On 7th November, 1999 in New Delhi, Pope John Paul II gave a call to convert Asia to Christianity as follows:? "Just as the first millennium saw the Cross firmly planted in the soil of Europe, and the second in that of America and Africa, so may the Third Christian Millennium witness a great harvest of faith on this vast and vital continent."

உறங்கியது போதும். தன்மானம் காத்திட இந்துக்களே எழுச்சி கொள்ளுங்கள். ***



# துணுக்குத் தோரணம்

தொகுப்பாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ. கிருஷ்ணமாசார்யர்.

ஆழ்வார்திருநகரி மேலத்திருமாளிகை, ஸ்ரீ.உ.வே. அப்புசடகோபாசார்யர் ஸ்வாமியின் 7.8.2013 தேதியிட்ட கடிதம்.

''அறநெறிக்காவலரும் 'பாஞ்சஜன்யம்' ஆசிரியரும், வைணவ வளர்ச்சிக்கு மிகுந்த தொண்டாற்றி வருபவருமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமிகளுக்கு, அநேக மங்களாசாஸனம்.

இரு தினங்களுக்கு முன் வந்த தினமலரில் அறநிலையத் துறை மெத்தனத்தினால் 230 கோடிக்கு மேல் இழப்பு என்ற செய்தி வந்திருந்தது. இதை எப்போதே தாங்கள் எடுத்துக் காட்டியும் திருச்செந்தூர் கோயில் ஆடிட் ரிப்போர்டையும் வரிவரியாக எழுதியுள்ளீர்கள். நிற்க. இந்த மாத இதழின் முக்யத்துவம் 'கச்சத்தீவு' பற்றியும் கச்சத்தீவின் விபரங்களைப் பற்றியும் இதுவரை எந்தப் பத்திரிகையும் இவ்வளவு விரிவாக எழுதியதில்லை. அது தாரை வார்க்கப்பட்டதற்கு தகப்பனும், மகளுமே காரணம் என்பதை உணர்த்தியுள்ளீர்கள். அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் செயல்பாடுகளை புறந்தள்ளிவிட்டு, சர்வாதிகாரி முறையில் செயல்பட்டுள்ளார் இந்திராகாந்தி என்பது இதன் வாயிலாகத் தெரிகிறது. கச்சத்தீவு பற்றிய எந்த தகவல்களும் மதுலிமாயி போன்ற எம்.பிக்கள் கேட்டபோதும் அப்பன் காலத்திலும், மகள் காலத்திலும் கொடுக்கப்படவில்லை. மாநில முதல்வர்களை கைப்பாவையாகவே வைத்திருந்தது போல் தெரிகிறது. தமிழ் நாட்டு மீனவர்கள் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. இங்குள்ளவர்கள் மீனவர் பிரச்சினைப்பற்றி பலமுறை எழுதினாலும் தொலை பேசியில் பேசினாலும் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பதிலே வருகிறது. கச்சத்தீவின் முக்கியத்துவத்தை மத்திய அரசே உணராதது வேதனையைத் தருகிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் மட்டும் அடிக்கடி தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும், சிறையில்

அடைக்கப்படுவதும் ஏன்? பிறமாநில முதல்வர்கள் இதுபற்றி குரல் கொடுப்பதில்லை ஏன்? தமிழகத்தின் இன்றைய முதல்வரின் குரலுக்கு செவி சாய்ப்பதில்லை. பிறமாநில முதல்வர்கள் மத்திய அரசை ஆதரிப்பதும், வாபஸ் வாங்குவதுமாக பயப்படுத்தி காரியம் சாதித்துக் கொள்கின்றனர். 'திப்பு சுல்தான் வரலாறு பற்றியும்', அவரது ஆட்சிக் காலத்தில் தமிழகக் கோயில்கள், அந்தணர்கள் நிலையையும் எழுத்தில் வடித்துள்ளீர்கள். கச்சத்தீவு பற்றிய பகுதிகளை எடுத்து சிறு புத்தகமாக்கி வெளியிட்டால் மத்திய அரசு மேற்கொண்டுவரும் த்ரோகச் சிந்தனை மக்களுக்குப் புரியும்.

சிறப்பு வாய்ந்த கச்சத்தீவை இலங்கையரசுக்குத் தாரை வார்த்த அன்றைய பிரதமர் இந்திராகாந்தியை ''நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக'' என்று போற்றியுள்ளார் கருணாநிதி. கூட்டணியிலும் இடம்பெற்றுப் பயனடைந்துள்ளார். அன்றைய எம்.பிக்கள் நாடாளுமன்றத்திற்கு வந்தாலே ஆளும்கட்சி பயப்பட்ட காலம் இன்றைய நிலை அப்படிப்பட்ட தல்ல. அன்றைய மாற்றுக் கட்சி எம்.பிக்கள் கூறிய மறுக்க முடியாத குற்றச் சாட்டுகளை ஏற்று தங்கள் செயல்களைத் திருத்திக் கொண்டனர், ஆட்சியில் அமர்ந்திருந்த கட்சியினர்.

கச்சத்தீவு பற்றிய இந்த இதழ், கூடங்குளம் அணுஉலை எதிர்பாளர் உதயகுமார் கையில் கிடைத்தால், மத்திய அரசைப் படாதபாடுபடுத்தி விடும்நிலை உள்ளது. நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ புகழ்பாடும் அங்கத்தினர்களைக் கொண்டதாகவே உள்ளது. காரைக்குடி செட்டியார்களின் பெருமையையும், வைணவத்தின் சிறப்பையும், குன்றக்குடி ஆதீனம் பேசியது பாராட்டத்தக்கதே. இவருக்கு முன்பிருந்த குன்றக்குடி அடிகளாரும் வைணவம் பற்றி நன்கு பேசுவார். அவரது பூர்வாச்ரமப்பெயர் அரங்கநாதன் என்பதாகும். நான் அவருடன் பழகியுள்ளேன். தமிழக முதல்வரின் பார்வைக்கு இம்மாதஇதழ் சென்றால் ஒரு வேளை உரிய நடவடிக்கை எடுப்பாரோ யான் அறியேன்.வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச்சுவடுகள் அருமை. இருசமய விளக்கப் பாடல்களின் சந்தம் மிக இனிமை''.

★★★



**2. வாக்கு வங்கியும் தமிழக முதல்வரின் செயல்பாடுகளும்.**

**தர்மசக்தி 18.8.2013, மற்றும் 25.8.2013 தேதியிட்ட இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள்.**

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் மதம்மாறிய கிறிஸ்தவர்களையும் சேர்க்க வேண்டும். அதுவும் நடப்புப் பாராளுமன்றக் கூட்டத்தொடரிலேயே அறிவிப்பு வெளியிட வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்து நியாய உணர்வோடு செயல்பட்டவர், இப்படி மதமாற்ற மோசடிக்குத் துணைபோவது துரதிருஷ்ட வசமானது, வருத்தமளிப்பது. இவர் எந்த சலுகைகளை அறிவித்தாலும், அளித்தாலும் கிறிஸ்தவர்களின் வாக்கு வங்கியை இவரால் கைப்பற்ற முடியாது. காரணம் சர்ச் சொல்லும், அல்லது வெளிநாட்டிலிருந்து வரும் உத்தரவுக்கே கிறிஸ்தவர்கள் பணிந்து நிற்பர். சென்ற சட்டசபை தேர்தலுக்கு முன்னர் கன்னியாகுமரியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிற்குச் சென்று வாக்குறுதிகளை அள்ளி வீசினார். ஆனால் இந்துக்கள் பெரும்பான்மையான இடங்களில் மட்டுமே அதிமுக வெற்றி பெற்றது. கிறிஸ்தவர்கள் இவருக்கு ஓட்டளிக்கவில்லை என்பதைக்கூட அறியாமல் முதல்வர் இருக்கிறாரா?

நடுநிலையோடு சிந்திப்பாரேயானால், சிறுபான்மை யினருக்கு அளிக்கும் கல்வி உதவித்தொகையை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஐந்து மாணவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பார். இவருக்கு நியாயம் தெரியவில்லை, நிதர்சனமும் புரியவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. ஆனால் இந்துக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இல்லையேல் அரசியல்வாதிகள், நம்மைக் கூறுபோட்டு விற்று விடுவார்கள்! அரசியலைத் தாண்டி இந்துக்களுக்கு விழிப்புணர்வு வேண்டும். அப்படி விழிப்புணர்வை பெற்றவர்கள், இந்து சமுதாயத்திற்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்க்க, போராட, தங்களது கருத்தை தைரியமாக பத்திரிகைகளில், தொலைக்காட்சி யில் பதிவு செய்ய முன் வரவேண்டும். தாங்கள் எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும், இந்துக்களின் நலனுக்கு எதிரான செயல்பாட்டை எதிர்க்க முன்வர வேண்டும். விழிப்புடன் செயல்பட்டு, விடியலை ஏற்படுத்துவோம்.

தமிழக முதல்வரின் செயல்பாடுகள் மர்மயோகி திரைப் படத்தில் வருவது போல மர்மமாகவே காணப்படுகின்றன. ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு இருக்கும் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அவரின் நினைவு. ஆனால் இருப்பதைத் தொலைத்து பறக்கிறதை பிடித்த கதையாக சிறுபான்மையினரை 'தாஜா' செய்வதில் கருணாநிதி யையும் விஞ்சிக் காட்ட வேண்டும் என்ற வேகத்தை யாரோ ஏற்படுத்தி விட்டார்கள் போலும். தாராளமாக சிறுபான்மையினருக்கு உதவிகளை வாரி வழங்கி வருகிறார். அறுபதுபேரின் கண்கள் பறிபோகக் காரணமான திருச்சி உறையூர் கிறிஸ்தவமிஷனரி கண் மருத்துவமனைக்கு சுதந்திர தினவிழாவில் விருது வழங்கி கௌரவித்துள்ளார் முதல்வர் (மக்கள் டி.வி. செய்தி) என்றால், இதன் பின்னணி என்ன?

'கண் அறுவை சிகிச்சை செய்யத் தகுதியற்ற மருத்துவ மனை' எனத் தமிழக அரசால் நியமிக்கப்பட்ட விசாரணையில் தெரிந்த பின்னரும், அவர்களது சேவையால் 60 பேர் கண் பார்வை தெலைத்தது தெரிந்த பிறகும் ஏன் இந்த விருது வழங்கப்பட்டது. இப்படியே போனால் ஆசிரியை கொல்லப்பட்ட சென்னை பிராட்வே ஆங்கிலோ இந்தியப் பள்ளிக்கும், மாணவி சுகன்யாவை கற்பழித்துக் கொலை செய்த சேலம் ஓமலூர் பாத்திமா பள்ளிக்கும் சேவை விருது அளித்தாலும் அளிப்பார்கள். இந்த விருதை முதல்வர் ஏன் கொடுத்தார்? எப்படி கொடுத்தார்? எதற்குக் கொடுத்தார்? யாராவது பதில் சொல்ல முடியுமா? அதிகாரிகள் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டார் என்று சொல்ல முடியுமா? அல்லது வாக்கு வங்கியைக் கருத்தில் கொண்டு, திமுக(கருணாநிதியால்)வால் கூட மறைக்கப்படாத அவப்பெயரை தான் மாற்றி காட்டிவிட்டதாக கூறி கிறிஸ்தவ மிஷனரிகளைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சியா இது? ஜமுக்காளத்தை போட்டு மறைத்தாலும் மறையாத அழுக்கு மூட்டையான மிஷனரிகளில் ஊழல் லட்சணம் தெரிந்துவிட்டது. மிஷனரி மருத்துவமனையின் மோசமான மருத்துவ சேவை தெரிந்து மக்கள் வெகுண்டெழுந்தபோது அரசு அதனை திசை திருப்ப விசாரணைக்கு உத்தரவிட்டது, யாரும் அந்த செய்தியை பெரிது படுத்தக்கூடாது என மிரட்டினார் அப்போது பதவியில் இருந்த திமுக அமைச்சர். அந்த அச்சுறுத்தலைத் தாண்டியும் உண்மை வெளிவந்தது.

★★★



**3. ஜூனியர் விகடன் இதழிற்கு ஸ்ரீவைணவ மகா சங்கம் செயலர் திரு. வேணு. ராச நாராயணன் அவர்கள் எழுதிய மறுப்புக் கடிதம்.**

**பண்புடையீர்,**

**பொருள்:** கழுகார் கேள்வி பதில் பகுதி - 14.7.2013 இதழ் எஸ். இராமதாஸ், சேலம்-30 கேள்விக்கு தங்கள் பதிலுக்குப் பதில்?

ஒரு நடுநிலையான பத்திரிக்கை என்ற முறையிலும் இன்னமும் உண்மையை விரும்பும் ஒரு தமிழ் இதழ் என்பதாலும் உங்களுக்கு இந்த உண்மைகளை வைணவ உலகின் சார்பாக வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் மொழிக்கும் மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியது சைவமா? வைணவமா? இது தான் அவர் கேள்வி. கேள்விக்கு பதில் தெரிந்தால் தெரியும் என்று சொல்வது ஒரு வகை. தெரியாது என்றால் தெரியாது என்று சொல்வதும் ஒரு வகை. ஆனால் தெரியாததை தெரிந்தது போல் மழுப்பி மாட்டிக் கொள்வதும் ஒரு வகை.

வைணவக் கோயில்களில் காலையில்

பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு (11)
தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி (11)
ஆண்டாளின் திருப்பாவை (30)

இந்த பாசுரங்களைக் கட்டாயம் தினமும் கருவறையில் ஸேவித்தாக வேண்டும். இவற்றுடன் நம்மாழ்வாரின் ''கோயில் திருவாய்மொழி'', ''இராமானுச நூற்றந்தாதி'' ஆகியவற்றையும் ஸேவித்தாக வேண்டும். பெருமாள் வீதி ஊர்வலம் வந்தால் அவருக்கு முன்னால் ஆழ்வார்களின் ''தமிழ் வேதமான'' நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்னும் ''அருளிச்செயல்'' ஓதி வரப்பட வேண்டும்.

இந்த முறை இன்று ஆந்திராவில் இருக்கும் திருமலைக்கும் பொருந்தும்! திருமலையில் மார்கழி மாதத்தில் ஸுப்ரபாதம் கூட நிறுத்தப்படும். ஆனால் என்றைக்கும் திருப்பாவை ஓதப்படும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருவேங்கடமுடையான் வெள்ளிக்கிழமை தோறும் திருமஞ்சனம் நடந்த பின் ஆண்டாளின் ''நாச்சியார் திருமொழி''யான ஒரு நூற்று நாற்பத்து மூன்று பாடல் களைக் கேட்ட பிறகு தான் அலங்காரமே செய்து கொள்வார். ஸ்ரீராமானுஜரின் வழி வந்த தமிழ் நாட்டில் இல்லாத ''மற்ற மாநிலங்களில்'' உள்ள வைணவ திருக்கோயில்களில் பிரபந்தப் பாசுரங்களை மாநில மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு தமிழ் உச்சரிப்பிலேயே அவர்கள் பாடுகிறார்கள். இது இந்தியா முழுவதும் இன்றைக்கும் நடக்கின்ற ஒரு நடைமுறை.

தமிழ் நாட்டில் உள்ள 82 திருப்பதிகளிலும் பெருமாளுக்கு நடக்கும் அத்தனை சடங்குகளும் தமிழ்ப் பாசுரங்களைக் கொண்டே நடத்தப்படுகிறது. நாலாயிரம் பாசுரங்களுக்கும் பலர் விளக்க உரை எழுதி இருக்கிறார்கள். அதில் குறிப்பிடத் தக்கவர் பெரியவாச்சான் பிள்ளை (சர்வஜித் ஆண்டு 1177-1252 வரை) அவர்கள் நாலாயிரம் பாடல்களுக்கும் முழுமையாக உரை எழுதியவர். அவர்கள் விளக்க உரைகளை வேதத்தைக் கொண்டும், இராமாயண, மகாபாரதத்தைக் கொண்டும் விளக்கங்களை அளித்து உள்ளார்கள். வேதத்தையும் புராண இதிகாசங்களாயும் சேர்த்து எழுதியதால் வடசொற்களையும் சேர்த்து எழுதி இருக்கிறார்கள். இதன் அடிப்படையில் மணிப்ரவாள மொழி என்ற கலப்பு மொழியும் உருவாகி தமிழும் வடமொழியும் தெரிந்தவர்கள். வசதியாக படிப்பதற்கு ஒரு புது மொழியே உருவாக்கிக் கொடுத்தவர்கள் வைணவர்கள்.

சரி அந்த பக்கமும் தான் பார்ப்போமே! அறுபத்து மூன்று நாயன்மார்களில் எல்லோருமே படைப்பாளிகள் அல்ல! சிலரைத் தவிர பெரும்பான்மையோர் தொண்டர்களே! பன்னிரண்டு ஆழ்வார்களும் பாசுரங்கள் அருளியதால் தான் ஆழ்வார்கள்! இவர்கள் பாடிய அத்தனையும் நாலாயிர திவ்ய பிரபந்தம். ஆனால் நாயன்மார்கள் பாடியதெல்லாம் தேவாரம் அல்ல! வைணவத்திற்கு விளக்க உரை நூல் இருப்பது போல சைவத்திற்கும் ஏற்படுத்த வேண்டும் என்று ஒருவர் கேட்டுக் கொள்ள ஒரு மிகப்பெரிய தமிழ் அறிஞர் காவேரி சுடு மணலிலே விழுந்து இறந்தே போய் விடுவேன் என்று சொன்னதும வரலாறு! இதற்கு தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களே சாட்சி.



''தமிழ்க் கடவுள்கள்'' என்று சொல்லிக் கொள்ளும் கடவுள் களின் திருக்கோயில்களில் ஒரு சொட்டு தமிழுண்டா? தமிழால் இன்றும் ''நந்தியைக்கூட'' தாண்ட முடியவில்லை. ஆனால் வைணவக் கோயில்களில் கருவறையிலேயே தமிழ்ப் பாசுரங்கள் அலங்கரிக்கின்றன.

நாலாயிர திவ்ய பிரபந்தத்தை ஆண்டு தோறும் இறைவனே கேட்டு அருள்வதைத் தான் ''பகல் பத்து'', ''இராப் பத்து'' என்ற விழா இன்றைக்கும் வைகுந்த ஏகாதசி முன்னாலும் பின்னாலும் நடைபெறுகிறது. ''அரையர் ஸேவை'' என்று திருவரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, மேல்கோட்டை திருநாராயண புரம் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்வு களில் அடியார்களும் ஆண்டவனும் அமர்ந்து தமிழ்ப்பாசுரங்களை அனுபவத்தில் கொள்ள வேண்டும். விடை கேட்டால் ''வெங்காய வடைக்கு'' மாவு அரைக்கிறீர்கள்.!!!. ✱✱✱

**4. குமுதம் பக்தி ஸ்பெஷல் 2013 ஆகஸ்ட் 1-15 இதழில் வெளிவந்த தலையங்கம்.**

**''இனியாவது உளறாதீர்கள்''.**

''இந்தியக் கடவுள்களை தண்டிப்பேன் என்றும், இந்திய தேவர்கள் அனைவரும் பொய் என்று நிரூபிப்பேன் என்றும் இயேசு தமது தீர்க்கதரிசி மூலம் எனக்கு ஒரு தகவலை அனுப்பினார். அதை நிரூபிப்பது போலவே கேதார்நாத் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.'' இப்படி ''அருள்வாக்கு'' சொல்லியிருப்பவர் யார் தெரியுமா? உமா சங்கர் ஐ.ஏ.எஸ்.

இந்தியாவுக்கு வரக்கூடிய ஆபத்து உங்களுக்கு முன்கூட்டியே தெரிந்தது என்றால், அதை ஏன் நீங்கள் தடுத்திருக் கக்கூடாது?' ''தேவனுடைய தண்டனையிலிருந்து தப்பிக்க எந்த அரசாங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் பயன் தராது. மற்ற நாடுகளை விட இந்தியாவுக்கு தண்டனை அதிகம் உண்டு. காரணம் இந்தியாவில்தான் உருவ வழிபாடுகள் அதிக அளவில் இருக்கிறது. இயேசு உருவ வழிபாடுகள் கூடாது என்பதோடு, அதை மீறுபவர்கள் எனது எதிரிகள் என்கிறார்'' என்றெல்லாம் உளறிக் கொட்டிருக்கிறார் உமாசங்கர் ஐ.ஏ.எஸ்.

அமெரிக்காவைத் திணற அடித்த புயல்களும், உயிர்ச் சேதங்களும், எங்கள் சிவன் ஆடிய 'ருத்ரதாண்டவத்தினால் தான்' என்று நாம் சொல்வதற்கு எத்தனை நேரம் ஆகும்? இன்னொரு மதத்தவரை ஒரு கடவுள் அழிக்க நினைப்பாரா? கடவுள் என்ன அத்தனை குறுகிய மனம் படைத்தவரா? அதுவும் தனக்கு ஊறுவிளைவித்தவனிடம் கூட அன்பு காட்டிய அன்பின் உருவாக இருக்கும் இயேசுபிரானைச் சிறுமைப்படுத்துவது போல் உமாசங்கர், இப்படிப் பேசலாமா? அவரது மதத்தைச் சேர்ந்த பெரியவர்களாவது இதைக் கண்டிக்கக்கூடாதா?

ஓர். ஐ.ஏ.எஸ். அதிகாரி இப்படிப் பொறுப்பற்றுப் பேசினால், அவர் வகிக்கும் பணியின் மீதே சந்தேகம் எழுகிறது. பாரபட்சமாக நடந்திருப்பாரோ என்று ஐயம் ஏற்படுகிறது. அரசாங்கம் இவருக்கு கடுமையாக தண்டனை தர வேண்டாமா? உலகில் முதலில் தோன்றிய பெருமை மிக்க இந்து மதத்தையும், இந்து மதக் கடவுளையும் இழிவாகக் கூற இந்த ஆசாமிக்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்? நம் ஊரில் மட்டும்தான் இப்படியெல்லாம் அசட்டுத் துணிச்சலுடன் பேச முடிகிறது. மக்கள் மௌனமாகக் கேட்டுக் கொண்டு போய் விடுவார்கள். அந்த சிவபெருமானின் பெயரையே தன் பெயராக வைத்துக் கொண்டிருக்கும் உமாசங்கர் இனியாவது, இப்படியெல்லாம் அபத்தமாக பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தகுந்த மனநல மருத்துவரின் உதவியையும் அவர்நாட வேண்டும் என்று பக்தி வாசகர்கள் சார்பாக பரிந்துரை செய்கிறேன்.

**இதன் தொடர்பாக மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டுள்ளது அதுபற்றிய செய்திகள் தினமலர் 8.8.2013 தேதியிட்ட நாளிதழில் வெளிவந்துள்ளன.**

**'இந்து கடவுளை வழிபடுபவர்கள் தண்டிக்கப் படுவார்கள்' இப்படி கூறிய ஐஏஎஸ் அதிகாரி மீது வழக்கு.**

மதுரை. ஆகஸ்ட் 8: இந்துக்கள் மனம் புண்படும்படி பேசிய ஐஏஎஸ் அதிகாரி உமாசங்கர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் பழவிளையைச் சேர்ந்த இந்து தேசிய



காங்கிரஸ் கட்சியின் தலைவர் மதுசூதனபெருமாள் என்பவர் மதுரை ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது: 13.7.2013ஆம் தேதி வெளியான வாரப்பத்திரிகை ஒன்றில், ஐஏஎஸ் அதிகாரி உமாசங்கர் பேட்டியளித்துள்ளார். அதில், தனக்கு தீர்க்க தரிசனம் தெரியும் என்றும், இந்து கடவுள்களை வழிபடுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள், உருவ வழிபாடு செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

மேலும், கேதார்நாத்தில் பெரும் வெள்ளம், அதனால் உயிரிழப்பு ஆகியவை இதனால்தான் ஏற்பட்டவை என்றும் கூறியுள்ளார். இயேசுவை சரணடைவதே ஆபத்தில் இருந்து தப்பிக்க ஒரே வழி என்றும் கூறியுள்ளார். ஐஏஎஸ் அதிகாரியான உமாசங்கரின் இந்தப் பேச்சு, இந்துக்களின் மதஉணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் உள்ளது. இந்து-கிறிஸ்தவ மக்களின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உமாசங்கர் பேசியுள்ளார். இது குறித்து, உமாசங்கர் மீது நடவடிக்கை எடுக்கும்படி போலீசில் புகார் கொடுத்தேன். ஆனால் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இந்துக்களின் மதஉணர்வு புண்படும் வகையில் பேசிய ஐஏஎஸ் அதிகாரி உமாசங்கர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மதுசூதனபெருமாள் தன் மனுவில் கூறியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

**குறிப்பு: 22.8.2013ஆம் தேதி தினமலரில் வெளிவந்த செய்தி.**

இந்த மனு நீதிபதி மாலா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி மாலா, 'மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ராஜாக்காமங்கலம் போலீசார் விசாரணை நடத்த வேண்டும். இதில், எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டு உண்மை என்று தெரிய வந்தால், அல்லது மனுதாரர் கூறிய குற்றச் சாட்டில் உண்மை இருப்பது தெரியவந்தால், போலீசார் சட்டத்துக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கலாம்' என்று உத்தரவிட்டார். ★★★

### 4. 'நாமம் போட்டு விட்டான்' என்றால் 'ஏமாற்றப்பட்டோம்' என்று பொருளா?

இந்துக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதே நாளும்

தம் கடமையாய் சிலர் கொண்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் ‘படிப்பது இராமாயணம். இடிப்பது பெருமாள் கோயில்’ என்ற கொள்கையைக் கொண்டவர்கள். புரட்டாசி மாதம் வந்தால் திருமண்காப்பினை இட்டுக் கொள்ளும் இவர்களுக்கு, அந்தப் புனிதமான திருமண்காப்பினை இகழ்கிறோமே என்ற உணர்வே யில்லை. போனஸ் கிடைக்கவில்லையா? உடம்பு முழுவதும் ‘நாமத்தை’ போட்டுக் கொண்டு உண்ணாவிரதம் இருப்பார்கள். தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினருக்கு தனியார் சர்க்கரை ஆலைகள் பணம் தராமல் ஏமாற்றி வருகிறார்கள் என்ற புகாரை முன்வைத்து கரும்பும் கறுப்புக் கொடியும் ஏந்தி உடலில் நாமத்தை போட்டுக் கொண்டு தமிழக அரசை கண்டித்து உண்ணாவிரதம் இருந்துள்ளனர். கரும்பை ஏந்தி போராட்டம் செய்யுங்கள். ஆனால் வைணவர்களின் புனிதச் சின்னமான நாமம் எனப்படும் திருமண்காப்பினை போட்டுக் கொள்வானேன்.?

ஒரு மாறுதலுக்கு, சிலுவையை அணிந்து கொள்ளுங் களேன். அல்லது 786 இலக்கமிட்ட குல்லாவை அணிந்து கொண்டு லுங்கியைக் கட்டிக் கொண்டு போராட்டத்தில் ஈடுபடுங்களேன். ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதற்கு எந்த அகராதியில் நாமத்தை போட்டுக் கொள்ள வேண்டும் என்று உள்ளது. அப்படியானால் தினந்தோறும் பன்னிரண்டு நாமங்களைத் தரித்து கொள்ளும் தூய வைணவர்கள் எல்லோரும் ஏமாற்று பேர்வழிகளா? திருமலை யப்பன் மிகப்பெரிய ஏமாற்று பேர்வழியா? ஏன் லட்சக்கணக்கில் மக்கள் திருமலைக்குச் செல்கிறார்கள். அந்த தெய்வம் ஏதோ வரந்தரும் என்னும் நினைப்பில்தானே. புரட்டாசி மாதம் வந்தால் வைணவக் கோயில்களில் மக்கள் அதிக அளவில் கூடுவதேன்? வாழ்நாள் முழுவதும் நாஸ்திகம் பேசி வந்தவனைக் கூட சுடுகாட்டிற்கோ அல்லது இடுகாட்டிற்கோ எடுத்துச் செல்லும்போது அவன் நெற்றியிலே நாமம் இடப்படுகிறது. நாமம் என்ற சொல்லுக்கு எம்பெருமானுடைய பன்னிரண்டு திருநாமங்களைச் சொல்லி இடப்படும் ஒரு குறியீடு என்பது பொருளாகும். கோவிந்தா கோவிந்தா என்று சொல்வதும் இதைப் போலத்தான். இவ்வுலகிலுள்ள அனைத்துச் செல்வமும் இறந்து போனவனுடைய ஆவியும் கோவிந்தனுக்கே சொந்தம் என்பதை கோவிந்தா கோவிந்தா என்ற முழக்கம் வெளிப்படுத்துகிறது.




கரும்பும் கறுப்புக் கொடியும் ஏந்தி அமர்ந்திருக்கும் இவர்கள், தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர். உரிய காலத்தில் பணம் தராமல் தனியார் சர்க்கரை ஆலைகள் ஏமாற்றி வருவதாக புகார் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட தனியார் ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்காத தமிழக அரசை கண்டித்து சென்னையில் இந்த போராட்டத்தை நடத்தினர். தஞ்சை மாவட்ட தனியார் சர்க்கரை ஆலைகளை அரசே எடுத்து நடத்த வேண்டும் என்பதும் இவர்களுடைய கோரிக்கை.

(தினமலர் திருச்சி 8.8.2013 இதழில் வெளிவந்த புகைப்படம்)

அந்த கோவிந்தன் ஆவியை எடுத்துச் செல்வது என்பது அவன் உடைமையை எடுத்துச் செல்வதைக் குறிப்பதாகும். இவ்வாறு நாமத்தை கேவலமாகக் தரித்துக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களின் மதவுணர்வை புண்படுத்துவோர்மீது இந்திய குற்றவியல் சட்டம் 295, மற்றும் 295 Aஇன் கீழ் வழக்குத் தொடுக்கலாம். ஆனால், ஒரு Sittingகிற்கு ரூ.30 லட்சம் வாங்கும் ‘ஐயங்கார் வக்கீல்கள்’ இதைக் கண்டுகொள்வதில்லை. இது எப்படி என்றால் இவர்கள் கண்முன்பு, அவர்களுடைய மனைவிமார்களை ஒருவன் கற்பழித்தாலும் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு ஒப்பாகும். ஆனால் இதில் யாருக்கும் வெட்கமில்லை. தினந்தோறும் திரைப்படங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும், சமுதாய

போராட்டங்களிலும் நாமத்தை கேலி செய்கின்றனர். ஆனால் இந்தக் காட்சிகளை எந்த ஸ்ரீவைஷ்ணவ வக்கீலும் கண்டு கொள்வதில்லை. இது இந்த சமுதாயத்தின் தலைவிதி. ஒரு போராட்டக்காரனை 295 Aஇன் கீழ் சிறையில் தள்ளக்கூடுமானால், இத்தகைய போராட்டங்கள் நடைபெறாது.

விஸ்வரூபம், தலைவா படங்களுக்கு நிகழ்ந்த அச்சுறுத்தல்களுக்கு தலைவணங்கி தற்போது எந்தப்படம் எடுத்தாலும் கிறிஸ்தவ, முகம்மதிய சமுதாய முக்கியஸ்தர்களுக்கு படம் போட்டு காட்டப்படுகிறது. அதன் பின்பே அவை வெளியிடப்படுகின்றன. அவர்கள் Extra Constitutional censor board ஆக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் நாமம் போட்டு கேலி செய்யும் இந்தப் போக்கை ஒழிக்க ஸ்ரீவைஷ்ணவர்களால் முடியவில்லை. இவர்கள் இதைக் கண்டுகொள்வதில்லை ஏன்?.

சமுதாயத்தின் மீதான அக்கறை இன்மை. யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? நாம் வசதியுடையவராய் எந்த வம்பு தும்பிலும் மாட்டிக் கொள்ளாது வாழ்ந்திடுவோம் என்ற சுயநலம். திருமண்காப்பின் சீர்மையை மட்டும் பேச வல்லவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். எல்லாம் எம்பெருமான் ஸங்கல்பம். நாம் ஏன் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கொண்ட சமுதாயக் கூட்டமாய் விளங்குவதால் இவர்கள் நம்மை கேலிப் பொருளாகக் கொண்டுள்ளார்கள்.

ஸ்ரீவைஷ்ணவர்களின் புனிதச் சின்னமான திருமண்காப்பிற்கு அவலம் கற்பிக்கப்படுகிறதே என்ற உணர்ச்சி ஸ்ரீவைஷ்ணவர்களிடையே இல்லை. ஏன்? உண்மையிலேயே மதப் பற்றுக் கொண்டவர்கள் இவ்வாறு நாமத்தை கேலி செய்வோர்கள் மீது வழக்குத் தொடுக்கத் தயங்குவது ஏன்? குற்றவியல் சட்டம் 295, மற்றும் 295 A ஆகிய பிரிவுகளில் வழக்குத் தொடுக்க கறுப்பு அங்கி அணிந்த ஸ்ரீவைஷ்ணவ வக்கீல்கள் உதவிசெய்ய முன் வருவார்களா?

✸✸✸

# ஜிதந்தே ஸ்தோத்ரம்

புத்தூர் ஸ்ரீ.உ.வே. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் பதிப்பித்த பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திற்கான தெளிவுரை.

முதல் ஜிதந்தேயின் விளக்கவுரை. இதழ் 171இன் தொடர்ச்சி.

(பரித்ராணாய ஸாதூ$_{4}$நாம்) என்று தொடங்கி. (த$_{4}$ர்மஸம்ஸ்த$_{2}$ாபநார்த்த$_{2}$ாய ஸம்ப$_{4}$வாமி யுகே$_{3}$ யுகே$_{3}$) என்றானிறே. *(பரித்ராணாய ஸாதூ$_{4}$நாம் விநாஶாய ச து$_{3}$ஷ்க்ருதாம்| த$_{4}$ர்மஸம்ஸ்த$_{2}$ாபநார்த்த$_{2}$ாய ஸம்ப$_{4}$வாமி யுகே$_{3}$ யுகே$_{3}$|| - ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், வைதிகதர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகந்தோறும் நான் பிறக் கிறேன். - பகவத்கீதை 4-8)* அர்ஜுனனுடைய யுத்தப்ரோத் ஸாஹநவ்யாஜமாக (அர்ஜுனனை குருக்ஷேத்ரப்போரில் ஈடுபடும்படி செய்வதற்காக) ஸ்வவிஷய பக்தியோகத்தை அவதரிப் பித்தாப்போலே (தன்னைப் பற்றியதான பக்தியோகத்தை வெளிப்படுத்தினாப்போலே).

(உபாயோ பேயத்வே ததி$_{3}$ஹ தவ தத்த்வம்) ***(உபாத$_{3}$த்தே ஸத்தாஸ்தி$_{2}$திநியமநாத்$_{3}$யைஶ்சித$_{3}$சிதௌ ஸ்வ முத்$_{3}$தி$_{3}$ஶ்ய ஸ்ரீமாநிதி வத$_{3}$தி வாகௌ$_{3}$பநிஷதீ$_{3}$| உபாயோ பேயத்வே ததி$_{3}$ஹ தவ தத்த்வம் ந து கு$_{3}$ணௌ அதஸ்த்வாம் ஸ்ரீரங்கே$_{3}$ஶய ஶரணமவ்யாஜமப$_{4}$ஜம் || - ஹே ஸ்ரீரங்கநாதனே! 'ஸ்ரீமந்நாராயணன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, நியமனம் முதலிய காரியங் களால் சேதன அசேதனங்களைத் தனக்காக ஸ்வீகரிக் கிறான்' என்று உபனிஷத் சொற்றொடரானது சொல்லுகிறது. ஆகையால், இவ்விஷயத்தில் உபாயத்வமும் உபேயத்வமும் உனக்கு இயல்வு; செயற்கையல்ல. ஆகையால் உன்னை நிர்வ்யாஜமான (காரண***

*மற்றதான) உபாயமாக அடைந்தேன். - ஸ்ரீரங்கராஜஸ்தவம் 2-88)* என்று உபேயபாவத்தேபாதி உபாயபாவமும் நித்யமிறே. ஒருத்தன் ஸ்வீகரித்த போதாக உபாயமா கிறானன்றிறே. போகவேளையிலும் பஞ்சலக்ஷம் குடியில் பெண்களிற்காட்டில் தன்னுடைய முற்பாடு தோற்றுகைக்காக விறே திருக்குழலை வாய் வைத்தருளிற்று. இந்த போகந்தான் அவிச்சிந்நமாக (இடைவீடின்றி) வேணுமென்று அபிநிவேஶம் (மிகுந்த ஈடுபாடு) பிறந்தவ னுக்கு, அப்போது அவிச்சிந்நபோகஸ்தாநம் (இடையறாத இன்பத்தை அளிக்கும் இடம்) எங்கேயோ என்று தேடவேண்டாதபடி.

(ஶ்ரீயா ஸார்த்த$_4$ம் ஜக$_3$த்பதி: ஆஸ்தே) *(வைகுண்டே$_2$து பரே லோகே ஶ்ரீயா ஸார்த்த$_4$ம் ஜக$_3$த்பதி: । ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா ப$_4$க்தைர் ப$_4$ாக$_3$வதைஸ் ஸஹ ॥ - (மேலான உலகமான வைகுண்டத்தில். ஜகத்பதியும், நினைக்கவொண்ணாத ஸ்வரூபத்தை உடையவருமான விஷ்ணு, பக்தர்களுடனும், பாகவதர்களுடனும் கூடியவராய், ஸ்ரீதேவியுடன் கூட எழுந்தருளியிருக்கிறார். - லிங்கபுராணம்.)* என்கிறபடியே நித்யவிபூதியிலே இவனுடைய வரலாறு பார்த்திருக்கிறானிறே.

**2. தே$_3$வாநாம் த$_3$ாநவாநாம் ச ஸாமாந்யமதி$_4$தை$_3$வதம் ।**
**ஸர்வத$_3$ா சரணத்$_3$வந்த்$_3$வம் வ்ரஜாமி ஶரணம் தவ ॥**

**2. பதவுரை:- தே$_3$வாநாம்** - விஷ்ணுபக்தி யுடையவர் களுக்கும், **த$_3$ாநவாநாம் ச** - பகவத்பக்தியற்றவர்களுக்கும், **ஸர்வத$_3$ா** - எப்போதும், **ஸாமாந்யம் அதி$_4$தை$_3$வதம்** - ஸமானமாகப் பற்றலாம்படியிருக்கும், **தவ** - உன்னுடைய, **சரண த்$_3$வந்த்$_3$வம்** - திருவடியிணையை, **ஶரணம்** - உபாயமாக, **வ்ரஜாமி** - அடைகிறேன்.

**அவதாரிகை:-** (தே$_3$வாநாம் இத்யாதி$_3$) கீழ் ஶ்லோகத்திலே உபேயத்தை நிர்ணயித்து, தத்ஸித்த்யர்த்தமாக (அதைப்பெறுவதற்கு) உபாயத்தை அத்யவஸிக் கிறான் (உறுதியான நம்பிக்கையுடன் கூடிய அறிவைப் பெறுகிறான்).



உபேயத்திலும் தலையான உபேயத்தை லபித்தாப் போலே (பெற்றாப்போலே), உபாயத்திலும் தலையான உபாயத்தை லபிக்கப்பெற்றபடி (கிடைக்கப்பெற்றபடி). புத்ரபஶ்வந்நாதிகளையே ப்ராப்யமென்று (கொண்ட பெண்டிர் மக்கள், பசுக்கள், அன்னம் ஆகியவற்றையே அடையக்கூடிய பலனாய் பற்றியிருக்கை) இருப்பாரும், தேவர்களைப்பற்றி ஸ்வர்க்கத்தை லபிக்கையே (ஸ்வர்க்கலோகம் புகுவதையே) புருஷார்த்தம் என்றிருப்பாரும், ஈஶ்வரனையே பற்றி வைத்து, இந்த்ரபதம் முதலான பதங்களையே புருஷார்த்தமென்று, அவன் பக்கலிலே லபிக்கவிருப்பாருமாயிருக்கிற ஸம்ஸாரத் திலே, ஸர்வாதிகனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், உபயவிபூதிநாயகனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தையே புருஷார்த்தமென்று இருக்கையாகிற இது, ஒருத்தருக்கும் கிட்டுவதொன்றன்றிறே.

(மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு) *(மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்$_3$த$_4$யே யததாமபி ஸித்$_3$த$_4$ாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத: - மனுஷ்யர்களில் ஆயிரக்கணக் கானவர்களில் ஒருவனே ஸித்தியடையும் வரையில் முயல் கின்றான். ஸித்தியடையும் வரையில் முயல்பவர்களிலும் (பல்லா யிரத்தில்) ஒருவன்தான் என்னை உண்மையாக அறிகிறான். - பகவத்கீதை 7-3)* என்றும்.

(ஸ மஹாத்மா ஸுது$_3$ர்லப$_4$:) *(ப$_3$ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்$_3$யதே । வாஸுதே$_3$வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது$_3$ர்லப$_4$:॥ - (பல ஜன்மங்களுக்குப் பின் ஜ்ஞானியானவன் ''வாஸுதேவனே (எனக்கு) எல்லாம்'' என்று*

*என்னை உபாஸிக்கிறான். அப்படிப்பட்ட மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன் - ஸ்ரீபகவத்கீதை 7-19.)* என்றும், அவன் தனக்கும் துர்லபமாயிறே இருப்பது. அதுபோலே, உபாயங்களிலும் வந்தால் - கர்மயோகாத்யுபாயங்களைப் பற்றுவாரும்.

(கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்ம ஸம்ஸார ப$_3$ந்த$_4$நாத்| - *ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்) (ஜந்துவானவன் எதை ஜபிப்பதினால் ஜன்ம ஸம்ஸாரங்களாகிற கட்டுகளிலிருந்து விடுபடுகிறான்?)* என்கிற படியே திருநாமங்களைப் பற்றுவாரும்.

(தே$_3$ஶோ(அ)யம் ஸர்வகாமது$_4$க்) *(பவித்ரம் பரமம் புண்யம் தே$_3$ஶோ(அ)யம் ஸர்வகாமது$_4$க் | யஸ்மிந் வாஸரமாத்ரேண வாஸம் வித$_3$த$_4$தாம் ந்ருணாம்|| ப$_4$யாந்வயா விநஶ்யேயுர் லோப$_4$மோஹாத$_3$யோ த்$_3$விஜ|| - ப்ராஹ்மணரே! யாதொரு தேசத்தில் ஒரு நாள் மாத்திரம் வாஸம் செய்யும் மனிதர்களுக்கு, பயகாரணங்களும், லோபம், மோஹம் முதலியவைகளும் நசிக்கின்றனவோ, அப்படிப்பட்ட இந்த தேசம் மிகவும் புனிதமாகவும், மனிதர்களுக்கு மோக்ஷோபாயமாகவும், எல்லா இஷ்டங்களையும் கொடுப்பதாகவுமிருக்கிறது - காருடபுராணம் -11.)* என்கிறபடியே தேஶவிஶேஷங்களைப் பற்றுவாருமாக, இப்படிச் சேதந பேதத்தோபாதி உபாயபேதமும் அஸங்க்யாதமாகச் (கணக்கற்றவையாய் எண்ணிக்கைக்குள் அடங்காத) செ(ா)ல்லுகிற ஸம்ஸாரத்திலே, ஸுஶகமாய் (மிக எளிதில் செய்யத்தகுந்தாய்), நிரபாயமாயிருக்கிற (அழிவற்றதாய் இருக்கிற) ஸித்தோபாயபரிக்ரஹம் கிடைப்பதொன்றன்றிறே.

அப்படிப்பட்ட உபாயபரிக்ரஹத்தைச் சொல்லுகிறது. 'த்வயத்துக்கு வ்யாக்யானம் பண்ணுகிறதாகில், அதில் க்ரமமொழிய, முற்பட ப்ராப்யநிஷ்கர்ஷம் (உபேயத்தினை



அறுதியிடல்) பண்ணுவானென்?' என்னில்: இப்ராப்யம்தான் இத்தலையில் ருசியால் வந்ததன்றிக்கே ருசியே தொடங்கி அத்தலையால் வந்ததாகையாலே, முற்படி நிஷ்கர்ஷித்து, அனந்தரம் உபாயஸ்வீகாரத்தைப் பண்ணுகிறான்.

வ்யா:- "தே$_3$வாநாம் தா$_3$நவாநாம் ச ஸாமாந்யமதி$_4$ தை$_3$வதம்" என்று இவ்வுபாயஸ்வீகாரத்துக்கு அதிகாரி நியதியில்லை என்கிறது. தேவர்களாகிறார், - ஈஶ்வரனுக்கு அனுகூலகோடியிலுள்ளார். தா$_3$நவராகிறார், - ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதராயிருக்குமவர்கள் (முயல்பவராய் இருக்குமவர்கள்).

(விஷ்ணுப$_4$க்திபரோ தே$_3$வோ விபரீதஸ் ததா$_2$ (அ)ஸுர:| - *விஷ்ணுதர்மம் 109-74) (விஷ்ணுபக்தியில் ஈடுபட்டவன் தேவன்; அப்படியே பக்தியற்றவன் அஸுரன்.)* என்னக்கடவதிறே.

(த்$_3$வெள பூ$_4$தஸர்க்கெ$_3$ள லோகே(அ)ஸ்மிந் தை$_3$வ அஸுர ஏவ ச | - *இவ்வுலகில் பூதங்களின் உற்பத்தி - தைவமென்றும், ஆஸுரமென்றும் இருவிதம் - ஸ்ரீபகவத்கீதை 16-6*) என்று இரண்டுக்குள்ளே அந்தர்ப்பூதையிறே ஸ்ருஷ்டி. (ஸாமாந்யமதி$_4$ தை$_3$வதம் சரணத்$_3$வந்த்$_3$வம்) ஸர்வஸாதாரணமான திருவடிகளை. இத்தால் ஸம்பந்த ஸாமாந்யத்தைச் சொல்லுகிறதன்று. ஆஶ்ரயணீயத்வே ஸமமாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. இப்படி விஶேஷிக்கிறது எத்தாலே? என்னில்: விமுகரான (முகங்கொடாதவரான) காலத்தில் ஆஶ்ரித விரோதிகளென்றிட்டு அழியச்செய்யுமவனாகையாலே. "அவுணர்க்கென்றும் சலம் புரிந்தங்கருளில்லாத் தன்மையாளன்" (திருநெடுந்தாண்டகம் .6) என்னக் கடவதிறே.

நிஹீன ஜன்ம குண வ்ருத்தரோடு (தாழ்வான ஜன்மத்தில் பிறந்தவரோடு மாறுபட்ட குணங்களை உடைய);

இவற்றால் உத்க்ருஷ்டரோடு வாசியற எல்லார்க்கும் ஆதித்யோதயம்போலே (கதிரவனின் எழுச்சியை அனைவரும் காண்பதுபோலே) எனக்கென்று பற்றலாம்படியான திருவடிகளென்கை. ராவணன் எச்சிலைத் தின்று வந்த ஸ்ரீவிபீ₄ஷணாழ்வான்,

(ஸர்வலோகரஶரண்யாய) *(ஸர்வலோகஶரண்யாய ராக₄வாய மஹாத்மநே| நிவேத₃யத மாம் க்ஷிப்ரம் விபீ₄ஷண முபஸ்தி₂தம்|| - (மஹாத்மாவும், எல்லா உலகுக்கும் சரணமடையத் தகுந்தவனுமான ராகவனுக்கு இங்கு வந்திருப்பவனும், விபீஷண னென்ற பெயரையுடையவனுமான என்னை சீக்கிரமாக அறிவியுங்கள்.)* என்று வழக்குப்பேசிப் பற்றலாம்படியிறே இருப்பது.

(ஸமோ(அ)ஹம் ஸர்வபூ₄தேஷு) *(ஸமோஹம் ஸர்வபூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோ(அ)ஸ்தி கஶ்சந - (என்னை ஆச்ரயிக்கும் விஷயத்தில்) நான் எல்லா பூதங்களுக்கும் ஸமமா யிருப்பவன்; எனக்கு ஒருவனும் வெறுக்கத்தக்கவனல்லன் - ஸ்ரீபகவத்கீதை 9-29.)* என்றிறே ஶரண்யன் வார்த்தை.

(வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம்ப₄வதி து₃:க்கி₂த:) *(வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த: | உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி|| - [(ராமன்) மனுஷ்யர்களுடைய துக்கங்களில், (அவர்களைக் காட்டிலும்) அதிகமாக துன்புறுகிறான். (அவர்களுக்கு ஏற்படும்) எல்லா நிகழ்வுகளைக் கண்டு தந்தையைப்போல் ஆனந்தப் படுகிறான்.]* என்று ஆஶ்ரயணவேளையில்.

(யதி₃ வா ராவணஸ் ஸ்வயம்) *(ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட₂ த₃த்தமஸ்யாப₄யம் மயா | விபீ₄ஷணோ வா ஸுக்₃ரீவ! யதி₃ வா ராவண: ஸ்வயம் || -வானரர்களுள்*



*சிறந்தவனான ஸுக்ரீவனே! இவனை அழைத்துவா; விபீஷணனா யிருந்தாலும், ராவணன் தானேயாயிருந்தாலும், இவனுக்கு என்னால் அபயமளிக்கப் பட்டது.- ராமாயணம் யுத்தகாண்டம் 18-34.)* என்றானிறே. "எல்லா உலகும் தொழும் ஆதி மூர்த்தி" (திருவாய். 3.3.5) என்றும், "பொது நின்ற பொன்னங்கழல்" (மூன்றாம் - திரு. 88). என்றுமிறே அபியுக்தர் வார்த்தை (ஆழ்வார்களின் திருவாக்கு). (ஸர்வதா₃) ப்ராதிகூல்யம் (தீயசெயல்) பண்ணுகிற வேளையேயானாலும் ரக்ஷாபேக்ஷையே (காத்தலை விரும்புதலாகிய விருப்பம்) வேண்டுவதாக விஷயீகரிக்கும் திருவடிகள்.

(பாபாநாம் வா... கார்யம் கருணமார்யேண) *(பாபாநாம் வா ஶுப₄ாநாம் வா வத₄ார்ஹாணாம் ப்லவங்க₃ம | கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்₄யதி|| - வானர! பாபிகளாயினும், புண்யமுள்ளவராயினும், கொல்லத்தகுந்தவர் களாயிருந்தாலும் குணவானாயிருப்பவனால் (அவன் விஷயத் தில்) கருணை காட்டப்பட வேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.)* என்னக்கடவதிறே. "ஈடுமெடுப்புமிலீசன்" (திருவாய். 1.6.3) என்று ஆழ்வாரும் அருளிச்செய்ததுக்கும் அடி இதுவிறே.

(அநாலோசிதவிஶேஷா(அ) ஶேஷலோகஶரண்ய - ஶரணாகதிகத்யம்.5.) [*(ஆச்ரயிப்பவர்களின்) குணாகுணங்களை நிரூபணம் செய்யாமலிருப்பவனே! எல்லா உலகுக்கும் சரண்யனே!*] என்றதுக்கும் முதல் இதுவிறே. (சரணத்₃வந்த்₃வம்) அந்யோந்யம் சேர்த்தியழகைச் சொல்லுகிறது. உபாயமாக அநுஸந்திக்குமளவிலே வேறொரு ப்ரயோஜனமும் வேண்டா. ப்ரயோஜனமும் இதுவே போருமென்றிருக்கை. (ஶரணம் வ்ரஜாமி) உபாயமாக அடைகின்றேன். கீழ்ச்சொன்ன ஸர்வாதிகாரத்வம்

(அனைவராலும் கைக்கொள்ளக்கூடியது) ஸித்தோபாயத்தைக் குறித்து என்கை. ஸாதநாந்தரங்கள் (வேறுஸாதனங்கள் - வேறுஉபாயங்களைக் கைக்கொள்வது) அதிக்ருதாதிகாரங்களாயிறே இருப்பது (உரிமை உடையானுடைய உரிமையாய் இருக்கும்நிலை). "வ்ரஜ-க$_3$தெள" என்கிற கத்யர்த்தம் புத்த்யர்த்தமாய் 'அத்$_4$யவஸிக்கிறேன்' (துணிவுடன் பற்றுகிறேன்) என்றபடி. இத்தால் ஶரண்யன் ஸந்நிதி வேண்டா; ப்ராப்தியே (அடைதலே) அமையுமென்கை. ஆசார்ய ருசிபரிக்ருஹீதமான (ஆசார்யனால் ஏற்றுக்கொள்ளத் தக்கதான) வாக்யத்தில் க்ரியாபத$_3$த்தில் (சொற்றொடரின் வினைச்சொல்லில்) வர்த்தமான நிர்த்தேஶமே (இப்போது சொல்லப்பட்டதே குறிப்பிடப்பட்டுள்ளது). அதை கௌணமாக (முக்கியம் அல்லாததாக) உபதேஶித்துப் போருகிறதும்.

அவனுடைய (ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய) *("ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே | அப$_4$யம் ஸர்வபூ$_4$தேப்$_4$யோ த$_3$தா$_3$ம்யேதத்$_3$ வ்ரதம் மம||" -ரா.யு.18-33-* ஒரு தடவை *சரணமடைந்தவன் பொருட்டும், 'உனக்கு அடியேனாகிறேன்' என்று பிரார்த்திப்பவன் பொருட்டும், எல்லா ப்ராணிகளிடத்தினின்றும் அபயமளிக்கிறேன். இது எனக்கு விரதம்.)* என்கிற வாக்யத்தைப்பற்ற. ஆக, 'ஸக்ருத்$_3$வித$_4$நம்' ஈஶ்வரவிஷயீகாரத்தைப் பற்ற. ப்ராப்ய ருசியாலே ப்ராப்தியளவும் செல்ல அனுவர்த்திக்கக் கடவது (பின்பற்றக் கடவது) ராக$_3$த்தாலே. (வ்ரஜாமி) வ்ரீஹிஸ்வீகாரம் (நெல்தானம் வாங்குதல்), தே$_3$வதாமுத்$_3$தி$_3$ஶ்ய த்$_3$ரவ்யத்யாக$_3$ரூபமானயாக$_3$முமன்றிக்கே (யாகாதிகளில் தேவதைகளைக் குறித்து அளிக்கப்படும் த்ரவ்யம்), தத$_3$ங்க$_3$மான ப்ரயாஜாதி$_3$களுமன்றிக்கே இருக்கிறாப்போலே, உபாய ஸ்வீகாரமும் உபாயமன்று; அதுக்கு அங்க$_3$முமன்றிக்கே அதி$_4$காரி விஶேஷணமாய்க் கிடக்கிறது.



(தவ) (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்) *("அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் | ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ விஶேஷத:||" - ரா.ஆ. 10-19) நான் உயிரையும், லக்ஷ்மணனோடுகூட உன்னையும் விடுவேனேயொழிய செய்த ப்ரதிஜ்ஞையை விடமாட்டேன்; அதிலும், விஶேஷமாக ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்த ப்ரதிஜ்ஞையை விடேன்.)* என்றும்,

(கபோதோ வாநரஶ்ரேஷ்ட$_2$ கிம் புநர் மத்$_3$விதே$_4$ா ஜந:) *("ஸ ஹி தம் ப்ரதிஜக்$_3$ராஹ ப$_4$ார்யாஹர்த்தாரமாக$_3$தம் | கபோதோ வாநரஶ்ரேஷ்ட$_2$! கிம் புநர் மத்$_3$விதே$_4$ா ஜந:||" -ரா.யு.18-25- வானரத்தலைவனே! மனைவியைக் கொன்றவனும், தன்னை அடைந்தவனுமான அவ்வேடனை அந்தப் புறா வரவேற்றதன்றோ. என்னைப்போன்ற மனிதனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?)* என்றும் தன்னை அழியமாறி ஶரணாக$_3$தபரித்ராணம் பண்ணின கபோதோபாக்$_2$யானமும் அருளிச்செய்த தேவருடைய. "சரணத்$_3$வந்த்$_3$வம் வ்ரஜாமி" என்று அந்வயம்.

முதல் ஶ்லோகம் ப்ராப்ய (உபேய) ஸங்க்$_3$ரஹமானபோது, (இந்த ஶ்லோகம் "நமஸ்தே" என்கிற பத$_3$த்துக்கு விவரணமாகிறது. விவரணாபேக்ஷை என்னென்னில் (எவ்வாறு விவரணமாய் கொள்ளப்படுகிறது என்னில்):

(மத்$_3$யாஜீ மாம் நமஸ்குரு) *("மந்மநா ப$_4$வ மத்$_3$ப$_4$க்தோ மத்$_3$யாஜீ மாம் நமஸ்குரு| மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோ(அ)ஸி மே ||" -ஸ்ரீபகவத்கீதை 18-65 - என்னிடத்தில் மனத்தை வைத்தவனாகவும், என்னுடைய பக்தனாகவும், என்னை ஆராதிப்பவனாகவும் ஆவாயாக. என்னை நமஸ்கரிப்பாயாக. என்னையே அடைவாய்; இது ஸத்யம். உனக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன். எனக்குப் பிரியனன்றோ நீ.)* என்று நமஶ்ஶப்தம்

ஸாத4நாந்தரத்துக்கும் ஸாத4ாரணமாகையாலே, ஶரணஶப்3த3 பர்யாயம் நமஶ்ஶப்தத்தினுடைய விவரணமாகிறது.

(க3ச்ச2த்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷப4ா:) *(''ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாத4வ:। க3ச்ச2த்4வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷப4ா: ।।'' - பாரதம், ஆரண்யபர்வம் 192-56. - புருஷச்ரேஷ்டர்களே! எல்லா உலகங்களுக்கும் தந்தையும், தாயும் லக்ஷ்மீநாதனே; சரணமடையத்தகுந்த இவனை சரணமடையுங்கள்.)* என்று விதித்த ஶரணாகதியினுடைய அனுஷ்டான வேளையிலே.

(த்3ரௌபத்3யா ஸஹிதாஸ் ஸர்வே நமஶ்சக்ருர் ஜநார்த்த3நம்) *(''ஏவமுக்தாஸ் த்ரய: பார்த்தா2 யமௌ ச ப4ரதர்ஷப4ா:। த்3ரௌபத்3யா ஸஹிதாஸ் ஸர்வே நமஸ்சக்ருர் ஜநார்த்த3நம்।।'' - பார.ஆர.192-56. - இம்மாதிரியாகச் சொல்லப் பட்டவர்களும், பரதகுலத்தில் உதித்தவர்களுள் சிறந்தவர் களுமான குந்தீபுத்ரர்கள் மூவரும், (மாத்ரியின்) இரட்டைப் பிள்ளைகளுமாகிய எல்லாரும், த்ரௌபதியுடன் கூடியவர்களாய் ஜனார்தனனை நமஸ்கரித்தார்கள் (சரணமடைந்தார்கள்).* என்று நமஸ்ஸைப் பண்ணினார்கள். ஆகையாலே ஸ்த2ாநப்ர மாணத்தாலே (அந்த சொல் அமைந்துள்ள இடத்தைக் கொண்டு) ஶரணஶப்3த3பர்யாயம் நமஶ்ஶப்3த3ம்.

3. ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா ஸம்ஹாரகஸ் தத2ா ।
அத்4யக்ஷஶ்சாநுமந்தா ச கு3ணமாயாஸமாவ்ருத: ।।

3. பதவுரை: **லோகஸ்ய** - எல்லா உலகங்களையும், **ஸ்ரஷ்டா** - ஸ்ருஷ்டித்தவன், த்வம் ஏக: **அஸி**- (ஸஹாயாந்தரத்தை எதிர்பாராத) நீ ஒருவனேயாகிறாய்; **தத2ா** - அப்படியே, **ஸம்ஹாரக:**- ஸம்ஹரிப்பவனும் (நீ ஒருவனே); **அத்4யக்ஷஶ்ச** - ரக்ஷிப்பதற்குக் காலத்தை எதிர்பார்த்திருப்



பவனாகவும், **அநுமந்தா ச**- (ப3ந்த4த்தைத் தரும் கர்மங்களில் ஈடுபடுபவனைத் தடுக்காமல்) அனுமதிப்பவனாகவும், **கு3ண மாயா ஸமாவ்ரத:**- ஸத்வரஜஸ்தமோ கு3ணங்களுடன் கூடிய ப்ரக்ருதியாலே மறைக்கப்பட்டவனாகவும் இருக்கிறாய்.

**அவதாரிகை-** (ஏகஸ்த்வமஸீத்யாதி3) கீழ் இரண்டு ஶ்லோகத்தாலே ப்ராப்யப்ராபகங்களைச் சொல்லிற்றாய், அந்த உபாய ஸ்வீகாரத்துக்கு அடியான ஶரண்யதையைச் சொல்லுகிறது மேலில் ஶ்லோகங்கள். அதில் இந்த ஶ்லோகத்தில், அநந்தரம் ஶரண்யதைக்கு உறுப்பாக அவனுடைய ஜக3த்காரணத்வப்ரயுக்தமான ஸர்வஜ்ஞத்வாதி3 மஹா கு3ணங்களைச் சொல்லுகிறது.

42. (காரணந்து த்4யேய:) *(அதர்வஶிகை - காரண வஸ்துவே தியானிக்கத்தக்கது)* என்கிறபடியே உபாஸ்யம் ஜக3த்காரண வஸ்துவானவோபாதி ஶரண்யமும் ஜக3த்காரண வஸ்துவேயிறே. எங்ஙனேயென்னில்:

43. (யோ ப்3ரஹ்மாணம் வித3த4ாதி பூர்வம்யோ வை வேத3ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை) *(யோ ப்3ரஹ்மாணம் வித3த4ாதி பூர்வம் யோ வை வேத3ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை । தம் ஹ தே3வமாத்மபு3த்3தி4ப்ரஸாத3ம் முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்3யே।।'' - ச்வே.6-18 - எவன் பிரமனை முன் படைத்தானோ, எவன் வேதங்களையும் அவனுக்கு உபதேசித் தானோ, அப்படிப்பட்ட தேவனும், தன் விஷயமான ஞானத்தை ப்ரகாசிப்பிப்பவனுமான பரமபுருஷனை, மோக்ஷமடைய விரும்பும் நான் சரணமடைகிறேன்.)* என்று ஜக3த்காரண வஸ்துவைச் சொல்லி, (முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்3யே) என்று மோக்ஷஸித்3தி4க்காக அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தியை ஸோபாநமாக (படிக்கட்டுகளின் வரிசைப்போலே) விதி4த்ததிறே.

**வ்யா:- (லோகஸ்ய ஸ்ரஷ்டா த்வம் ஏக: அஸி)** "லோக ஶப்தத்தாலே (சொல்லாலே)", "லோக்யத இதி லோக:" என்கிற வ்யுத்பத்தியால் (அறிவு விளக்கம்) ப்ரத்யக்ஷஸித்$_3$த$_4$மாயும் (கண்களால் காணக்கூடியதாகவும்), ஶ்ருதிஸித்$_3$த$_4$முமாயுள்ள (ச்ருதி சொற்றொடர்களால் தேறுவதாயும்) ஸகல பத$_3$ார்த்த$_2$ங்களுக்கும் ஸ்ரஷ்டா வென்கை (ஸ்ருஷ்டித்தவன் என்கை). "த்வம்" என்கிற ஏகவசனத்தாலே ஸ்ரஷ்டரந்தரவ்யா வ்ருத்தியைச் சொல்லுகிறது (படைப்புத் தொழிலையையும் அதைச்சார்ந்த செயலையும் சொல்லுகிறது).

(ஆகாஶாத்$_3$வாயு:| வாயோ ரக்$_3$நி:| அக்$_3$நேராப:| அத்$_3$ப்$_4$ய: ப்ருதி$_2$வீ|| *- ஸுபாலோபனிஷத் - 1. ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று; வாயுவிலிருந்து அக்னி உண்டாயிற்று; அக்னியிலிருந்து ஜலம் உண்டாயிற்று; ஜலத்திலிருந்து பூமி உண்டாயிற்று.*) என்று அசேதனங்களுக்கும்.

(ப்$_3$ரஹ்மா(அ)ஸ்ருஜத்) *("ப்$_3$ரஹ்மா ஸ்ருஜத் யாதி$_3$காலே மரீசிப்ரமுக$_2$ாஸ் தத:| உத்பாத$_3$யந்த்யபத்யாநி ஜந்தவஶ்ச ப்ரதிக்ஷணம்||" -ஸ்ரீவிஷ்ணுபுராணம் - பிரமன் ஆதிகாலத்தில் ஸ்ருஷ்டி செய்கிறான்; பிறகு மரீசி முதலியவர்களும், எல்லா ஜந்துக்களும் மக்களை க்ஷணந்தோறும் உண்டு பண்ணுகின்றனர்.)* இத்யாதி$_3$களிலே சேதனர்க்கும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளிலே கர்த்ருத்வம் (செய்யும் தன்மை) சொல்லா நிற்க, ஈஶ்வரனே ஸர்வஸ்ரஷ்டா என்ற படியென்? என்னில்: சேதந அசேதந ஶரீரியானவன் ஸர்வ ஸ்ரஷ்டாவாகையால் ஸர்வஸ்ரஷ்டா ஈஶ்வரனே.

(ஸ்வாத் ஶரீராத் ஸிஸ்ருக்ஷுர் விவித$_4$ா: ப்ரஜா:) *("ஸோ(அ)பி$_4$த்$_4$யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவித$_4$ா: ப்ரஜா: | அப ஏவ ஸஸர்ஜாதௌ$_3$ தாஸு பீ$_3$ஜமவாஸ்ருஜத்||" - மனு.1-8 - அந்தப் பரமாத்மா தம்முடைய சரீரத்தினின்றும் பல விதமான ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்ய விருப்பமுள்ளவராய் ஸங்கல்பித்து, முதலில் நீரையே ஸ்ருஷ்டித்தார்; அந்த ஜலத்தில் (தன் சக்தியாகிய) விதையை விதைத்தார்.)* என்று மனு.

(ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்க$_3$கர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச| ப்$_3$ரஹ்மாத்$_3$யவஸ்த$_2$ாபி$_4$ர ஶேஷமூர்த்திர் விஷ்ணுர் வரிஷ்டே$_2$ா வரதே$_3$ா வரேண்ய:|| - *(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1.2.70. - ஸ்ருஷ்டி செய்யப்படுபவனும் அவனே; பிரமன் முதலிய அவஸ்தைகளால் (நிலைகளில் இருந்து கொண்டு) ஸ்ருஷ்டி செய்பவனும் அவனே; அவனே (உலகை) ரக்ஷிக்கிறான்; (உலகை) விழுங்குகிறான்; அவனே காப்பாற்றப் படுகிறான். எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்ட விஷ்ணுவே மேலானவன்; வரங்களைத் தருபவன்; வரிக்கத்தகுந்தவன்.)*. இதி பராஶர:

(தத$_3$ பி$_4$த்$_4$யாநாதே$_3$வ து தல்லிங்க$_3$ாத் ஸ:| - *ப்ரஹ்மஸூத்ரம் 2-3-14. - (மஹதாதி வஸ்துக்களுக்கும்) புருஷோத்தமனே (காரணம்); அவனுடைய ஸங்கல்பரூபமான அந்த அடையாளத்தாலே.)* இதி ஸூத்ரம். 'ஏக' பத$_3$த்தாலே ஸஹாயாந்தரநிரபேக்ஷதையைச் (இன்னொருவருடைய உதவியை எதிர்பாராது செய்யப்படும் செயலைச்) சொல்லுகிறது. (ஏகாகீ ந ரமேத) *( "ஸ ஏகாகீ ந ரமேத" - ப்ரளயகாலத்தில்) ஒருவராயிருந்த அந்த நாராயணன் ஆனந்தத்தை அடைய வில்லை.)* என்று இழவு தன்னதானபடி சொல்லுகிறது. (ப$_3$ஹுஸ்யாம் ப்ரஜாயேய) *("ததை$_3$க்ஷத ப$_3$ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோ(அ)ஸ்ருஜத|" - சாந்.6.2.3 - அந்தப் பரப்ரஹ்மம் '(நானே) பலவாக ஆகக் கடவேன்' என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டி செய்தது.)* என்று இவனுடைய ப்ரயோஜனமும் அபி$_4$மானமும் தன்னதென்கிறது.

(ஏக மேவாத்$_3$விதீயம்) *("ஸதே$_3$வ ஸோம்யேத$_3$மக்$_3$ர ஆஸீதே$_3$கமேவாத்$_3$விதீயம்" - சாந்.உப.6-2-1 - குழந்தாய்! (நாமரூபங்களுடன் காணப்படும்) இந்த உலகம் ப்ரளயகாலத்தில் (நாமரூபங்களில்லாமையால்) ஒன்றாகவும், (தன்னைப்போல் வேறொன்றில்லாததால்) இரண்டற்றதாகவுமிருந்த 'ஸத்' எனப்படும் ப்ரஹ்மமாகவே இருந்தது.)* என்று ஸஹகாரிநைரபேக்ஷ்யந்தன்னை "தனி மாப்புகழே எஞ்ஞான்றும்" (திருவாய் 8.10.7) எஞ்ஞான்றும்" என்கிற பாட்டிலே ஆழ்வார் அருளிச் செய்தாரிறே. இத்தால் அர்த்தித்வநிரபேக்ஷமாக (ஒருவருடைய வேண்டுதல் இல்லாது) இவற்றை உண்டாக்கினவன், அர்த்தித்வமும் (வேண்டுதலை ஏற்று) உண்டானால் ரக்ஷிக்கச் சொல்ல வேண்டாவிறே என்கை.

சரமம்லோகத்தில் ஏகபத$_3$ம் உபாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. இந்த ஏகபதம் உத்பாத$_3$கத்வத்தில் (படைப்பில்) நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. **(தத$_2$ா ஸம்ஹாரக:)** ஸ்ருஷ்டியோபாதியும் ஹிதகாமனாய் ஸம்ஹரிக்கிறாய் நீ ஒருவனுமேயன்றோ. புருஷார்த்தே$_2$ாபயோகி$_3$யாக சரீரத்தைக் கொடுக்க (உயர்ந்ததான பலனாகிய மோக்ஷத்தை அடைவ தற்கு இந்த உடலைக் கொடுத்திருக்க), இத்தைக் கொண்டு பரஹிம்ஸாதி$_3$களிலே இழிந்து (பிறர்க்கு துன்பம் விளைவிப்பதையிலேயே ஈடுபட்டு) அதிப்ரவ்ருத்தனாய்த் (அதிக ஈடுபாடு கொண்டவனாய்) தன்னை நஸிப்பித்துக் கொள்ளுமளவிலே (தன்னை அழித்துக்கொள்ளும் அளவிலே), அந்த ஶரீரத்தையும் அழியச் செய்கை ஹிதமேயிறே.

இத்தாலும் ஶரண்யதையைச் சொல்லுகிறது. இவன் தன்னை இவன் கையில் காட்டிக் கொடாமையால். (அத்$_4$யக்ஷஶ்ச) "ஸ்ருஷ்டி ப்ரயோஜனமான மோக்ஷருசி இவர்களுக்கு உண்டாகவற்றே?" என்று அவஸரப்ரதீக்ஷனா



யிருக்கிறபடியைச் சொல்லுகிறது (தக்கதோர் தருணத்தை எதிர்நோக்கியிருக்கும் தன்மையைச் சொல்லுகிறது). "ஆள் பார்த்து உழி தருவாய் கண்டுகொள்" (நான்முகன் திருவந்தாதி 60) என்னக்கடவதிறே.

"புருஷார்த்த$_2$ ஸாத$_4$னமான ஸ்வஶரீரங்கொண்டு புருஷார்த்த$_2$த்தில் இழிகையன்றிக்கே, ஸ்ருஷ்டி ஸம்ஹாரத்துக்கே விஷயமாவதே இவை" என்று இவற்றினுடைய அனர்த்த$_2$த்தை அனுஸந்தி$_4$த்திருக்கிற படியைச் சொல்லுகிற தென்றுமாம். (வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்$_4$ருஶம் ப$_4$வதி து$_3$:க்கி$_2$த:) *(வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்$_4$ருஶம்ப$_4$வதி து$_3$:க்கி$_2$த:| உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி||" - ரா.அ.2-40 - [(ராமன்) மனுஷ்யர்களுடைய துக்கங்களில், (அவர்களைக் காட்டிலும்) அதிகமாக துன்புறுகிறான். (அவர்களுடைய) எல்லா உத்ஸவங்களிலும் தந்தையைப்போல் ஆனந்தப்படுகிறேன்.]* என்னக் கடவதிறே. இப்படியிருக்கிறவன் புருஷார்த்த$_2$த்தை அபேக்ஷித்தால் ரக்ஷிக்கச் சொல்ல வேண்டாவிறே. (அநுமந்தா ச) விஷயாந்தரங்களில் ப்ராவண்யத்தால் தத்ஸாத$_4$னமான ப$_3$ந்த$_4$க கர்மங்களிலே ப்ரவர்த்தியாநின்றாலும் அங்கண்ணனாய்க்கொண்டு நிஷேதி$_4$க்கமாட்டாதே (விலக்கமாட்டாதே) நிற்கும்.

எத்தாலே யென்னில்: "க்ஷு$_3$த்$_3$ர ப்ரயோஜனத்துக்காவாகிலும் நம் பக்கலிலே வரப்பெற்றோம்; ஸர்வஶக்தியான நாம் உளோமிறே; இடம் வந்த விடத்திலே ரக்ஷிக்கிறோம்" என்னும் நினைவாலே. 'இப்படி வத்ஸலனானவன் இத்தலை இசைந்தால் ஹிதகாமனென்னுமிடம் சொல்லவேணுமோ?' என்று கருத்து. (கு$_3$ணமாயா ஸமாவ்ருத:) 'இப்படி இவர்கள் ப$_3$ஹிர்முக$_2$ராகைக்கு (வேறொன்றைப் பற்றியிருக்கும் தன்மை) அடியென்?'

என்னில்: கு₃ணமயியானமாயையால் மறைக்கப்படுகையாலே. (ப₄க₃வத்ஸ்வரூபதிரோத₄ாநகரீம் - [*ஶரணா கதிகத்யம் - 12. - பகவத்ஸ்வரூபத்தை மறைப்பதான (ப்ரக்ருதியை)*.] என்கிறபடியே இச்சேதநனை மாயை மறைக்கையால் அவனையும் மறைத்ததாமிறே. தன் உடைமையான இவன் கு₃ணவஶ்யனாய், பொய்ந்நின்ற ஞான'த்திலே கலங்கினால் (திருவிருத்தம் 1), இக்கு₃ணஸம்ப₃ந்த₄மின்றிக்கே ஸர்வஜ்ஞ னானவனே ஶரண்யனாக வேணும் என்று கருத்து.

(ஸத்த்வாத₃யோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா கு₃ணா:) *(''ஸத்த்வாத₃யோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா கு₃ணா:| ஸ ஶுத்₃த₄ஸ் ஸர்வ ஶுத்₃தே₄ப்₄ய: புமாநாத்₃ய: ப்ரஸீத₃து||'' - ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-9-44. - எந்த ஈசனிடத்தில் ப்ராக்ருத குணங்களான ஸத்வரஜஸ்தமோகுணங்கள் இல்லையோ, ஶுத்தர்களான எல்லோரையும்விட சுத்தனான அந்த ஆதிபுருஷன் உகந்தருளுவானாக.)* என்னக்கடவதிறே. முதல் ஶ்லோகம் ஸர்வஸங்க்₃ரஹமானபோது, இஶ்லோகம் "விஶ்வப₄ாவந" என்கிற பத₃த்தினுடைய விவரண மாகிறது. ஜநிஸ்தி₂திலயங்களுக்கு (ஆக்கல், காத்தல், அழித்தல்) ஆஶ்ரயமாகையும் ஸஹகாரிநைரபேக்ஷ்யமுமிறே ப₄க₃வல்லக்ஷணம்; அது இஶ்லோகத்தில் சொல்லுகிறது.

**4. ஸம்ஸாரஸாக₃ரம் கே₄ாரமநந்த்லேஶப₄ாஜநம் |**
**த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: ||**

**4. பதவுரை:-** மநீஷிண:- மனஸ்ஸை ஜயித்திருப்ப வர்கள், த்வாமேவ - உன்னையே, ஶரணம் - உபாயமாக, ப்ராப்ய - அடைந்து, அநந்தக்லேஶப₄ாஜநம் - கணக்கற்ற து₃:க்க₂ங்களுக்குப் பிறப்பிடமாய், **கே₄ாரம்** - மிகக்கொடிதாயிருக்கும், ஸம்ஸாரஸாக₃ரம்-ஸம்ஸாரமாகிய ஸமுத்₃ரத்தை, நிஸ்தரந்தி-தாண்டுகிறார்கள்.

(தொடரும்)

# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 171இன்தொடர்ச்சி.  ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

சம்பராசுரனுடன் இந்திரனும் விஷ்ணுவும் செய்த போரை விவரிக்கிறது இம்மந்திரம். இந்திர விஷ்ணுக்களின் பராக்ரம வர்ணனம் இம்மந்திரத்தில் இடம் பெற்றுள்ளது. பகவான் விஷ்ணு ஸர்வேச்வரனும் ஸர்வ சக்திமானுமானபடியால், அவனுடைய ஸஹாயத்தாலேயே இந்திரன் ஆச்சர்யமான மாயா சக்திகளை யுடைய அசுரர்களையும் அவர்களுடைய பாதுகாப்பு மிகுந்த கோட்டை கொத்தளங்களையும் அழித்துத் த்வம்சம் செய்ய முடிந்தது. இந்திரனின் சக்தியும் பகவான் விஷ்ணுவின் சக்தியின் ஒரு சிறு அம்சமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**அடுத்து ஆறாவது மந்திரம் பின்வருமாறு:**

*இயம் மநீஷா ப்$_3$ருஹதீ ப்$_3$ருஹந்தோ*
*ருக்ரமா தவஸா வர்த$_4$யந்தீ |*
*ரரே வாம் ஸ்தோமம் வித$_3$தே$_2$ஷு*
*விஷ்ணோ பிந்வதமிஷோ வ்ருஜநேஷ்விந்த்$_3$ர ||*

**இதன்பொருள்:** மிகச் சிறந்த இந்தத் துதி மஹத்தானவர்களும், பெரிய அடிவைப்பை உடையவர்களும் பலம் மிக்கவர்களுமான உங்களைப் போற்றுகிறது. இந்திரவிஷ்ணுக்களே, இந்தத் துதியை வேள்விகளில் கூறுகிறேன். கஷ்டமான காலங்களில் எங்களுக்கு அந்நத்தைப் பெருகச் செய்வீர்களாக.

''**உருக்ரம**'' (பெரிய அடிவைப்பை உடையவன்) என்ற சொல் விஷ்ணுவை மட்டுமே குறிக்கும். அவனே தன் திருவடியால் உலகளந்தான் என்ற செய்தியை வேதம் குறிப்பிடுகிறது. உலகளந்தவன் விஷ்ணுவே என்பதால் மற்ற தேவதைகள் விஷயத்தில் இந்தச் சொல்லைப் பிரயோகிப்பது பொருந்தாது. ஆனால் இங்கு ''பெரிய அடிவைப்புக்களை உடையவர்களே'' என்று இந்திரனையும் சேர்த்து விளிக்கிறார், மந்திரத்ரஷ்டாவான ரிஷி.

இதற்கு ஒரு காரணம் உண்டு. இந்திரனின் நண்பன் என்று பகவான் விஷ்ணுவை வேதம் சொல்வதால் பகவானின் செயலை இந்திரன் மீதும் ஏற்றிச் சொல்கிறது வேதம். மேலும் இந்திரனுக்குக்காகத்தான் பகவான் விஷ்ணு உலகளந்தார் என்ற விபரத்தை நாம் வேதத்தின் மூலம் அறியமுடிகிறது. ரிக்வேதம் 8-ஆம் மண்டலம் 12ஆவது ஸூக்தத்தில் உள்ள 27ஆம் மந்திரம் பின்வருமாறு.

*யத$_3$ா தே விஷ்ணுரோஜஸா*
*த்ரீணிபத$_3$ா விசக்ரமே |*
*ஆதி$_3$த்தே ஹர்யதா*
*ஹரீ வவக்ஷது: ||*

**இதன்பொருள்:** ''விஷ்ணு தனது பராக்ரமத்தால் உலகை மூவடியால் அளந்தபோது உனது (இந்திரனது) அழகிய குதிரைகள் உன்னை ஏந்திச் சென்றன.''

இது இந்திரனைக் குறித்துக் கூறப்படும் மந்திரம். இந்திரனுக்கு உரிய உலகங்களை ஆக்ரமித்து அவனுடைய செல்வங்கள் அனைத்தையும் கவர அசுரர்கள் முற்பட்டபோதுதான் பகவான் விஷ்ணு தான் ஸர்வேச்வரன் என்பதை உலகறிய நிரூபிக்கவும், அசுரர்கள் கவர நினைத்த செல்வங்களை இந்திரனுக்கு சொந்தமாக்குவதற்காகவுமே தன் திருவடியால் உலகை அளந்தார். அதன் பிறகே இந்திரன், மறுபடியும் தன் செல்வங்களைப் பெற்றான் என்பதைக் குறிப்பிடவே 'பகவான் மூவடியால் உலகளந்தபோதுதான் உன் அழகிய குதிரைகள் உன்னை ஏந்தின' என்று இம்மந்திரத்தில் சொல்லப்படுகிறது. இதனால் இந்திரனுக்கு உதவவே பகவான் விஷ்ணு உலகை அளந்தார் என்பது புலப்படுகிறது.

8-ஆம் மண்டலம் 52-ஆம் ஸூக்தம் இந்திரனை தேவதையாக உடையது. அந்த ஸூக்தத்தில் உள்ள 3-ஆவது மந்திரத்திலும் இவ்விஷயம் வெளிப்படுகிறது. ''**யஸ்யை விஷ்ணு ஸ்த்ரீணி பத$_3$ா விசக்ரம உப மித்ரஸ்ய த$_4$ர்மபி$_4$:**'' என்பது அம்மந்திரத்தின் ஒரு பகுதி. ''நண்பனின் தர்மத்தை அநுசரித்து எவனுக்காக விஷ்ணு மூன்று அடிகளை வைத்தானோ'' என்பது அந்த மந்திரப் பகுதியின் பொருள். இதனால் இந்திரனுக்காகவே



விஷ்ணு உலகை அளந்தார் என்று ஏற்படுகின்றது. ''நண்பனின் தர்மத்தை அநுசரித்து'' (**மித்ரஸ்ய த$_4$ர்மபி$_4$:**) என்று கூறுவதால் ஆபத்தில் உதவுவதே நண்பனுக்குரிய தர்மம் என்றாகிறது. ''இந்திரனின் உற்ற நண்பன் விஷ்ணு'' (**இந்த்$_3$ரஸ்ய யுஜ்ய ஸகா**) என்று வேதம் கூறுகிறது. அதாவது வேதம் இந்திரனுக்குத்தான் உற்ற நண்பன் விஷ்ணு என்று கூறுகிறதேயொழிய, விஷ்ணுவுக்கு நண்பன் இந்திரன் என்று எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. இதனால் ஒரு விஷயம் புலப்படுகிறது. எவன், தேவையானபோது ஒருவனுக்கு உதவுகிறானோ அவன் அவ்வுதவியைப் பெற்ற வனுக்கு நண்பன் ஆகிறான். ஆங்கிலத்தில் கூட "A friend in need is a friend indeed'' என்று ஒரு வசனம் கூறுவார்கள். அந்த வகையில் இந்திரனுக்குத் தேவையானபோது வந்து விஷ்ணு உதவி செய்வதால்தான் இந்திரனின் நண்பன் விஷ்ணு என்று கூறுகிறது வேதம். நண்பன் என்பதற்கு '**ஸஹாய:**' என்று சொல்வதும் உண்டு. இது எப்படி ஏற்பட்டதெனில் '**ஸஹாயம்**' (உதவி) செய்பவள் '**ஸஹாய:**' (நண்பன்) ஆகிறான் என்றுமாம். அதனால் தான் இந்திரனின் நண்பன் விஷ்ணு என்று சொல்லப்பட்டது.

விஷ்ணுவினால் இந்திரன் ஸஹாயமடைந்தபடியாலே விஷ்ணு இந்திரனின் நண்பனாகிறான். ஆனால் இந்திரனை விஷ்ணுவின் நண்பன் என்று கூறமுடியாது. அப்படி வேதமும் கூறவில்லை. ஏனெனில் இந்திரனால் பகவான் விஷ்ணுவுக்கு ஆகவேண்டியது என்று ஒன்றுமில்லை. விஷ்ணு ஸர்வேச்வரனும் பரமாத்மாவுமானபடியாலே, அவனால் முடியாதது என்று ஒன்றுமில்லை.அவன் மற்றவர்களின் உதவியை எந்தச் சூழ்நிலையிலும் நாட வேண்டிய அவசியம் இல்லை. அதனால் அவனுக்கு நண்பன் என்று யாரும் இல்லை. தன்னால் படைக்கப்பட்ட ஜீவராசிகள் மகிழ்ச்சியுடன் இருக்க அவன் உதவி செய்வதால் அவனே அனைவருக்கும் நண்பனாகிறான். அதனால்தான் ''எல்லாவிதமான உறவாக இருப்பவன் அவனே'' (**ஸ ஹி பந்து ரித்தா**) என்று சொல்லப்பட்டது. அதேநேரத்தில், அந்தப் பரமேச்வரன் தன்னால் படைக்கப்பட்ட ஜீவராசிகளில் சிலரை நண்பராகவோ அல்லது மற்ற எந்த உறவிலுமோ நினைக்கிறான் எனில் அது அவனது விருப்பத்தால் தானேயொழிய காரணத் தாலன்று. தன்மீது உயரிய தூய்மையான அன்பு வைக்கும்

பக்தர்களின் விருப்பங்களையும் பூர்த்தி செய்வது அவனது கடமையாக உள்ளதல்லவா! அதனால் தன்னை அவர்கள் எந்த உறவில் பார்த்தாலும் அதை அவன் ஏற்றுக் கொள்கிறான்.

அதனால் 'நட்பு' என்ற சொல்லுக்குரிய இலக்கணத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்திரனுக்கு பகவான் நண்பனாக இருக்க முடியும். ஆனால் பகவானுக்கு இந்திரன் நண்பனாக இருக்க முடியாது. தனக்கு சமமான அந்தஸ்து உள்ளவனையோ அல்லது தன் அந்தஸ்துக்கு மேலான அந்தஸ்து உள்ளவனையோ, தனக்கு நண்பனாக்கிக் கொள்ள முடியும். தனக்கு சமமில்லாதவனை அல்லது தன் அந்தஸ்திற்குக் குறைவான நிலையில் உள்ளவனை தனக்கு நண்பன் என்று சொல்ல இயலாது. அந்தவகையில் இந்திரனின் தகுதிக்கு மேற்பட்டவர் பகவான் விஷ்ணு. விஷ்ணுவின் தகுதிக்கு இந்திரன் மேற்பட்டவனோ, சமமானவனோ இல்லை. அதனால் தகுதி என்ற அடிப்படையில் விஷ்ணுவுக்கு இந்திரன் நண்பனாக இருக்க முடியாது. விஷ்ணுவே இந்திரனுக்கு நண்பனாக இருக்க முடியும். இந்திரனுக்கு விஷ்ணுவின் ஸஹாயம் தேவை. விஷ்ணுவின் ஸஹாயமின்றி இந்திரன் வாழமுடியாது. ஆகவே இந்திரன் விஷ்ணுவைத் தன் நண்பனாக்கிக் கெண்டான். ஆனால் விஷ்ணுவுக்கு இந்திரனாலோ மற்றவர்களாலே ஆக வேண்டியது ஒன்றுமில்லை. பகவான் விஷ்ணுவைவிட உயர்ந்தவரோ அவனுக்கு சமமானவரோ யாரும் இல்லை என்று வேதமே முழங்குகிறது. அதனால் ஸத்யஸங்கல்பனான விஷ்ணு யாருடைய ஸஹாயத்தையும் நாட வேண்டிய அவசியமில்லை. அந்த வகையில் இந்திரனோ மற்றவர்களோ அவனுக்கு நண்பர்கள் என்ற தகுதியில் இருக்க முடியாது. தன் அடியார்களை பகவான் தன் நண்பர்களாகக் கூறிக் கொள்கிறான் என்றால் அது அவர்களின் தூய்மையான பக்திக்கு மரியாதை செய்யத்தானேயொழிய தகுதி அடிப்படையில் அன்று.

அதனால் நட்பு என்ற முறையில் விஷ்ணு இந்திரனுக்காகவே உலகை மூவடிகளால் அளந்தார். அதனால் அசுரர்களால் அபகரிக்கப்படவிருந்த இந்திரனுடைய செல்வம் மறுபடி இந்திரனுக்கே கிடைத்தது. இந்திரனுக்காகவே பகவான் தன் பரந்த அடிகளை உலகங்களின் மீது வைத்ததால் 'பரந்த அடிவைப்பவர்



களே' (உருக்ரமா) என்று இந்திரனையும் சேர்த்தே சொல்கிறது இம்மந்திரம். ஒருவன் தன் நண்பனின் உதவி கொண்டு ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துக் கொள்கிறான். அவனையும் அவன் நண்பனையும் பார்த்து, 'நீங்கள் பெரியகாரியத்தை செய்யக் கூடியவர்கள்' என்று மூன்றாமவன் ஒருவன் சொன்னால், அவ்விருவரில் நண்பன் உதவியோடு காரியசாதகம் பெற்றவன், அப்பெரிய காரியத்தை அவனே செய்தான் என்று ஆகிவிடாது. பிறர் உதவி கொண்டு ஒரு பெரிய காரியத்தை ஒருவன் சாதித்துக் கொண்டாலும் பொதுவாக அவனை 'பெரிய காரியத்தை செய்தவன்' என்றே அழைப்பதுண்டு. அந்த அடிப்படையில் தான் 'பரந்த அடி வைப்பவர்களே' என்று இந்திரனையும் சேர்த்தே அழைக்கிறது வேதம். மந்திரத்தில் கூறப்படும் துதிகளும் பிரார்த்தனைகளும் இந்திரனுக்கும் சேர்த்தே சொல்லப்படுவது போல் தோன்றினாலும், உண்மையில் அந்தத் துதிகளும் பிரார்த்தனைகளும், இந்திரனுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் பகவான் விஷ்ணுவுக்கே உரியவையாகும்.

**இனி இந்த ஸூக்தத்தின் கடைசி மந்ரத்தைப் பார்ப்போம்.**

*வஷட்தே விஷ்ணவாஸ ஆ க்ருணோமி*
*தந்மே ஜுஷஸ்வ ஶிபிவிஷ்ட ஹவ்யம் |*
*வர்த$_4$ந்து த்வா ஸுஷ்டுதயோ கி$_3$ரோ மே*
*யூயம் பாத ஸ்வஸ்திபி$_4$: ஸத$_3$ா ந: ||*

**இதன்பொருள்:** பேரொளி கொண்ட விஷ்ணுவே! வஷட்காரத்தோடு உன்னைக் குறித்து இந்த ஹவிஸை ஹோமம் செய்கிறேன். நான் ஹோமம் செய்த மந்த்ரபூர்வமான அந்த ஹவிஸை நீ புசிக்க வேணும். எனது துதிகள் உன்னை இன்புறுத்தட்டும். எப்போதும் எங்களை நீங்கள் மங்களங்களை அளித்துக் காப்பாற்ற வேணும்.

இம்மந்திரத்தின் முதல் மூன்று வரிகள் விஷ்ணுவை மட்டும் நோக்கிக் கூறப்பட்டவை. கடைசி வரி மட்டுமே இந்திரனையும் விஷ்ணுவையும் சேர்த்துப் பேசுகின்றது. வஷட்காரம் வேள்விகளில் ஒலிக்கும் ஶப்தம். வேள்விகள் மூலம் ஆராதிக்கப்படுபவன்

விஷ்ணு ஒருவனே என்பதை உணர்த்தவே, விஷ்ணுவை நோக்கி துதிகள் கூறப்படுவதோடு ஹவ்யமும் ஸமர்ப்பிக்கப்படுகிறது. அசுரர்களோடு போர் செய்யும் சமயத்தில் இந்திரனோடு சேர்த்தே விஷ்ணு ஸாக்ஷாத்கரிக்கப்பட்டதால் பிரார்த்தனை இருவரையும் நோக்கியே செய்யப்படுகிறது என்பதை உணர்த்தவே மந்திரத்தின் கடைசிவரி குறிப்பிடும் பிரார்த்தனை இந்திரனையும் நோக்கிச் செய்யப்படுவதுபோல் அமைந்துள்ளது. இந்திரனுக்கே மங்களங் களை அருள்பவன் பகவான் விஷ்ணுதான் என்பதால் இந்திரனை நோக்கிச் செய்யப்படும் துதிகளும் பிரார்த்தனைகளும் ஔபசாரிக மாகும். தேவராஜாவான இந்திரனும் அவனுக்குக் கீழ்ப்படிந்து செயல் படும் மற்றைய தேவர்கள் அனைவருமே விஷ்ணுவின் கருணையாலே தங்கள் பதவிகளையும் செல்வங்களையும் பெற்று உய்கிறார்கள் என்பது வேதத்திலேயே தெளிவாக உள்ளதால், வேதத்தில் இந்திரன் முதலிய மற்றை தேவர்கள் அனைவரையும் குறித்துச் செய்யப்படும் துதிகள் பிரார்த்தனைகள் அனைத்துமே ஔபசாரிகமானவையே என்பதும் ஸர்வாத்மாவான பகவான் விஷ்ணுவைக் குறித்துச் செய்யப்படும் துதிகளும் பிரார்த்தனை களுமே முக்யமானவை என்பதும் நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயமாகும்.

**இனி 7-ஆம் மண்டலத்தில் உள்ள 100-ஆவது ஸூக்தத்தைப் பார்ப்போம். இந்த ஸூக்தம் விஷ்ணுவைப் பற்றியது. இந்த ஸூக்தத்தில் மொத்தம் 7 மந்திரங்கள் உள்ளன. அவற்றை ஒவ்வொன்றாக விவரிப்போம். முதல் மந்திரம் பின்வருமாறு:**

*நூ மர்தோ த$_3$யதே ஸநிஷ்யந்யோ*
*விஷ்ணவ உருக$_3$ாயாய த$_3$ாஶத் |*
*ப்ர ய: ஸத்ராசா மநஸா யஜாத*
*ஏதாவந்தம் நர்யமாவிவாஸாத் ||*

**இதன்பொருள்:** ''பெரியோரால் போற்றப்படும் பெரும் புகழ் கொண்ட விஷ்ணுவுக்கு அளிப்பவனும், வேறு எண்ணமில்லா மல் முழுமனதோடு அவனைப் பூஜிப்பவனும், பெரியவனும் மானிடர்களுக்கு நலம் செய்பவனுமான அவனை வணங்குபவனு மான மனிதன் பெருஞ்செல்வத்தை அடைந்தவனாகிறான்.''



எதை அளிப்பவன் என்று விவரிக்காமல் 'அளிப்பவன்' என்று பொதுவாகச் சொன்னதால் அனைத்தையும் அளிப்பவன் என்பது அதற்குப் பொருள். தன்னிடம் உள்ளவற்றையும் தன்னையும் விஷ்ணுவுக்கு அளிப்பவன் என்று அர்த்தம். ''வேறு எண்ணமின்றி முழுமனதுடன்'' என்று சொல்லியிருப்பது முக்கியமானது. அதாவது தேவதாந்தர விஸ்வாஸமின்றி (அந்நிய தேவதைகளிடம் பற்றில்லாமல்) பகவான் விஷ்ணுவின் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டு என்று சொல்லப்படுகிறது. மானிடர்களுக்கு நலம் செய்பவன் என்று கூறப்பட்டுள்ளதால் பூவுலக தர்மத்தைக் காப்பவன் என்பது மறைபொருள். இவ்வளவு பெருமைமிக்க விஷ்ணுவை வணங்குபவன் மிகப்பெரிய பேறு பெற்றவனாகிறான் என்று சொல்லப்படுகிறது. தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் தன்னையும் விஷ்ணுவுக்கு அர்ப்பணித்து அநந்யமான சிந்தையோடு அவனை வழிபடுபவன் பெரும்பேறான நித்யமான பரமபதத்தை அடைகிறான். அதுவே பெரும்பேறு பெருஞ்செல்வம் எனப்படுகிறது. மறந்தும்புறந்தொழா, எண்ணத்தோடு விஷ்ணுவை வழிபடுவர்களே பெருஞ்செல்வமான மோக்ஷத்தை அடைகிறார்கள் என்பது இம்மந்திரம் தெரிவிக்கும் பொருள். இம்மந்திரம் யஜுர் வேதம் - 2ஆம் அஷ்டகம் 4-ஆம் பிரச்னத்திலும் வருகிறது.

இனி இந்த ஸூக்தத்தின் இரண்டாம் மந்திரத்தை பார்ப்போம்.

*த்வம் விஷ்ணோ ஸுமதிம் விஶ்வஜந்யா*
*மப்ரயுதாமேவயாவோ மதிம் த$_3$ா: |*
*பர்சோ யத$_2$ா ந: ஸுவிதஸ்ய*
*பூ$_4$ரேரஶ்வாவத: புருஶ்சந்த்$_3$ரஸ்ய ராய: ||*

**இதன்பொருள்:** 'விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் விஷ்ணுவே! ஸகலஜீவராசிகளுக்கும் நன்மையளிப்பதும், தோஷங் களற்றதுமான ஞானத்தை எங்களுக்கு அளிப்பாயாக. அத்துடன் பெரியதும், அனைவருக்கும் இன்பமளிப்பதும் குதிரைகள் உள்ளது மான செல்வத்தை நாங்கள் எதனால் அடைய முடியுமோ, அந்த உனது கருணையை எங்கள் மீது செலுத்துவாயாக'.

சென்ற மந்திரத்தில் பரம புருஷார்த்தமான முக்தியை விரும்புபவனின் லக்ஷணம் என்ன என்று விவரிக்கப்பட்டது. இம்மந்திரத்தின் முற்பகுதியில் தோஷமற்றதும் எல்லோருக்கும் நலமளிப்பதுமான ஞானம் பகவானிடம் வேண்டப்படுகிறது. பிற்பகுதியில் இவ்வுலகச் செல்வத்திற்காக பகவானின் கருணை வேண்டப்படுகிறது. 'குதிரைகள் உள்ளதுமான' (அஶ்வாவத:) என்பதால் இங்கு வேண்டுவது இவ்வுலகச் செல்வம் என்பது தெளிவாகத் தெரிகிறது. பகவான் விஷ்ணு இம்மைச் செல்வம், மறுமைச் செல்வம் அனைத்தையுமே வழங்கக் கூடியவன் என்பது இதனால் விளங்குகிறது. அத்துடன் இந்த மந்திரத்தின் முற்பகுதியில் ஞானத்தை வேண்டிப்பிரார்த்திப்பதற்கு, அவன் அருளால் கிடைக்கும் அபரிமிதமான இம்மைச் செல்வத்தை பயன்படுத்த வேண்டிய முறையைப் பற்றிய ஞானத்தை வேண்டுவது என்பதே அதன் பொருள். அபரிமிதமான இம்மைச் செல்வத்தை பகவானின் அருளால் அடைந்தாலும் அச்செல்வத்தை தீயவழியில் பயன்படுத்தினால் அதுவே அதை அடைந்தவனின் ஆத்மநாசத்திற்குக் காரணமாகிவிடும்.

ஆகவே அதை நல்ல வழியில் பயன்படுத்தக் கூடிய ஞானத்தையும் அவனேதான் வழங்க வேண்டும். அந்த ஞானமே அந்தச் செல்வத்தை நல்வழியில் பயன்படுத்தத் தூண்டும். அத்துடன் அந்தச் செல்வம்தரும் மயக்கத்தால் எப்போதும் மூழ்கிக்கிடைக்காமல் அதன் அநித்யத்தன்மையை உணர்ந்து, பரலோகம் பற்றி நினைக்கவும் வழி செய்யும். இம்மைச் செல்வத்தையும், ஞானத்தையும் ஒரேநேரத்தில் பகவானிடம் வேண்டுவதாக அமைந்துள்ள இந்த மந்திரம் மிக முக்கியமானது. இம்மந்திரம் தரும் இரு முக்கியமான அர்த்தங்கள்:- எதை வேண்டியும் மற்ற தெய்வங்களை நாட வேண்டிய அவசியம் இல்லை. மோக்ஷத்தைக் கொடுப்பதோடு, எல்லா இம்மைச் செல்வங்களையும் வழங்கக் கூடியவன் பகவான் விஷ்ணு. அவன் அருளால் பெற்ற இம்மைச் செல்வத்தை அவனது கைங்கர்யத் திற்கே (அவனது உகப்பிற்காகவே) பயன்படுத்த வேண்டும். அந்த எண்ணத்தை வளர்க்கும் ஞானமே மந்திரத்தின் முற்பகுதியில் வேண்டப்படுகிறது. இம்மந்திரத்தில் இடம் பெற்றுள்ள 'மதி' என்ற சொல் 'ஞானம்' என்ற பொருளிலும் 'ஸுமதி' என்ற சொல்



பகவானின் கருணை என்ற பொருளிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**இனி மூன்றாவது மந்திரத்தைப் பார்ப்போம்.**

*த்ரிர்தே₃வ ப்ருதி₂வீமேஷ ஏதாம்*
*வி சக்ரமே ஶதர்சஸம் மஹித்வா*
*ப்ரவிஷ்ணுரஸ்து தவஸஸ்தவீயாந்*
*த்வேஷம் ஹ்யஸ்ய ஸ்த₂விரஸ்ய நாம*

**இதன் பொருள்.** தேவனான விஷ்ணு தன் மூன்று அடிகளால் ஒளிமிகுந்த இப்பூமியை அளந்தான். வலியவர்களுக்குள் மிகுந்த வலிமை உள்ளவனான விஷ்ணு எங்கள் தலைவனாக இருக்க வேண்டும். என்றும் அழியாது நிலைத்திருப்பவன் அந்த விஷ்ணு. அவனது பெயர் புகழ் உள்ளது.

பூமியிலிருந்து உலகை அளக்க ஆரம்பித்தபடியாலே மூவடியால் பூமியை அளந்தான் என்று பொதுவாகச் சொல்லப் பட்டது. இயற்கை எழிலால் ஒளிபெற்றுத் திகழ்வதால் ஒளிமிகுந்த பூமி என்று சொல்லப்படுகிறது. 'தலைவன்' என்ற சொல்லுக்குத் தகுதியுள்ளவன் யார் என்று இம்மந்திரம் விளக்குகிறது. உலகில் சிலர் யாரோ ஒருவனைத் தங்கள் தலைவன் என்று கூறிக் கொள்கிறார்கள். 'தலைவன்' என்பதற்கு அவன் தகுதியுடையவன் தானா என்றுகூட, ஆலோசிக்காமல் வெறும் அபிமானத்தால் அப்படி அழைத்துக் கொள்கிறார்கள். எவனுக்கு மேல் உயர்ந்தவனே வலியவனோ எவனும் இல்லையோ அவனே தலைவன் என்ற சொல்லுக்குத் தகுதியுள்ளவன். அந்த வகையில் பகவான் விஷ்ணு ஸர்வேச்வரனாகையாலே அவனே 'தலைவன்' என்ற சொல்லுக்கு உண்மையான தகுதியுள்ளவன். உலகத்தில் உள்ள எல்லாப் பெரிய சக்திகளுமே பகவான் விஷ்ணுவின் சக்தியின் ஒரு சிறு அம்சமே என்பது வேதத்தால் அறியமுடிகிறது. தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்று சொல்லப்படும் இந்திரனே பகவான் விஷ்ணுவின் உதவியால்தான் வாழ்கிறான். மிகுந்த வலிமை வாய்ந்த தேவதையாகச் சொல்லப்படும் ருத்ரன் கூட பகவான் விஷ்ணுவை ஆராதித்தே தன் சக்தியைப் பெற்றான் என்று வேதத்திலேயே சொல்லப்படுகிறது. அதனால்தான் 'வலியவர்களுக்குள் மிகுந்த

வலிமை பெற்றவன்' (தவஸஸ்த வீயாந்) என்று விஷ்ணு இம்மந்திரத்தில் அழைக்கப்படுகிறார். மேலும் பகவான் விஷ்ணு பரம்பொருள் என்பதால் அவன் ஸர்வஶக்திமானாவான். அவனுக்கு மேல் எந்த ஒரு உயரிய சக்தியும் இல்லை என்பது இங்கு தாத்பர்யம். மக்கள் தாங்கள் வழிபடும் மற்ற தேவதைகளை எல்லாம் பலம் மிகுந்தவைகளாகக் கருதி வழிபடுகிறார்கள். அது அந்த தேவதைகள் மீது அவர்கள் கொண்ட ஈடுபாட்டால்தான். அந்த தேவதைகளை விட வலிமை வாய்ந்த, அந்த தேவதைகளுக்கெல்லாம் சக்தியை வழங்கக் கூடிய மிகப்பெரிய பரம சக்திவாய்ந்த பரமேச்வரன் விஷ்ணு என்பதே இம்மந்திரம் வழங்கும் செய்தி. அப்படிப்பட்ட விஷ்ணுவையே தலைவனாக அடைய வேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது இந்மந்திரத்தில். அதனால் நமக்கெல்லாம் ஒப்புயர்வற்ற உயர்ந்த தலைவன் பகவான் விஷ்ணு ஒருவனே என்பதே வேதம் காட்டும் உண்மை.

விசிஷ்டாத்வைதத்தின் ஶேஷ ஶேஷி பாவத்திற்கு இம்மந்திரமே அடிப்படை. பூவுலகில் பணம் பதவி படைத்தோரையும் தேவருலகில் உள்ள தேவர்களையும் 'தலைவன்' என்ற சொல்லால் அழைத்துப் பெருமைப்படுவதில் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் அவர்கள் எல்லோருமே சராசரி ஜீவராசிகள்தான். தாங்கள் செய்த ஜென்மாந்தர புண்ய கர்மங்களால் பூவுலகில் சிலர் பணம் பதவிகளோடும், தேவருலகில் தேவர்களாகவும் பிறப்பெடுக்கிறார்கள். மற்றபடி அவர்களும் ஜீவாத்மாக்கள்தான். இதை உணர்ந்தவன் பரமாத்மாவும் ஸர்வாத்மாவுமான பகவான் விஷ்ணுவைத்தவிர வேறுயாரையும் தலைவனாக ஏற்றுக்கொள்ள மாட்டான். பூவுலகில் பணம் பதவி படைத்தோரையோ, மற்ற தேவர்களையோ லட்சியம் செய்யமாட்டான். பகவான் விஷ்ணு பரமனாகையால் அவனைத் தலைவனாகக் கொண்டவன் யாருக்கும் பயப்பட மாட்டான் என்பது கருத்து.

''அழியாது என்றும் நிலைத்திருப்பவனான விஷ்ணுவின் நாமம் புகழுள்ளது'' என்று கூறப்படுகிறது. தேச காலாதிகளுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளான விஷ்ணுவுக்கு என்றும் அழிவில்லை என்கிறது வேதம். உலகத்தின் தோற்றத்தின்போதும் முடிவின்போதும் இருப்பவன் அவன் ஒருவனே. ஒன்றும் தோன்றாதபோதும்



அவன் மட்டுமே இருந்தான். தோன்றியவை அனைத்தும் அழிந்தபின்னும் அவன் மட்டுமே இருந்தான். பரம்பொருள் தவிர இங்குள்ள அனைத்தும் அழியக்கூடியவையே. அதனால் தான் பரம்பொருளான விஷ்ணு என்றும் அழியாது நிலைத்திருப்பவன் என்று குறிப்பிடுகிறது இம்மந்திரம். பகவான் விஷ்ணுவைத் தவிர மற்ற எல்லோருமே அழியக் கூடியவர்கள் என்பதால் அவர்களின் பெயர்கள் எல்லாம் புகழ் உள்ளவை அன்று. இந்திரன் முதலிய தேவர்களேகூட எந்த ஒரு காரியத்தையும் தன்னிச்சையாகச் செய்து பெருமைபெற முடியவில்லை. பகவான் விஷ்ணுவின் உதவியின்றி இந்திரன் தன் பதவியில் நீடிக்க முடியாது.

தேவராஜனான இந்திரனுக்கே இந்தநிலை எனில் மற்ற தேவர்களின் நிலைபற்றிச் சொல்லவும் வேண்டுமோ! இந்த தேவர்கள் எல்லாம் பரம்பொருளான பகவான் விஷ்ணுவின் கட்டளையை ஏற்று நடப்பவர்களாகையால் இவர்களின் பெயர்களுக்கும் பெருமையோ, புகழோ, கௌரவமோ கிடையாது. பூவுலகில் சிலர் தங்களின் புகழின், பெயரும் நீண்டகாலம் நீடிக்க வேண்டும் என்பதற்காக ஏதேதோ செய்கிறார்கள். ஒரு மரம் நடுபவன்கூட அவ்விடத்தில் தன் பெயரைப் பொறித்த கல்வெட்டை வைக்கிறான். இப்படி எத்தனையோ வழிகளில், தங்கள் பெயரை உலகம் நெடுங்காலம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் உயர்மட்டத்தில் உள்ளவன் முதல் அடிமட்டத்தில் உள்ளவன்வரை தங்களது நிலைக்குத் தக்கபடி புகழ்போதை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

பூவுலகில் பூவுலக சாதனைகளுக்காக புகழ் பெற்றவர்களாகச் சொல்லப்படுபவர்களின் பெயர்களை உலகம் ஒரு நூற்றாண்டுகாலம் நினைவில் வைத்துக் கொள்வதே பெரிய விஷயம். பல நூற்றாண்டுகளுக்குப் பின் அவர்களது பெயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கிவிடும். அழியும் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் ஏற்படும் புகழும் பெருமையும் காலவெள்ளத்தில் அழியக் கூடியது. இதை உணர்ந்தவன் இவ்வுலகில் தனக்குப் புகழ்வேண்டும், பெருமை வேண்டும் என்று நினைக்க மாட்டான். புகழுக்காகவும், பெருமைக்காகவும் எதையும்

செய்யமாட்டான். என்றும் அழிவில்லாத பகவான் விஷ்ணு ஒருவனே புகழுக்கும் பெருமைக்கும் உரியவன் அவன் பெயர் ஒன்றே புகழுடையது. அவனே துதிகளுக்குரியவன் என்று தெளிந்து பற்றற்று தன் கடமைகளை செவ்வனே செய்து கொண்டிருப்பான். ''அழிவற்றவனான அவன் பெயரே புகழ் கொண்டது'' (**த்வேஷம் ஹ்யஸ்ய ஸ்த$_2$விரஸ்ய நாம**) என்ற மந்திரப்பகுதி இவ்வளவு அர்த்தங்களை உட்கொண்டதாகும். பகவான் விஷ்ணுவே பெரும் புகழ் உள்ளவன் என்பதும், அவனே அழியாத பரமன் என்பதும், ஸர்வ வல்லமைமிக்க ஸர்வேச்வரன் என்பதும், அவன் ஒருவனே தேவமநுஷ்யாதிகள் உள்ளிட்ட அனைத்து ஜீவர்களுக்கும் தலைவன் என்பதும் இம்மந்திரத்தின் மூலம் அறிய வேண்டிய முக்கிய அர்த்தங்களாகும். 'இம்மந்திரம் யஜுர்வேதம் 2ஆம் அஷ்டகம் 4ஆம் ப்ரச்னத்திலும் இடம் பெற்றுள்ளது.

**அடுத்து நான்காவது மந்திரம் பின்வருமாறு:**

*வி சக்ரமே ப்ருதி$_2$வீமேஷ ஏதாம்*
*க்ஷேத்ராய விஷ்ணுர் மநுஷே த$_3$ஶஸ்யந் |*
*த்$_4$ருவாஸோ அஸ்ய கீரயே ஜநாஸ*
*உருக்ஷிதிம் ஸுஜநிமா சகார ||*

**இதன்பொருள்:** இந்த விஷ்ணு மநுவுக்கு இடமளிக்க விரும்பி பூமியை அளந்தான். அவனைத் துதிக்கும் மக்கள் நிலைத்திருக்கி றார்கள். சிறந்த பிறவியுடைய அவன் தன்னைத் துதி செய்வோருக்கு பெரிய வசிப்பிடத்தைக் கொடுக்கிறான்.

சென்ற மந்திரங்களில் பகவான் விஷ்ணு உலகளந்த விஷயமே அடிக்கடி பேசப்பட்டது. இந்த மந்திரத்தில்தான் பகவான் உலகளந்ததற்கான காரணம் சொல்லப்படுகிறது. மநுவுக்கு இடமளிக்கவே பகவான் உலகளந்ததாகக் கூறப்படுகிறது. மநுக்களே தேவ, ரிஷி, கந்தர்வ மநுஷ்யாதிகள் எல்லாம் அடங்கிய இப்பிரபஞ்சத்தை ஆளக்கூடியவர்கள். மநுக்கள் மொத்தம் 14பேர். கிரமப்படி அவர்கள் இவ்வுலகை ஆண்டு வருகிறார்கள். இந்திராதி தேவர்களும் அவர்களது ஆட்சிக்குட்பட்டவர்களே. ஒவ்வொரு மநுக்களின் ஆட்சிகாலத்தையும் மந்வந்தரம் என்று கூறுவர். ஒரு மன்வந்தரத்தில் அசுரர்கள் உலகை ஆக்ரமிக்க நினைத்தபோது



தேவர்கள் கவலையடைந்தனர். அப்போது ஆட்சியிலிருந்த மநுவின் ஆட்சிக்குரிய இடத்தை அசுரர்களிடமிருந்து பிடுங்கி மநுவிற்கே கொடுத்து தேவர்களை மகிழ்விக்கவே பகவான் தன் மூவடியால் உலகை அளந்தான் என்பதைக் குறிப்பிடவே ''மநுவுக்கு இடமளிக்க விரும்பி உலகை அளந்தான்'' என்று சொல்லப்பட்டது.

இம்மந்திரம் நிலைத்திருக்கும் மக்கள் யார் என்பதைக் குறிப்பிடுகிறது. பகவான் விஷ்ணுவைத் துதிக்கும் மக்களே நிலைத் திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சென்ற மந்திரத்தில் அழியாத பரமனான அந்த விஷ்ணுவின் பெயரே புகழுள்ளது என்று காட்டப்பட்டது. இம்மந்திரத்தில் அப்பரமனது அடியார்களே நிலைத்திருப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதாவது பரம்பொருளான விஷ்ணுவின் பக்தர்களே காலங்கடந்து அழியாது நிலைத்திருக்கிறார்கள். பெரும்புகழ் பெற்ற அழியாத பரவஸ்து வான விஷ்ணுவின் பக்தர்களே பெரும்புகழோடு உலகில் என்றும் நிலைத்திருக்கிறார்கள். மற்றவர்கள் நிலைப்பதில்லை என்று அர்த்தம். சிறந்த பிறப்பையுடைய பகவான் விஷ்ணு தன்னைத் துதிப்பவர்களுக்கு மிகப்பெரிய இடத்தைக் கொடுக்கிறான் என்று சொல்லப்படுகிறது. பரம்பொருளுக்கு அவதார ரூபமான பிறப்பு உண்டு என்பதையும், அவனது பிறப்பு கர்மத்தால் ஏற்படுவதன்று என்பதையும், அவன் ஸௌலப்ய குணத்தால் தன் அடியார்களையும் தர்மத்தையும் காக்க அவதாரம் செய்கிறான் என்பதையும் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். கர்மத்தின் காரணமாகப் பிறப்பெடுக்கும் மற்ற தேவ மநுஷ்யாதிகளின் பிறப்புகளுக்கும் பரமனின் அவதார ரூபமான பிறப்புக்கும் பெரிய வித்யாசம் உண்டு என்பதைத் தெளிவு படுத்தவே அவனுடைய பிறப்பு, சிறந்த பிறப்பு (ஸுஜநிமா) என்று குறிப்பிடுகிறது வேதம். தன்னைத் துதிப்பவர்களுக்கு, அதாவது தன் பக்தர்களுக்கு பெரிய இடத்தைக் கொடுக்கிறான் என்று சொல்லப்படுகிறது. அதாவது தனது பக்தர்களுக்கு பகவான் விஷ்ணு பெருநிலம் என்று சொல்லப்படும் மோக்ஷமான பரமபதத்தை அளிக்கிறான் என்று சொல்லப்படுகிறது. பெரிய நிலம் என்று ஏன் சொல்லப்பட்டதெனில் மற்ற தேவர்களின் உலகங்களை விட எல்லாவகையிலும் உயர்ந்தது, விஷ்ணுவின் பரமபதம். எல்லா விதமான எல்லைகளையும் கடந்த, எல்லையற்ற பரமனின் ஸ்தானத்திற்கும் எல்லை இருக்காதல்லவா? அதனால் தான் பெரிய

நிலம் என்று அதைக் குறிப்பிடுகிறது வேதம். இம்மந்திரம் யஜுர் வேதம் 2ஆம் அஷ்டகம் 4ஆம் ப்ரச்னத்திலும் உள்ளது.

**அடுத்து இந்த ஸூக்தத்தில் உள்ள ஐந்தாவது மந்திரம்.**

*ப்ர தத்தே அத்$_3$ய ஶிபிவிஷ்ட நாமார்ய*
*ஶம்ஸாமி வயுநாநி வித்வாந் |*
*தம் த்வா க்$_3$ருணாமி தவஸமதவ்யாந்*
*க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே ||*

**இதன்பொருள்:** ''ஶிபிவிஷ்டனே! உனது இந்த நாமத்தை, வேள்வித் தலைவனும் சரியான நெறிகளை அறிந்தவனுமான நான் புகழ்ந்து துதிக்கிறேன். பெரியவனாயும், உலகங்களுக்கப்பால் வசிப்பவனாயும் உன்னை சிறியவனான நான் துதிக்கிறேன்.''

வேள்வி செய்யும் கர்த்தா, தலைவன் என்று அழைக்கப்படுவதுண்டு. இங்கு மந்த்ர த்ரஷ்டாவான ரிஷி வேள்வி செய்யும் கர்த்தா என்ற நிலையில் தன்னைத் தலைவன் என்று அழைத்துக் கொள்கிறார். மேலும் ''சரியான நெறிகளை அறிந்துள்ளவனான நான் உன் திருநாமத்தைப் புகழ்ந்து துதிக்கிறேன்'' என்கிறார் ரிஷி. ''சரியான நெறிகள்'' (வயுநாநி) என்பது பகவான் விஷ்ணுவின் பரத்வம் பற்றிய அறிவும், அவனது நாமத்தின் பெருமையும், அவனை அடைய உதவும் வழிகளும் ஆகும்.

விஷ்ணுவின் மஹத்தான பெருமைகளையெல்லாம் மிகச் சிறப்பான முறையில் மேலே சொல்லப்பட்ட மந்திரங்களால் தான் ஸாக்ஷாத்கரித்தபடி சொல்லியிருக்கிறார் ரிஷி. அதனால் தான் ''சரியான நெறிகளை அறிந்த நான்'' என்று தன்னைக் கூறிக் கொள்கிறார். பகவான் விஷ்ணுவின் மஹத்வத்தை அறிந்தவர்க்கே அவரது நாமத்தின் மஹிமையும் புரியும். இதற்கு முன் உள்ள ஒரு மந்திரத்திலே அவனுடைய நாமமே புகழுள்ளதென்று கூறப்பட்டதன்றோ. புகழுள்ள அவனுடைய நாமத்தின் சிறப்பையே இம்மந்திரத்தில் புகழ்ந்து துதிப்பதாகக் கூறுகிறார் ரிஷி. பகவான் விஷ்ணு பெரியவனென்றும் உலகங்களுக்கு அப்பால் வசிப்பவனென்றும் இங்கு சொல்லப்படுகிறது. அகில உலகிற்கும் அவனே ஸர்வேச்வரனாகையால் அவன் ஒருவனே பெரியவன். ப்ராக்ருத உலகங்களான பூமியையும், வானுலகையும் தாண்டி இருக்கும்



அப்ராக்ருதமான உலகம் விஷ்ணுவின் பரமபதம். பூவுலகமும் அதற்கு மேலுள்ள வானுலகமான தேவர்களின் உலகங்களும் ப்ரக்ருதி ஸம்பந்தமுடையவையாகையால் அழியக் கூடியவை. ஆனால் அழிவற்ற பரம்பொருளான பகவான் விஷ்ணுவோ ப்ராக்ருத ஸம்பந்தமுள்ள உலகங்களுக்கெல்லாம் அப்பால் உள்ள அப்ராக்ருதமான திவ்ய லோகத்தில் வசிக்கிறார்.

அதனால்தான் **'ரஜஸ: பராகே'** என்று சொல்லப்பட்டது. **'ரஜஸ:'** என்றால் ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள உலகங்கள் என்று பொருள். மேலும் ப்ராக்ருத குணமான ரஜோகுணத்தைக் கடந்து இருப்பவன் பகவான் விஷ்ணு என்றும் அர்த்தம். ரஜோகுணத்தை இங்கே குறிப்பிட்டதால் அதன் துணை குணமான தமோ குணத்தையும் அது மறை பொருளாகக் குறிக்கிறது என்பது தாத்பர்யம்.

அதாவது பகவான் விஷ்ணு ப்ராக்ருத குணங்களான ரஜஸ் தமோ குணங்கள் இல்லாத சுத்த ஸத்வமான உலகில் வசிக்கிறான் என்றும் பொருள். ப்ராக்ருத உலகங்களான பூவுலகம் மற்றும் தேவர்களின் உலகங்கள் அனைத்துமே இந்த ரஜஸ்தமோ குணங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவை. அதனாலேயே இவ்வுலகங்களையெல்லாம் தாண்டி உயர்ந்ததும், நித்யமானதும் சுத்த ஸத்வமயமானதுமான உலகில் பகவான் விஷ்ணு வசிப்பதாகக் கூறப்படுகிறது. ரஜோ தமோ குணங்களின் வாசனை சிறிதும் இல்லாத, முழுவதும் சுத்த ஸத்வமயமான உலகமே பகவானது வசிப்பிடமான பரமபதம் என்பதை இம்மந்திரத்திலிருந்து அறிய முடிகிறது.

**இனி ஆறாம் மந்திரத்தைப் பார்ப்போம்.**

*கிமித்தே விஷ்ணோ பரிசக்ஷ்யம் பூ$_4$த்ப்ர*
*யத்$_3$வவக்ஷே ஶிபிவிஷ்டோ அஸ்மி |*
*மா வர்போ அஸ்மத$_3$ப கூ$_3$ஹ ஏதத்$_3$*
*யத$_3$ந்யரூப: ஸமிதே$_2$ ப$_3$பூ$_4$த$_2$ ||*

**இதன்பொருள்:** விஷ்ணுவே! நீ உன்னை 'ஶிபிவிஷ்டன்' என்று எங்களிடம் அறிமுகப்படுத்தியபோது அதில் என்ன குறை

யிருக்கிறது? அதுவே உன்னை புலப்படுத்திவிடுமே. நீ யுத்தத்தில் வேறு உருவத்தோடு தோன்றி யுத்தம் செய்தாய். விரும்பத்தக்கதான உன் இயற்கை உருவை எங்களிடமிருந்து மறைக்காதே.

'ஶிபிவிஷ்டன்' என்றால் ஒளிக்கிரணங்களால் சூழப்பட்ட வன் என்று பொருள். ஒருமுறை விஷ்ணு வேறு உருவத்தில் வசிஷ்டருக்கு யுத்தத்தில் உதவினார். அப்போது பகவான் வேறு உருவத்தில் இருந்தாலும் வசிஷ்டர் அது பகவான் விஷ்ணு தான் என்பதைப் புரிந்து கொண்டார். புரிந்து கொண்டாலும் வேறு உருவத்தோடு இருக்கும் பகவானிடம் 'நீ யார்?' என்று கேட்டார் வசிஷ்டர். அதற்கு 'நான் ஶிபிஷ்டன்' என்று பதிலளித்தார் பகவான். அதைக்கேட்ட வசிஷ்டர் ''உன்னை மறைப்பதற்காக நீ இப்படிக் கூறினாலும், நீ யுத்தத்தில் செய்த அத்யாச்சர்யமாக செயல்களும் நீ சொன்ன ஶிபிவிஷ்டன் என்ற பெயரும் உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டன. 'ஶிபிவிஷ்டன்' என்பது உன் தகுதிக்குப் பொருந்தாத பெயரில்லை. (ஶிபிவிஷ்டன் - என்றால் ஒளிமிகுந் தவன் ஒளிக்கிரணங்களால் சூழப்பட்டவன் - ஒளியை ஆடையாகக் கொண்டவன் என்று பொருள்). ஆகவே நீ விஷ்ணுவே என்பதைத் தெரிந்து கொண்டேன். ''நீ உனது மங்களகரமான காணத்தக்க உருவத்தை மறைக்காமல் காண்பிக்க வேணும்'' என்று கேட்டுக் கொண்டார். தன் உண்மையான உருவத்தை மாற்றி வேறு உருவில் விஷ்ணு யுத்தத்தில் வசிஷ்டருக்கு உதவிய செய்தியைக் கொண்ட ஒரு மந்திரம் சாமவேதத்திலும் காணப்படுகிறது.)

(தொடரும்)

---

**இதழ் 171இல் பிழைதிருத்தம்:** கணிப்பொறியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏற்பட்ட கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்திக் கொள்ளவும்.

**பக்கம்** 74 - **வரி** 31 - **பிழை:** 'ஆயோவியாஸ'. **திருத்தம்:** 'ஆயோவியாய'.
**பக்கம்** 77 - **வரிகள்** 18,20,22,29,33. **பிழை:** 'கடுப$_4$ம்'.**திருத்தம்:** 'ககுப$_4$ம்'.
**பக்கம்** 78 - **வரி** 19 - **பிழை:** 'ஸ்பரிஸமே'. **திருத்தம்:** 'ஸ்பர்ஶமே'.
**பக்கம்** 78 - **வரி** 26 - **பிழை**: தரித்து நிற்பதாலும். **திருத்தம்:** தரித்து நிற்பதாகச்.
**பக்கம்** 79 - **வரி** 10 - **பிழை:** அரசனின், **திருத்தம்:** 'அசுரனின்'. ✶✶✶

# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

*இதழ் 171இன் தொடர்ச்சி. கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ.கிருஷ்ணமாசார்யர்.*

**ஈரோடு ரயில் நிலைய உயர் அதிகாரியுடனான மோதல்:**

ஈரோடு டெப்போ ரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைந்திருந்தது என்பதை முன்னமேயே குறிப்பிட்டிருந்தேன். ஈரோட்டில் ரயில்நிலையம் மேடான பகுதியில் அமைந்திருந்த தால் எந்தவித மின்சார மோட்டார் உதவியின்றி ஆயில் வேகன்களில் வரும் எண்ணெய்யை இறக்கிவிடலாம். ஒவ்வொரு நாளும் ஆயில் வேகன் சைடிங்கில் முப்பதுக்கும் மேற்பட்ட வேகன்கள் வந்து நிற்கும். இவற்றில் பெரும்பாலானவை இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு, கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அனுப்பப்படுவனவாகும். கொச்சியில் இன்று மாலை நிரப்பப்படும் எண்ணெய் வேகன்கள் அடுத்தநாள் காலை ஈரோட்டை வந்தடைந்துவிடும். எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் சுத்திகரிக்கப்படும் டீசல் அல்லது மண்ணெண்ணெய் சில நாட்களில் அதிக அளவில் ஈரோட்டை வந்தடையும்.

சில நாட்கள் நிரப்பி வைக்கப்படும் டேங்குகளில் இடமிருக்காது. அன்றையை தினம் விற்பனையான பிறகு தான் வேகன்களை இறக்க முடியும். ஒரு நாள் இதுமாதிரியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஏதோ ஒரு வழியாக ஆயில் சைடிங்கில் வைக்கப்பட்டு இருந்த வேகன்களை இறக்கியபிறகு, அடுத்த நாள் காலை வரை Free Time எனப்படும் ‘டெமரேஜ்’ இல்லாத நேரம் இருந்ததால் வேகன்கள் காலி செய்யப்பட்டும் இந்த ஆயில் வேகன்களை ரயில்வே நிர்வாகம் இழுத்துச் செல்லலாம் என்ற அறிவிப்பு அடங்கிய Release Memo

கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் நான் Release Memo கொடுத்தால் உடனே மேலும் 30 வேகன்கள் சைடிங்கில் நிறுத்தப்படும். அவற்றை காலி செய்வதற்கு மூன்று நாட்கள் வேண்டும். ஆனால் ஸ்டேஷன் மாஸ்டர் ஜார்ஜ் என்பவர் நான் Release Memo கொடுக்காத வேகன்களை இழுத்துச் சென்று விட்டார். அவை அடுத்த நாள் காலை பால்காட் ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்தன.

நான் ஒவ்வொரு வேகனிலும் ஐம்பது செ.மீ. எண்ணெய் இருப்பதாலும், நான் Release Memo கொடுக்காமல் வேகன்களை இழுத்துச் சென்றது விதிகளின்படி குற்றம் என்றும் கடிதம் கொடுத்தேன். உண்மையில் அவ்வாறு இழுத்துச் செல்லப்பட்ட அந்த வேகன்களில் ஒருசொட்டு எண்ணெய் கூட இல்லை. எனக்கு புதுவேகன்களை இறக்குவதற்கு மூன்று நாள் அவகாசம் தேவை. ஆகவே இந்த நாடகம் அரங்கேறியது. மேலதிகாரிகளிடம் ஜார்ஜ் என்ன முறையிட்டாரோ எனக்குத் தெரியாது. அன்று மாலை காலி வேகன்கள் சைடிங்கில் மீண்டும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. அதற்கு அடுத்தநாள் காலை எண்ணெய் அனைத்து வேகன்களிலும் இருந்து இறக்கப்பட்டு விட்டது என்ற Release Memo கொடுக்கப்பட்டது. அதன்பிறகு புது ஆயில் வேகன்கள் சைடிங்கில் வைக்கப்பட்டன. இவ்வாறு ஜார்ஜ் செய்ததற்கு விளக்கம் கேட்டு, துறைமீதான நடவடிக்கை அவர்மேல் ரயில்வே நிர்வாகத்தால் எடுக்கப்பட்டது. அனைவரும் பயந்து கொண்டிருந்த நிலையில் இந்தியன் ஆயில் நிர்வாகத்திற்கு ‘டெமரேஜ்’ மூலம் நஷ்டம் ஏற்படாமல் தவிர்த்ததை ஒரு சாதனையாகவே நான் கருதுகிறேன். இது நடந்தது 1975ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலாகும்.

## எமர்ஜென்ஸி - நடந்தது என்ன ?

தமிழ்நாட்டில் எமர்ஜென்ஸிக்கு அதிக அளவில் எதிர்ப்பு காணப்படவில்லை. பெரும்பாலான மக்கள் எமர்ஜென்ஸியை விரும்பி வரவேற்றனர். லஞ்சம் வாங்குவோரிடம் அச்சம் நிலவியிருந்தது. அரசுப்பணிகளில் எவ்விதத் தேக்க நிலைமையும் காணப்படவில்லை. ரயில்கள் குறித்த நேரத்தில் இயக்கப்பட்டன. கட்டுமான சாமான்கள் வீட்டு வாசலில் குறித்த நேரத்தில்



கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. மோசடிக்காரர்கள் கைது செய்யப்பட்டதால் வியாபாரிகள் கலப்படம் போன்ற சமூகத் தீமைகளைச் செய்வதற்கு அஞ்சினர். விலையேற்றி கொள்ளை லாபம் சம்பாதிப்பதையும், செயற்கையான பற்றாக்குறையையும் தவிர்த்தனர்.

தேசிய அளவில் தன்னுடைய வருமானத்தைத் தாமாக முன் வந்து அறிவிக்கும் திட்டம் ஒன்றை நிதியமைச்சர் அறி வித்தார். இத்திட்டத்தின்படி ஒரு வருடத்தில் வருமான வரி மற்றும் சொத்து வரியாக ரூ. 250 கோடி வசூலானது. நெருக்கடி நிலையின் முதல் வருடத்தில் ஏறத்தாழ 2,000 கடத்தல்காரர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். பதுக்கலும் கறுப்புச் சந்தையும் முடிவுக்கு வந்தன. இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் விளைவுகளைக் கண்டு அஞ்சினார்கள். முந்தைய ஆண்டில் 30% ஆக இருந்த பணவீக்கம், 10% ஆகக் குறைந்தது.

அரசு அலுவலகங்களில் அதிகாரிகள் கடமையுணர்வு டனும் அச்சத்துடனும் செயல்பட்டார்கள். நாட்டில் ஆங்காங்கே நடந்த ‘ரெய்டுகள்’ சிறிய மற்றும் பெரிய கடைக்காரர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுத்தன. எப்போது வேண்டுமானாலும் அவர்களும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்ச உணர்வு நிலவியிருந்தது.

## அத்துமீறல்கள்

ஆனால் நெருக்கடி நிலையின் இந்தக் கெடுபிடிகள் எல்லாம் வேறு சிலர் இருந்த திசைப்பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. குறிப்பாக சஞ்சய் காந்தியின் முறைகேடுகளை யாரும் கண்டுகொள்ளவே இல்லை. ஏற்கெனவே மாருதி கார் திட்டம் குறித்து ஏராளமான புகார்கள் எழுந்தன. இப்போது நெருக்கடி நிலை மூலம் சஞ்சய் தனது வளத்தை மாருதி நிறுவனத்தின் வாயிலாகப் பெருக்கிக் கொண்டார். சோனியா காந்தியை மேலாண்மை இயக்குநராகக் கொண்ட ‘மாருதி டெக்னிகல் சர்வீசஸ்’ என்ற நிறுவனத்தின் வழியாக மாருதி கார் நிறுவனத்திற்கு ரூ.10 லட்சத்தை சஞ்சய் பெற்றுக் கொண்டார்.

1975 ஜூன் மாதம் சஞ்சய் இன்னொரு நிறுவனத்தைத் தொடங்கினார். அதன் பெயர் 'மாருதி கனரக வாகனங்கள்' எனப்படும் 'மாருதி ஹெவி இண்டஸ்ட்ரீஸ்'. இது ஒரு சிறு தொழில் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. ரோடு ரோலர்கள் என்றழைக்கப்படும் சாலை உருளைகளைத் தயாரிக்கப் போவதாக அதன் ஆவணங்கள் தெரிவித்தன. மாருதி சிறு கார் திட்டம் தொடங்கியபோது எப்படி சஞ்சய்க்கு கார் தயாரிப்பு குறித்து எதுவும் தெரியாதோ, அதைப்போலவே இப்போது சாலை உருளை தயாரிக்கும் இயந்திரங்கள் குறித்தும் சஞ்சய்க்கு எதுவும் தெரியாது.

இருந்தாலும் இறக்குமதி உரிமங்கள் வைத்திருப்பவர்கள் மூலம் ஃபோர்ட் கார் எஞ்ஜின்களை வரவழைத்து பழங்கால உருளைகளில் பொருத்தி வர்ணம் பூசி புதிய இயந்திரங்களைப் போல் காட்ட முடிந்தது. இவற்றைப் பல்வேறு மாநிலங்களின் பொதுப்பணித்துறைகளுக்கு விற்க முடிந்தது. மாநிலங்களில் ஆட்சி செலுத்தி வந்த காங்கிரஸ் முதல்வர்கள் இந்தச் சாலை உருளைகளை வாங்கினார்கள். ஏனென்றால் அதன் மூலம் அவர்களால் நாட்டு இளவரசராய்க் கருதப்பட்ட சஞ்சயுடன் நெருக்கமான உறவு கொள்ள முடிந்தது.

இறக்குமதி உரிமம் வைத்திருந்த தொழிலதிபர்களும் ஃபோர்ட் எஞ்ஜின்களை இறக்குமதி செய்து சஞ்சயிடம் கொடுப்பதற்கு ஒத்துழைத்தார்கள். ஏனென்றால் இறக்குமதி உரிமத்தைத் தவறாக பயன்படுத்தியதாக சட்டத்தின் கைகளில் சிக்காமல் இருப்பதற்கும் இது உதவியது. இந்த மோசடிகள் எல்லாம் ஷா கமிஷன் விசாரணையின்போது வெளிவந்தன. இருந்தாலும் 1980இல் மீண்டும் இந்திராகாந்தி ஆட்சிக்கு வந்தார். ஷா கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் அவர் பார்த்துகொண்டார்!

கடத்தல்காரர்களுக்கு எதிரான சட்டங்களும் அதிகாரிகளின் தீவிர நடவடிக்கைகளும் சஞ்சயிடம் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. மாருதி நிறுவனத்தில் தன்னுடைய முழு நேரத்தையும் சஞ்சய் செலவழிக்கவில்லை. அவருடைய சிறுகார் திட்டம் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. இந்திரா



காந்தியின் மகன் வேறு என்ன செய்து கொண்டிருந்தார்? நெருக்கடி நிலையின்போது அன்னை இந்திராவுடன் சேர்ந்து ஆட்சி நடத்தத் தொடங்கி விட்டார். சஞ்சய் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ள பிரதமர் அனுமதித்தார்.

## சஞ்சயின் ஐந்து அம்சத் திட்டம்

நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்திராகாந்தியின் 20 அம்சத் திட்டம் போதாதென்றோ என்னவோ சஞ்சய் தனியாக ஓர் ஐந்து அம்ச திட்டத்தை அறிவித்தார்.

1. முதியோர் கல்வியை வளர்ப்போம் (ஒவ்வொருவரும் ஒரு முதியவருக்குக் கற்பியுங்கள் என்பது முழக்கம்).
2. வரதட்சிணையை ஒழிப்போம்.
3. சாதியமைப்பைத் தகர்ப்போம்.
4. சுற்றுச் சூழலை அழகுபடுத்துவோம் (குடிசை ஒழிப்பு மற்றும் மரம் நடுதலுக்கு முன்னுரிமை அளிக்கும் திட்டம்.
5. குடும்பக் கட்டுப்பாட்டில் ஒரு புரட்சித் திட்டம்.

இந்தத் திட்டத்தின் முதல் மூன்று அம்சங்கள் குறித்து அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் நகரங்களை அழகுறச் செய்யவும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் அரசு அதிக ஆர்வம் காட்டியது. அதற்குக் காரணம் சஞ்சய் காந்தி முழுமூச்சில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நடைமுறையை வகுத்துக் கொடுத்தார்.

## கட்டாயக் கருத்தடை

நெருக்கடி நிலையின் அத்துமீறல்களைப் பற்றிப் பேசும்போது, கட்டாயக் கருத்தடை என்ற பெயரில் நடந்தவற்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சஞ்சயின் 5 அம்சத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு குறித்த அம்சம் இருந்தது. எனவே அரசு இந்தத் திட்டத்தில் தீவிரமாக இறங்கியது.

இந்திய விடுதலைக்குப் பிறகு மக்கள் தொகை அதிகரித்தது உண்மைதான். மருத்துவத்துறையில் அறிவியல் முன்னேற்றம் கடந்த காலத்தை விட சிறப்புடையதாய்

அமைந்திருந்தது. சத்தான உணவுமுறை, பொது சுகாதாரத்தில் வளர்ச்சி போன்ற காரணங்களால் நாட்டில் இறப்பு விகிதம் குறைந்தது. இந்தியாவில் மக்கள் தொகை அதிகரிப்புக்கு இது ஒரு முக்கிய காரணம்.

எழுபதுகளின் தொடக்கத்தில் வருடத்துக்கு ஒரு கோடியே இருபது லட்சம் என்ற அளவில் மக்கள் தொகை அதிகரிப்பு இருந்தது. இந்த அதிகரிப்பு சஞ்சய்க்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. இந்தியா ஒரு வல்லரசாக மாற முடியாமல் இருப்பதற்கு ஜனநாயகத்தைப் போலவே, நாட்டின் மக்கள் தொகையும் ஒரு காரணம் என்று அவர் நம்பினார். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே நாடு வளர்ச்சியைக் காண முடியும் என்று கருதினார்.

அப்புறம் என்ன? சஞ்சய் மனத்தில் எழும் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்குத்தானே அமைச்சர்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். சஞ்சையின் மனத்தில் உள்ள அனைத்தையும் நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்களாக வடிவம் கொடுத்தார்கள். இதன் மூலம் அவர்கள் சஞ்சய் மனத்தில் இடம் பிடிக்க முயன்றார்கள்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு எளிய முறையாக அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை தெரிந்தது. ஏராளமான ஆண்கள் பிடித்துவரப்பட்டு 'வாசக்டமி' அறுவை சிகிக்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள். நெருக்கடி நிலை இல்லாத சாதாரண நாட்களில் இதற்குக் கடும் எதிர்ப்பு தோன்றியிருக்கும். ஆனால் அதிகாரிகளுக்கு வரப்பிரசாதமாக நெருக்கடி நிலை அமைந்தது.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்து மக்களை ஊக்கப்படுத்தும் பணியில் இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் முடுக்கிவிடப்பட்டனர். அப்படிப்பட்ட தொண்டர்களில் ஒருவர் ருக்சனா சுல்தானா என்ற மாடல். இவர் சஞ்சயின் நண்பர்களில் ஒருவர். இவர் முஸ்லிம் ஆண்களிடமும், மதகுருமார்களிடமும்கூட குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்தார். டில்லி உள்ளிட்ட நகரங்களில் மற்றவர்களைப் போல, சுல்தானாவுக்கும்



கருத்தடை அறுவை சிகிச்சை மையங்கள் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அத்துமீறல்கள் அனைத்தும் சஞ்சய்க்கு எதிராக வேலை செய்தன. 1977 மார்ச் மாதத்தில் நடந்த பொதுத்தேர்தலில், குடிசை ஒழிப்பால் இடம் பெயர்ந்தவர்களும், கட்டாய அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களும் ஒட்டு மொத்தமாகக் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து வாக்களித்தார்கள். அறுவை சிகிச்சைக்கு ஆட்களைப் பிடித்து வருமாறு அரசு ஊழியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். காவல்துறையும் இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களும், நாடோடிகள், பிச்சைக்காரர்கள் மற்றும் பல ஏழைகளைக் கட்டாயமாகக் கொண்டு வந்து அறுவை சிகிச்சை செய்ய வைத்தனர் என்று ஷா கமிஷன் பதிவு செய்தது. பள்ளி ஆசிரியர்களும் கூடுதல் பணியாக, குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

நெருக்கடி நிலையின்போது டெல்லியில், அரசு சார்பில் கீழ்க்கண்ட விளம்பரம் வெளியிடப்பட்டது.

"FAMILY PLANNING INCENTIVES INCREASED, Men for Vasectomy will get Rs. 75, Women for Tubectomy will get Rs. 75, Motivators will get Rs. 10. Get Sterilised - Motivate others Help Us Check Delhi's Population Growth. Issued by The 'Directorate of Information and publicity, Delhi Administration: Delhi".

## நெருக்கடி நிலையை எதிர்த்துப் போராட்டங்கள்:

தெருக்களிலும் நெருக்கடி நிலைமைக்கு எதிர்ப்பு இருந்தது. நேருவின் பிறந்த நாளான 1975 நவம்பர் 14 அன்று 'லோக் சங்கர்ஷ் சமிதி' என்ற பெயரில் ஓர் அமைப்பு பம்பாயில் ஒரு சத்யாக்கிரகத்தைத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் ஒரு எதிர்ப்பாளர் குழு மக்கள் நிறைந்த ஒரு சந்திப்பில் நின்றுகொண்டு 'சர்வாதிகாரம் ஒழிக, ஜேபி வாழ்க' என்று கோஷமிடும். ஒரு மாதத்துக்குள் 146 பெண்கள் உட்பட 1,359 பேர் கைது செய்யப்பட்டனர். பிற மாநிலங்களுக்கும் எதிர்ப்பு பரவியது. பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், அரசு

அலுவலகங்கள் அனைத்திலும், எதிர்ப்பாளர்கள் கோஷமிட்டுச் சிறை செல்லத் தயாராகும் இடங்கள் ஆயின. ஒரு கணக்கின்படி சத்தியாக்கிரகத்தின் முதல் 3 மாதங்களில் 80,000 பேர்வரை சிறை செய்யப்பட்டனர் என்று சொல்லப்பட்டது.

நெருக்கடி நிலையை எதிர்த்து ரகசிய எதிர்ப்புகளும் தோன்றின. இதில் முக்கியப் பங்காற்றியவர் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் என்ற 1974இல் ரயில்வே வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்திய, தீவிர சோஷலிஸ்ட். அவசர நிலை அறிவிக்கப்பட்டபோது ஃபெர்னான்டஸ் ஒரிஸாவில் கோபால்பூர்-ஆன்-ஸீ என்ற இடத்தில் இருந்தார். சில வாரங்கள் அவர் தலைமறைவாக இருந்து தாடி வளர்த்து, சீக்கியராக மாறுவேடம் பூண்டார். ஊர் ஊராகச் சென்று தோழர்களைச் சந்தித்து, அரசுக் கட்டடங்களைத் தகர்க்கத் திட்டமிட்டார். வெடி பொருள்களைச் சேகரித்து, சேமித்து வைத்து, பாலங்களையும் ரயில் பாதைகளையும் தகர்க்க இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தார். அடிக்கடி மாறுவேடம் பூண்டு மறைவிடங்களிலிருந்து, 'அந்த சர்வாதிகாரி'யை, 'அந்தப் பெண்மணி'யை, 'நேரு வம்சத்தை' தாக்கிக் கடிதங்கள் அனுப்பி, மக்களை அந்த ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழ வற்புறுத்தினார்.

உண்மையில் எந்த குண்டும் வெடிக்கவில்லை. எனினும் இந்திய அரசு ஃபெர்னாண்டஸைப் பிடிக்க முடியாததால் பெருங்கோபத்தில் இருந்தது. பெங்களூரில் இருந்த அவருடைய சகோதரர் லாரன்ஸைப் பிடித்து, மிருகத்தனமாக அடித்து சித்திரவதை செய்தது. அவருடைய நண்பர், நடிகர் சினேக லதா ரெட்டியும் கைது செய்யப்பட்டார். ஈர அறையில் சிறை வைக்கப்பட்டு, சரியான உணவு அளிக்கப்படாததால் அவருடைய ஆஸ்துமா நோய் அதிகமாயிற்று. பரோலில் விடுவிக்கப்பட்ட அவர் சில வாரங்களில் இறந்தார். உள்நாட்டில் தங்கியிருந்தால் கொடுமைகளுக்கு உள்ளாக நேரும் என அஞ்சி ஃபெர்னாண்டஸின் மனைவியும் குழந்தையும் நாட்டைவிட்டு ஓடிப் போயினர். சுமார் ஒரு வருடகால அவசரநிலைக்குப் பிறகு 1976 ஜூன் 10 அன்று, கல்கத்தாவில் ஃபெர்னாண்டஸ் கைது செய்யப்பட்டார்.



## J.B. கிருபளானி கைது செய்யப்படவில்லை ஏன் ?

1976ஆம் ஆண்டு கோடையில் ஆட்சியை எதிர்த்த சில எதிர்ப்பாளர்களில் 90 வயதைத் தாண்டிய ஜேபி. கிருபளானியும் ஒருவர். தம் நண்பர்கள் எல்லாம் சிறைசெல்லும் வாய்ப்பு பெற்றிருக்க, தன்னை மட்டும் விட்டுவிட்டதற்காக அவர் வருந்தினார். ஒரு சூனியக்காரி தெருவில் அனைத்தையும் அழித்துவிட்டுச் போகும் போது ஒரு வீட்டை மட்டும் தொடாமல் விட்டுவிடுவாள் என்ற ஒரு சிந்திப் பழமொழியை நினைவு கூர்ந்தார். 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2, காந்தி பிறந்தநாள் அன்று புதுதில்லியில் அமைந்துள்ள காந்தி நினைவிடத்தில் ப்ரார்த்தனைக் கூட்டத்துக்கு அவர் தலைமை வகித்தார். பலர் பேசினர். பலர் கைது செய்யப்பட்டனர். ஆனால் கிருபளானியை மட்டும் கைது செய்யவில்லை. அவருடைய வயதுக்காக அல்ல, அவருடைய புகழுக்காக. சிவராம காரந்த், மொரார்ஜி தேசாய், ஏன் ஜேபிகூட, கிருபளானியின் அளவுக்கு நாட்டுப்பற்றுக்கான பெருமை பெற்றவர்கள் அல்லர். ஜவஹர்லால் நேருவுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, கிருபளானி, 1917ஆம் ஆண்டு சம்பாரன் சத்யாக்கிரகத்தில் மகாத்மாவுடன் இணைந்தார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவுக்கு சுதந்தரம் கிடைத்தபோது, அவர் காங்கிரசின் தலைவராக இருந்தார். பிறகு மூன்று வெவ்வெறு மாநிலங்கள் அவரைத் தங்கள் பிரதிநிதியாக இந்திய நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தன. அவருடைய தகுதிகள் அப்படிப்பட்டவையாக இருந்ததால், நாட்டின் ஒற்றுமைக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஊறு விளைவிப்பதாக அவரைக் கைது செய்வதற்கு பிரதமருக்கே தர்மசங்கடமாக இருந்திருக்கும்.

1976ஆம் ஆண்டு ஏப்ரலில் கிருபளானி, அரசு சிறை வைத்திருப்பவர்களின் பெயர்களை வெளியிடுமாறு தைரியமாகக் கோரினார். அதன்பின் அவர் தீவிர நோய்வாய்ப்பட்டார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவரது உடம்பில் எல்லாவிதமான குழாய்களும் கம்பிகளும் பொருத்தப்பட்டன. அவரை, அவரது நண்பர் ஒருவர் பார்க்கவந்தபோது, அவரிடம் கிருபளானி புகார் செய்தார்: 'எனக்கு அடிக்கட்டுமானம் (Con-

stitution) ஏதும் இல்லை. இருப்பதெல்லாம் வெறும் திருத்தங்களே (Amendments).

## 'டைம்' பத்திரிகையின் கணிப்பு

இந்தியா நம்பிக்கைக்குரிய ஜனநாயகமாக இருக்கக்கூடுமா, இருக்கவேண்டுமா, இருக்குமா என்ற வாதத்தை அவசர நிலை மீண்டும் கிளப்பிவிட்டது. 1975ஆம் ஆண்டு அக்டோபரில் 'டைம்' நிருபர் இந்தியாவுக்கு வந்தார். இங்கே கண்டவை அவரை மிகவும் கவர்ந்தன. 'இந்தியாவின் 60 கோடி மக்களில் பெரும்பாலானோருக்கு பத்திரிகை சுதந்தரம் போன்றவற்றில் அதிக ஆர்வமில்லை. அதைவிட பண வீக்க விகிதத்திலேயே (கடந்த ஆண்டைவிட 31 சதவிகித வீழ்ச்சி) கவலை அதிகம்' என்று கண்டார். 'பிரதமர், பல்வேறு சமூக சீர்திருத்தங்களை நிறைவேற்ற ஓர் அபூர்வமான வாய்ப்பைக் கைக்கொண்டு, பரவலான ஆதரவை பெற்றுவிட்டார். இந்தக் காலத்தில், கட்டுப்பாடு, காலம் தவறாமை, சுத்தம், மரியாதையாக நடந்துகொள்வது ஆகிய பண்புகளை மக்களிடம் விரைவாகப் பரப்புவதில் இந்தியா மூழ்கியிருக்கிறது' என்று அவர் மேலும் எழுதினார். பிரதமருக்குப்பின் அவரது இடத்தைப் பிடிக்க, அவருடைய இரண்டாவது மகன் முயற்சி செய்வதாகத் தெரிந்தது.

தன் தாய் பதவி விலகுவதற்கு எதிராக பலமாக எச்சரித்தவர் சஞ்சய் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்தான் அவசர நிலையை பலமாக ஆதரித்தவரும்கூட. அதன் முதல் சில மாதங்களில் அவர் அதிகம் பொது நிகழ்ச்சிகளில் காணப்பட்டார். அடிக்கடி திருமதி காந்தியின் பக்கத்தில் காணப்பட்டார். கேபினட் நியமனங்களில் ஆலோசனை அளித்துவந்தார். தாராளப்போக்கு கொண்ட ஐ.கே. குஜ்ரால் பத்திரிகையாளர்களிடம் கனிவாக இருந்த காரணத்தால், அவருக்கு பதில், கடுமையான போக்கு கொண்ட வி.சி. சுக்லா செய்தி, ஒலிபரப்பு அமைச்சராக ஆக்கப்பட்டார். ஒரு காலத்தில் நேரு மந்திரி சபையில் மூத்த உறுப்பினராக இருந்த, அனுபவம் மிக்க ஸ்வரண்சிங் அவசர நிலையில் அதிக ஆர்வம் காட்டாததால், அவருக்கு பதிலாக, சஞ்சயின் நண்பர் பன்ஸிலால் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.



அவசர நிலையின் ஆறாவது வாரத்தில் சஞ்சய் 'ஸர்ஜ்' என்ற தில்லி பத்திரிகை ஒன்றுக்கு நீண்ட பேட்டி அளித்தார். தன் சொந்த வாழ்க்கை பற்றி அதிகம் பேசினார். அவர் குடிக்க மாட்டார், புகை பிடிக்கமாட்டார். தம் தாயுடனான உறவு குறித்தும் பேசினார். (ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, 'ஆம், என் கருத்துகளை அவர் நிச்சயம் கேட்கிறார். நான் ஐந்து வயதாக இருக்கும்போதிலிருந்தே அவர் நான் சொல்வதைக் கேட்டுவந்தார்' என்றார்.) அவர், தன் பணி குறித்துப் பேசும் போது, மாருதி தொழிற்சாலையில் பன்னிரண்டு முதல் பதினான்கு மணி நேரம் வேலை செய்வதாகக் கூறினார். தான் விரைவில் தயாரிக்க இருக்கும் கார் பற்றிப் பேசும்போது, அது, (அப்போது இந்தியச் சந்தையை ஆக்ரமித்துக்கொண்டிருந்த இரண்டு கார்களான) ஃபியட்டையும், அம்பாஸிடரையும் கூடத் தோற்கடித்துவிடும் என்றார். கட்டுகள் அற்ற தொழில் முயற்சிகளை அவர் ஆதரித்தார். அதுதான் வளர்ச்சிக்கு மிக வேகமான வழி என்றார். எங்கு, எப்படி, எந்த விதத்தில் தொழில்கள் நிறுவப்படுகின்றன என்பதன் மீதான எல்லாவித அரசாங்கக் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட வேண்டும் என்று கருதினார். ஜனநாயகம் பற்றிய அவர் கருத்தைக் கேட்டபோது, அவர், 'ஜனநாயகம் என்பது நாட்டில் உள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்கான சுதந்தரம் அல்ல. நாட்டை முன்னேறச் செய்வதற்காக' என்றார்.

## சஞ்சயின் செருப்பைச் சுமந்த உ.பி.முதல் மந்திரி.

வளர்ந்து கொண்டிருக்கும் மகனுக்கு உற்சாகமூட்டும் நண்பராகவும், ஊதுகுழலாகவும், வீக்லியின் ஆசிரியர் குஷ்வந்த் சிங் திகழ்ந்து வந்தார். சஞ்சய் 'காரியத்தைச் செய்து முடிப்பவர்' என்று அழைக்கப்பட்டு, 'அந்த ஆண்டின் இந்தியர்' என்று தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தப் பத்திரிகை சஞ்சய் பற்றியும், அவருடைய இளம் மனைவி மேனகா பற்றியும் விரிவான கட்டுரைகளை வெளியிட்டது. பக்கம் பக்கமாகக் கனிவான பாராட்டுகளுடன் புகைப்படங்கள் வெளியாகின.

சஞ்சயின் முக்கியத்துவத்தின் வளர்ச்சிக்கு நிச்சயமானதொரு அடையாளம், மத்திய மந்திரிகளும், மாநில முதல்வர்களும் அவருக்குக் காட்டிய மரியாதை. எந்த அட்மிரலுக்கு ராணுவத்தில் பதவி உயர்வு அளிப்பது என்று முடிவு செய்ய, பாதுகாப்பு அமைச்சர் பன்ஸிலால், இரு வேட்பாளர்களையும் சஞ்சயிடம் அழைத்துச் சென்றார். சஞ்சய் ராஜஸ்தான் சென்றபோது அவரை வரவேற்க முதல்வரே விமான நிலையத்துக்கு வந்தார். அவருக்கு கௌரவம் அளிக்கும் வகையில் ஜெய்ப்பூர் செல்லும் வழியில் 501 வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவர் உத்தரப் பிரதேசம் சென்றபோதும் இதே போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. லக்னோ விமான நிலையத்தில் சஞ்சய், விமான ஓடுபாதையில் தடுக்கி, செருப்பை நழுவவிட்டபோது உ.பி. முதல்வரே அதைக் குனிந்து எடுத்து மரியாதையுடன் சஞ்சையிடம் அளித்தார்.

## டெல்லியை எழில் நகரமாக மாற்றும் முயற்சியும் அதன் பின்விளைவுகளும்

குடிசைகள் இடிக்கப்பட்டு, குடிசைவாதிகளை யமுனை தாண்டி அக்கரைப் பண்ணை நிலங்களில் குடியமர்த்த சஞ்சய் விரும்பினார். இதில் அவருடைய கருத்துக்கள், தில்லி வளர்ச்சிக் கழகத்தின் (டி.டி.ஏ) துணைத்தலைவர் ஜக்மோகனுடைய கருத்துக்களுடன் ஒத்திருந்தன. ஜக்மோகனின் ஹீரோ, பாரன் ஹாஸ்மன் என்பவராவார். அந்த நகர நிர்மாணி பாரிஸுக்குச் செய்ததை, ஜக்மோகன் தில்லிக்குச் செய்ய விரும்பினார். குடிசைகளை ஒழித்து இரு பக்கமும் மரங்களுடன் கூடிய அழகிய சாலைகளை அமைத்து பாரன், பிரெஞ்சுத் தலைநகரையே மாற்றியிருந்தார். ஒரு காலத்தில் விகாரமாகவும் வெறுப்பூட்டும் வகையிலும் இருந்த பாரிஸ் நகரம் அழகு நிறைந்த, உயிரோட்டமுள்ள பண்பாட்டின் உறைவிடம் ஆகிவிட்டது.

சஞ்சய் காந்தியைச் சுற்றி எழுந்த குழுவில் ஜக்மோகன் முக்கியமான உறுப்பினர் ஆனார். மற்றவர்கள் லெப்டினண்ட் கவர்னரின் செயலர் நவீன் சாவ்லா (பிற்காலத்தில் இவர் தேர்தல் கமிஷினராக ஆனார். அவருடைய நியமனத்தை பாரதீய ஜனதா



கட்சி வன்மையாக எதிர்த்தது குறிப்பிடத்தக்கது.), மூத்த போலீஸ் அதிகாரி பி.எஸ். பிந்தர் ஆகியோர். சஞ்சயுடன் பணியாற்றிய பெண்களில், இளைஞர் காங்கிரஸ் தலைவி அம்பிகா சோனியும் சோஷலிஸ்டும் சமூக சேவகருமான ருக்சனா சுல்தானாவும் முக்கியமானவர்கள். சுல்தானா குடிசைவாசிகளுடைய அதிகார பூர்வமற்ற பிரதிநிதியாகக் கருதப்பட்டார். ஒவ்வொரு நாள் காலையும் அக்குழு சஞ்சயின் அலுவலகத்தில், உத்தரவு பெறவும் அறிக்கை அளிக்கவும் கூடியது. பிரதமரின் சுருக்கெழுத்தர் ஆர்.கே. தவானும் இந்தக் கூட்டத்தில் இருப்பார். அவர் தில்லியின் ரகசியக் கும்பலுக்கும், இந்திய அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே இணைப்பாக இருந்தார். இந்திராவின் யோகா ஆசிரியராக நுழைந்து அவர் மகனது அன்புக்கு உரியவராகிவிட்ட நீண்ட தலைமுடி கொண்ட தீரேந்திர பிரம்மச்சாரி இந்தக் கூட்டத்தின் ஆலோசகராக இருந்தார். இந்துப் புனிதராகக் கோலமும் பயிற்சியும் பெற்ற பிரம்மச்சாரி, காஷ்மீரில் வெடிமருந்து ஆலை நடத்தும் அளவுக்கு நவீனமாகவும் இருந்தார்.

## எம்.ஜி.ஆரும், நெருக்கடி நிலையும்

தமிழ் நாட்டில் அ.தி.மு.க. கட்சியோ நெருக்கடி நிலையைப் பகிரங்கமாக ஆதரித்தது. நாட்டின் நலனையும், மக்கள் நலனையும் கருத்தில்கொண்டு இந்திராகாந்தியின் தலைமையே நாட்டில் நீடிக்கவேண்டும் என்று தந்தி அனுப்பினார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் தந்தி அனுப்பியதை முதலமைச்சர் கருணாநிதி கடுமையாகச் சாடினார். கட்சியின் செயற்குழுவைக் கூடக் கூட்டாமல் எதற்காக எமர்ஜென்ஸியை ஆதரிக்கிறார்கள்? வருமானவரி பாக்கி! அன்னியச் செலாவணிப் பிரச்னை. அதற்காக ஆதரிக்கிறார்கள். அந்தச் சுயநலத்துக்காக ஆதரிக்கிறார்கள் என்றார் கருணாநிதி.

தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் எதிராக இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து புதிய அணியை உருவாக்கும் கனவில் இருந்தவர் காமராஜர். அவருக்கு இந்திராவின்

ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அதிர்ச்சியைக் கொடுத்தன. எமர்ஜென்சியை காமராஜர் எதிர்த்த நிலையில் அவரால் முன்பு முதல்வர் பதவியில் அமர்த்தப்பட்ட பக்தவத்சலமோ எமர்ஜென்ஸியை பகிரங்கமாக ஆதரித்தார். 'தேசம் உறுதியுடனும், அமைதியுடனும் நெருக்கடியைச் சமாளிக்கும் என்று நம்புகிறேன். மாற்றுக்கருத்துக்கு இடமின்றி இந்திரா காந்தியின் தலைமையை நாடு விரும்புகிறது' என்பது பக்தவத்சலத்தின் நிலைப்பாடு. முக்கியமாக எதிர்க்கட்சிகள் எல்லாம் எமர்ஜென்ஸியை எதிர்த்துக் கொண்டிருந்த சூழ்நிலையின் இடது சாரிக் கட்சிகள் இருவேறுபட்ட நிலைப்பாட்டை எடுத்தன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எமர்ஜென்ஸியை சிவப்புக்கம்பளம் விரித்து வரவேற்றது. மாறாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ எமர்ஜென்ஸியை எதிர்த்து முழக்கமிட்டது. இந்திராவுக்கு எதிராகப் புதிய அணியை உருவாக்கவும் மார்க்சிஸ்டுகள் தயாராக இருந்தனர்.

### 'மிசா' சட்டத்திற்கு உயிரூட்டப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சியினர் மீது எந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பது என்ற கேள்வி எழுந்த போது, ஆட்சியாளர்களின் நினைவுக்கு வந்த சட்டம், 'மிசா' (MISA - Maintenance of Internal Security Act.). 1971ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூண்டபோது அமலில் இருந்த தேசியப் பாதுகாப்புச் சட்டமான மிசாவுக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டது. மிசாவின்படி விசாரணை இன்றி எவரையும் எப்போதும் கைது செய்யலாம்! கைதுக்கான காரணத்தைச் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது? என்ற சட்டத்திருத்தத்தின் மூலம் புதிய ரத்தமும் பாய்ச்சப்பட்டது.

மிசா சட்டத்தைப் அமுல்படுத்தும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்குத் தரப்பட்டது. தொடர்புடையவர் சட்டம் ஒழுங்குக்குக் குந்தகம் விளைவித்தார் என்றோ அல்லது மாநிலத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும்படி நடந்து கொண்டார் என்றோ எவரேனும் எழுதிக்கொடுத்தாலே போதும்; அவரை மிசா சட்டத்தின் கீழ்க் கைது செய்யலாம்.



அதன் தொடர்ச்சியாக நாடு தழுவிய அளவில் கைது நடவடிக்கைகள் வேகமெடுத்தன. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 'மிசா' கைதுகள் இல்லை. காரணம். இங்கே ஆட்சியில் இருந்தது தி.மு.க.

நாட்டில் நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோது இந்திராகாந்தி இருபது அம்சத் திட்டத்தை வெளியிட்டார். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பது, உற்பத்தியையும் வழங்குதலையும் முறைப்படுத்துவது, விவசாய நிலங்களுக்கு நில உச்சவரம்பை நடை முறைப்படுத்துவது, கொத்தடிமை முறைகளை சட்டவிரோதம் என்று அறிவிப்பது, வெளிப்படையான நுகர்வை மதிப்பிடுவதற்கும், வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கும், விரைவான விசாரணைக்கும், பொருளாதாரக் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிப்பதற்கும், சிறப்புப் படைகளை உருவாக்குவது, கடத்தல்காரர்களின் சொத்துக் களைக் கையகப்படுத்துவதற்கான சிறப்புச் சட்டங்களைக் கொண்டுவருவது ஆகியன இருபது அம்சத் திட்டத்தின் முக்கியப் பகுதிகளாகும்.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அம்சங்கள் அத்தனையும் அற்புதமானவை. ஆனால் அவை அமல்படுத் தப்பட்ட விதம் அபாயகரமானவை. ஆனாலும் இருபது அம்சத்திட்டம் எம்.ஜி.ஆரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அதிமுகவின் செயற்குழுவை அவசரமாகக் கூட்டினார். எமர்ஜென்ஸியை வரவேற்று ஒரு தீர்மானமும், இருபது அம்சத்திட்டத்தை ஆதரித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டன. கட்சியின் செயற்குழுவைக் கூட்டாமல் எம்.ஜி.ஆர் எப்படி நெருக்கடி நிலையை ஆதரிக்கலாம் என்று கருணாநிதி கேள்வி எழுப்பியிருந்தார் அல்லவா? அதற்குப் பதிலளிக்கும் வகையில் மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார் எம்.ஜி.ஆர்.

### காமராஜரின் மறைவு

எமர்ஜென்சி கெடுபிடிகளை அமல்படுத்துவதில் ஒட்டுமொத்த தேசமும் ஒருதிசையில் சென்றுகொண்டிருக்க,

தமிழ்நாடு வேறொரு திசையில் பயணித்தது. இது எமர்ஜென்ஸிக்கு எதிராகப் போராடிய தேசியத் தலைவர்களை உற்சாகப்படுத்தியது. இந்தியாவில் தமிழக மக்கள் மட்டுமே சுதந்தரக் காற்றை சுவாசிக்கிறார்கள் என்றார் ஜே.பி. மத்திய அரசின் கைது நடவடிக்கைகளில் இருந்து தப்பி, தலைமறைவாக இயங்க விரும்பிய தலைவர்கள் பலரும் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். குறிப்பாக, ஜார்ஜ் ஃபெர்னாண்டஸுக்கு முதலமைச்சர் கருணாநிதியே அடைக்கலம் கொடுத்தார். இதன் மூலம் தமிழக அரசு தன்னுடைய கட்டுப்பாட்டை மீறிச் செயல்படுத்துவதாகச் சந்தேகித்தது மத்திய அரசு.

அப்போது எமர்ஜென்ஸியை எதிர்க்கக் கருணாநிதியுடன் கரம் கோத்திருந்தார் காமராஜர். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும் காவல்துறையின் கரங்கள் படாமல் இருப்பதற்கு காமராஜர் கொடுத்த ஆலோசனை ஒரு காரணம் என்று பேசப்பட்டது. அதன் பொருளாவது, காமராஜரின் வேண்டுகோளுக்கு முதலமைச்சர் கருணாநிதி செவி சாய்த்து வருகிறார் என்பது தான். திடீரென காமராஜரின் உடல்நிலை பாதிப்பை அடைந்தது. நாளுக்கு நாள் பலவீனமடைந்த அவர் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் மரணம் அடைந்தார். தமிழக அரசின் சார்பில் காமராஜருக்கு இறுதி மரியாதை செய்யும் காரியங்கள் நடந்தன. பிரதமர் இந்திரா காந்தி நேரில் வந்து காமராஜருக்கு அஞ்சலி செலுத்தினார். முதலமைச்சர் கருணாநிதியே முன்னணியில் நின்று இறுதிக் காரியங்களை நடத்தினார்.

தமிழ்நாட்டு அரசியலின் பாதையைத் தீர்மானித்த சக்தி மிகுந்த தலைவர்களுள் ஒருவரான காமராஜரின் மரணம் தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. காமராஜரை வைத்துக்கொண்டு பலகாரியங்களைச் சாதிக்கும் கனவில் இருந்தவர் ஜே.பி. ‘இக்கட்டான காலகட்டத்தில் காமராஜரை நாம் இழந்து விட்டோம். பாரத தேசத்தின் விஷயத்தில் விதியின் விளையாட்டு கொடூரமாக இருக்கிறது. இந்தியா ஒரு நேர்மையான மனிதரை இழந்து விட்டது’ என்று வருத்தப்பட்டார் ஜே.பி.

(தொடரும்)

# திருவேங்கடவன் உலா

ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.) இதழ் 171இன் தொடர்ச்சி.

158. செண்பக வாசலிலே தென்றலுலா முன்றிலிலே
பண்பலிபீ டத்தின் பரப்பிலே - தண்பனிநீர்

செண்பக வாசல் - இப்போது இது சம்பங்கிப் பிரதக்ஷிணத் திருவாயில் எனத் திரிந்து வழங்குகின்றது. தென்றல் - மந்தமாருதம். முன்றில் - முற்றம்.

159. வீச வுலாவி விளங்குமணி வைகுந்த
வாசலெழிற் கோபுரமுன் வந்தெய்தித் - தேசுபொழி

வைகுந்த வாசல் - திருவேங்கட முடையான் கருப்பக் கிருகத்தின் உட்சுற்று வாசல். தேசு - ஒளி.

160. வச்சிரத் தட்டு வயிடூரி யப்பலகை
பச்சை யிருசு பவழக்கா - லச்சுப்

161. பதுமரா கக்கொடிஞ்சிற் பன்னகமா ணிக்கங்
குதிகொளர ணிக்கனக கும்பங் - கதிரிலகுங்

(160, 161) தட்டு, பலகை, இருசு, ஆர்க்கால், அச்சு, கொடிஞ்சு, கும்பம், மகுடம், கோலம் முதலிய தேருறுப்புகள் - வயிரம், வயிடூரியம், மரகதம், பவளம், பதுமராகம், மாணிக்கம், ஆணிப் பொன், கோமேதகம், பொன்னாடை முதலியவற்றால் அமைந்ததென வருணித்தமை காண்க.

162. கோமே தகமகுடங் கோலமெலாம் பொற்கலிங்க
மாமேரு வொத்த மணித்தேரிற் - றாமே

கோலம் - தேர்ச்சுற்றுத் தொங்கல் ஆடை. பொற்கலிங்கம் - பொன்னாடை.

163. திருமார் பிரியாத தேவி யுடனேறி
யிருதேவி யார்க்கொருதே ரீய்ந்து - முரசதிரப்

ஸ்ரீநிவாசப் பெருமாள் ஒருதேரூர்ந்தும், பூமிப்பிராட்டியார், பின்னைப் பிராட்டியார் இருவரும் ஒருங்கு மற்றொரு தேரூர்ந்தும் போந்த பழஞ் செய்தி இந்நூலால் அறியப்படுவது.

164. பேரி முழங்கப் பிளந்ததய னண்டமெனத்
தூரியங்கள் கோடி துவைத்தார்ப்பக் - காரளவி

முரசு அதிரவும், பேரிகை முழங்கவும். பிரமாண்டம் பிளந்து விட்ட தென்னும்படி. தூரியங்கள் - வாத்தியங்கள். துவைத்தார்ப்ப - மிகுந்து ஒலிசெய்ய.

165. லிந்திர வட்டத் தெகினம் பறந்ததெனச்
சந்திர வட்டந் ததைந்தாடப் - பந்தரிடுஞ்

எகினம் - அன்னப்பறவைகள். பறந்த படியாகச் சந்திரவட்டக் குடைகள் நெருங்கி அசைய.

166. சேறாடிப் பிச்சஞ் செழுங்குடைக ளண்டத்தி
னாறாடி யப்பா லசைந்தாட - மாறாடி

சேறாடி - ஒருவகை விருது. பிச்சம் - பீலிக்குஞ்சக் குடை. அண்டத்தின் ஆறு ஆடி - ஆகாச கங்கையில் முழுகி.

167. மெத்துதவ ளக்குடைக்கீழ் வெண்சா மரைக்கற்றை
சுற்றுநிலாக் கற்றை சொரிவதென - வெத்திசையுங்

தவளக் குடை - வெண்முத்தக் குடை. வெண்சாமரைக் கற்றை - வெண்மையாகிய கவரிமான் வால் மயிர்க்கற்றைச் சின்னம்.

168. கட்டியத்தர் வேத்திரத்தர் காளாஞ் சியரடைப்பைப்
பெட்டகத்த ரெங்கும் பிறங்கியிட - மட்டுமலர்ச்

கட்டியத்தர் - கட்டியம் கூறுவோர். கட்டியம் - மன்னன் முன் பாடும் புகழ்ப்பா. வேத்திரத்தர் - கைப்பிரம்புக் காவலர்.



வேத்திரம் - பிரம்புக்கோல். காளாஞ்சியர் - தம்பலந் (தாம்பூல எச்சில்) துப்ப ஏந்தும் கலசக்காரர். அடைப்பைப் பெட்டகத்தர் - வெற்றிலை பாக்குப் பேழைக்காரர். பிறங்கியிட - விளங்கி நிற்க.

169. சேனைத் தலைவர் திருப்பிரம்பு தேவர்பெருந்
தானைத் தலைவர் தமைச்சாட - ஞானத்

சேனைத் தலைவர் - சேனா முதலியார் என்னும் விஷ்வக்சேனர். இவரே திருப்பிரம்புதேவர்: பரமபதத்தில் பெருமாள் சந்நிதியில் காலம் பார்த்து உள்ளே விடுபவர்.

170. திருவடியார் தம்முடனே செம்மலரிற் பிள்ளை
யருமறையா லாசி யறையத் - தருவனத்து.

செம்மலரிற் பிள்ளை - திருமாலின் திருக்கொப்பூழின் மலர்ந்த செந்தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவன். மறையா வாசியறைய - வேத மங்கல சுலோகங்கள் கூற. தருவனம் - தேவருலகத்துக் கற்பகம் முதலிய பஞ்சதருக்கள் உள்ள வனம்.

171. வாச மலர்மழைபோல் வானவர்கோ மான்சொரிய
வீசெரி காள விருதோதப் - பாசதரன்

இந்திரன் பஞ்ச தருக்களின் மணமலர்களை மழைபோற் கொட்ட. எரி - அக்கினிதேவன். காளவிருது - எக்காளம் என்ற சின்னம். பாசதரன் - பாசக் கயிற்றைக் கையில் உடைய யமன்.

172. பொற்றண்ட ரோடே புகுந்து திரள்விலக்கப்
பற்றி நிருதி பலிபோற்றச் - சுற்றும்

பொன்னாற் செய்த தண்டத்தைத் தாங்கிய ஏவலரோடு புகுந்து. நிருதி - தென்மேற்குத் திக்குபாலன். பலிபோற்ற - பூசைப் பொருளைப் போற்ற.

173. வருணன் பனிநீர் வழங்கி வரவாயு
விரவொளியா லாலவட்டம் வீசப் - பொருள்சுமப்போன்

வருணதேவன் பனிநீர் வீசிவர, வாயுதேவன் பேராலவட்ட விசிறி கொண்டு வீசி நிற்க.

174. போலவள கேசன் பொன்கொழிப்ப வீசானன்
கோல நடனருடன் கூத்தாடச் - சீலமுடன்

அளகேசன் - அளகாபுரித் தலைவன் ஆகிய குபேரன். ஈசானன் - சிவன். நடனர் - சபாநர்த்தகர். 340-ம் கண்ணி முதல் இதுவரை முறையே கீழ்த்திசை, தென்கீழ்த்திசை, தென்திசை, தென்மேற்றிசை, மேற்றிசை, வடமேற்றிசை, வடதிசை, வடகீழ்த்திசை ஆகிய எண்டிசைப் பாலகர்கள் ஆகிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவ்வெண்மர்களின் சேவைத்திறனை முறையாற் கூறிய அழகு நோக்கத் தக்கது.

175. செங்கதிருந் வெண்கதிருஞ் சேரரவே பக்கமதிற்
செங்குடையாய் வெண்குடையாய்ச் சேவிப்பப் - புங்கவருஞ்

வெண்கதிர் - சூரியன். தண்கதிர் - சந்திரன். இவ்விருவரும் முறையே செங்குடை, வெண்குடைகள் ஆக அமைந்தனர். புங்கவர் - இருடியர்.

176. சோகமறு நித்திய சூரியரு மீரேழு
பாக வதரும் பணிந்தேத்த - வாகைப்

சோகம் - உலகத்துயர். நித்திய சூரியர் - நித்திய விபூதி யாகிய பரமபதத்தில் பெருமாளுக்கு அணுக்கராய் உள்ள அநந்த கருடர் முதலியோர். ஈரேழு பாகவதர் - பிரகலாதர், நாரதர், ஸநகர், ஸநந்தனர் முதலிய பதினான்கு பாகவத தாஸபூதர்கள்.

“இரணியன் சிறுவன் சுரர்முனி சமதக் கினியசே யெழில்கொள் புண்டரீக ரருமறை பகர்ந்தோ னுயருமம் பரீட னருள்செறி சுகன்சவு னகன்றான் வரநதி புதல்வன் றாப்பிய னுருக்கு மாங்கதன் றனஞ்செயன் வசிட்டன் பரவை சூழிலங்கை வீடணன் முதலாம் பரமபா கவதரும் வாழி” என்று மகா பாகவத புராணம் கூறுவதும் காண்க. வாகை - வெற்றி.

(தொடரும்)



# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 171இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**337. செவிலி எயிற்றியொடு புலம்பல்:**

செவிலி எயிற்றியொடு புலம்பல் என்பது, செவிலி பாலைநிலத்துப் பெண்ணொடு புலம்பிக் கூறல்.

பொருந்திய புயத்தையுடைய அயலான் பின்னே போக விடுத்து உன்னை என் ஒப்பற்ற மகளேயென்று ஐயமுற்றேன், அலங்கரிக்குஞ் சித்திரப்பாவைபோல் காணப்படும் பெண்ணே! காட்டிலிருக்கும் எயினருக்கு அருமையாகிய மகளே! என்மகள் போனவழியை எனக்குச் சொல்வாயாக என்றவாறு.

**338. செவிலி குரவொடு புலம்பல்:**

காட்டில் மூங்கிலழல் பொருந்திய வழியில் தனியேபோன என் தோகைபோல்வாளை நீ இவ்விடைக் கண்டுழி, இருள்போன்ற குழலாள்! இவ்வயலான்பின் செல்லாதே என்று சொல்லாத குரவே, நீ மிகவும் கொடியை என்றவாறு.

**339. சுவடு கண்டிரங்கல்:**

சுவடு கண்டு இரங்கல் என்பது, செவிலி நிலத்தின் மேற் காலமுந்திய குறியைக் கண்டு இரங்கிக் கூறல்.

அம்பு தொடுக்குஞ் சிலையையுடைய ஆறலைகானவர் எதிர் நிற்கமாட்டாது ஓடிய வேறுபட்ட அடிச்சுவடு உள்ளனவே, அவரைப் பொருஞ் சிலையுடனே அம்பு பக்கத்தில் வீழத் துரத்திய காளையது அடிச்சுவடுஅவையே. அடிச்சுவடு கண்டவுடன் தலைவியை நினைந்திரங்கியவாறாயிற்று. பலராய் வந்தெதிர்த்துத் தலைவனெதிர் நிற்கமாட்டாது ஒருவர் போனவழி யொருவர் போகாதோடு அவரது அடிச்சுவடு, ஒருவரடிபோலொருவரடியிராது வேறுபட்டுத் தோன்றுதலால், ‘கானவரோடிய வேற்றுச்சுவடு இவை’

என்றும், தனித்து நிற்றலின், 'பாவைபதமிவை' என்றும் கருதிக் கூறினாளென்க.

**440. செவிலி கலந்துடன்வருவோர்க் கண்டு கேட்டல்:**

செவிலி கலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டல் என்பது, உடன்போக்குப் போய்த் தலைவனும் தலைவியும்போல அன்பு கலந்து ஆற்றிடை வருவோரைக்கண்டு செவிலி வினாதல்.

**441. கலந்துடன்வருவோர் புலம்பல் தேற்றல்:**

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல் என்பது, செவிலியிரங்கிப் புலம்புதலை எதிர்வந்தோர் தேற்றிக் கூறல்.

**442. செவிலி புதல்வியைக்காணாது கவலைகூர்தல்:**

செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல் என்பது, செவிலி தன் புதல்வியைக் காணாது துன்பம் மிகுதல்.

நாணைப்பார்க்கவும் முல்லைமாலை யணிந்த கற்பு நன்று என்பதனை விரும்பிச் சென்றாள் ஆதலால், முத்தாரம் பூணினும் பார மென்று சொல்லும் மெல்லிய இயல்பினையுடைய என் பொன்னை எனக்கிப்போது, இந்தக் கானிடைக் காணினும், காண அரிது, அந்தோ யான் என் செய்வேன் என்றவாறு.

*கற்பொடுபுணர்ந்த கவ்வை முற்றிற்று,*
*இதுகாறும் ஐம்பத்து மூன்றாம் நாள் செய்கை முடிந்தது.*

-----

**மீட்சி**

**மீட்சி:-** செவிலி தலைமகளைக் காணாது மீளுதல். உடன் சென்ற தலைவனும், தலைவியும் மீண்டு ஊர் வந்து சேர்தல்.

பல இடங்களில் தேடியும் தலைவியைக் காணாமையின் கவலையுற்று வீடு திரும்பிய செவிலி நற்றாய்க்கு அதைத் தெரிவித்தனள். தலைவர், தலைவி இருவரும் தலைவியின் ஊர் நாடித் திரும்பினர். இளமையில் தலைவி மகிழ்ந்திருந்த சோலையையும், பாவை வைத்து விளையாடிய சிற்றில்லங்களையும் தலைவனின் கரங்கள் தலைவிக்குச் சுட்டிச் சுட்டிக் காட்டின. தங்கள் வரவைப் பாங்கியர்க்குத் தெரிவிக்குமாறு தலைவி முன்



செல்வோரிடம் செய்தி அனுப்பினள். அச்செய்தியை உணர்ந்த பாங்கியர் உள்ளம் ஆநந்தக் கடலிலாழ்ந்தது. வீரன் பின் சுரத்தில் சென்ற மங்கை தம்மூருக்குத் திரும்பி வந்த மகிழ்ச்சியைத் தந்திடும் செய்தி நற்றாய்க்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் தன்னில்லிலே வந்து மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்பது நற்றாயின் விருப்பம். ஆதலின் நற்றாய் வெறியாளனைப் பார்த்து ''தலைவன் என் மகளை என் வீட்டிற்கு அழைத்து வருவானோ? அன்றி அவன் ஊருக்கே அழைத்துப் போவானோ?'' என்று கேட்டாள்.

அஃதாவது, மீண்டு வருதல். செவிலி புதல்வியைக் காணாது மீண்டு வருதலும், உடன்போய தலைவனும் தலைவியும் மீண்டு வருதலும் அடங்கப் பொதுப்பட மீட்சி யென்று கூறினார்.

'தெளித்தல் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே.'

*(அகப்பொருள் விளக்கம், வரைவியல் 20)*

என்னுஞ் சூத்திர விதியால், மீட்சி நால்வகைப்படும்.

**துறை இலக்கணம்:**

**443. தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குரைத்தல்.**

**(சேண் - தூரம்).**

*ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையேன்*
*நாடா இடமில்லை ஞாலத் தகல்வயின் நன்கமலக்*
*காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்*
*வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே.*
*(அம்பிகாபதிகோவை)*

**444. தலைவன் தம்மூர்சார்ந்தமை சாற்றல்:**

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல் என்பது, ஐம்பத்து நான்காம்நாள், தலைவன் மீட்சியில் தலைவியது ஊரைத் தாம் சார்ந் தமை தலைவிக்குச் சாற்றல்.

மானனையாய்! நின்னை யான் முன் எதிர்ப்பட்ட நீண்ட பெரிய குன்று இது; நீ குடைந்து விளையாடிய சுனையாம் அது; நீ விளையாடிய மலர்ச்சோலைகளாம் உவை; மாசிலாத வண்டலம்

பாவை செய்து விளையாடிய சிற்றில்லம் இவை. நமது எழிலை யுடைய நகர்க்கு எழுந்தருள் என்றவாறு.

**445. தலைவி முன் செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்:**

அலரைத் தூற்றுகின்ற அயலார், என்னிடத்துக் காதலை யுடையாராகிற தாயர் இவர்களது பொறாமையினால் போய்வருந்துந் துன்பம் ஒன்றுமின்றி வெவ்விய காட்டை நீங்கிப்போய் மீண்டு யானும் அழகிய பொன்னால் வனைந்த கழலையுடையானும் வருகின்ற செய்தியெல்லாஞ் சென்று என் துணைவியர்க்குக் சொல்லுவீர் என்றவாறு.

**446. முன்சென்றோர் பாங்கியர்க்குணர்த்தல்:**

அழகுபொருந்திய சூது இடுக்கண்பட்டுச் சுருங்கப்பூரித்துத் திரண்ட பெரிய முலையையுடைய தோகைபோல்வீர்! போதுகள் மலர்ந்து இருளைச் சினக்கும் மெல்லிய குழலினையும் புனைந்த பூணினையும் உடையாள் தன் காதலன் பின்வர யாம் கண்டனம் என்றவாறு.

**447. பாங்கியர்கேட்டு நற்றாய்க்குரைத்தல்:**

வாள்போன்ற விழியினையுடைய நின் மகளாகிய மயில் போன்றவள். காமனையொத்த விடலை பின்னே சுரம்போய் மீண்டு நம் சுற்றத்தாரிருக்கும் நகரின்கண்ணே வருமென்று நல்லோர் சொல்லக் கேட்டனம்; ஆதலின், இந்நாளைப் போன்ற நன்னாள் கழிந்த நாள்களிலே யுளவோ என்றவாறு.

**448. நற்றாய் கேட்டவனுளங்கொள வேலனை வினாதல்:**

சுரம்போய் மீண்டுவருந் தலைவன் மானனையாளை என் மனையிலே தருமோ, தன்னையீன்ற நற்றாயிருக்கும் தன் பெரிய நகர்க்கே செலுத்துமோ, எனக்கு ஒன்று சொல்வீர் என்றவாறு.

*மீட்சி முற்றிற்று.*

**இதுகாறும் ஐம்பத்து நான்காம்நாள் செய்தி முடிந்தது.**

-----

(தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 170இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

**வண்ண மணிக்கச்சின் வன்கட்டு அறவிம்மித்**
**தண்ணென்றும் வெச்சென்றும் தன்மை புரிவனவாய்**
**வெண்ணித் திலவடங்கள் மீவாவும் பூண்முலைமேல்**
**வண்ணப் படுமோ பகர்!**

**(இஃது இன்னிசை வெண்பா)**

**உண்டுஇலை என்று ஐயம் உறுநுண் ணிடைஉருவம்**
**கண்டெழுது வார்எவர்மென் கால்உறினும் - தெண்டமதுஉட்**
**கொண்டுஒசிதல் கூடும் படிக்கும் குறித்தெழுதும்**
**பண் டிதர்இங் காருளர் நண் பா**

**(இது நேரிசை வெண்பா)**

**பலவாய்**
**மறித்தினி உரைப்பதென்! மடவரல் அவயவம்**
**நெறிப்பட நிகழ்த்திய படிநீ கிழியினில்**
**செறித்துவ தென்னிற் சீறூர்**
**குறிக்கொளக் குழுவொடும் கொடுபோ துகவே. (190)**

**(இது நான்கடியாய் வந்த நேரிசை ஆசிரியச் சுரிதகம்)**
**(இஃது அகநிலைக் கொச்சகக் கலிப்பா. என்னை?**

**'பாநிலை வகையே கொச்சகக் கலிஎன**
**நூல்நவில் புலவர் நுவன்றுஅறைந் தனரே"**
**(தொல். செய். 156)**
**என்றார் ஆகலின்,**

**பகுதி-மடல். துறை - அவயம் எழுத அரிதென விலக்கல். "அகவினம் பாடுவாம் தோழி" என்னும் குறிஞ்சியுட் கலியும் பாஇது).**

களவொழுக்கத்தில் தலைவியைக் கலந்த தலைவன், அவளை மீண்டும் அடையப் பாங்கியைக் குறையிரந்தான். குறைபெறாது மயங்கிய தலைவன் மடலேறத் துணிகின்றான். அப்போது பாங்கி நீ மடல் ஏறுவதற்குக் கிழியில் தலைவியின் ஓவியம் தீட்ட வேண்டுமே! அவள் அவயவம் தீட்டுவது எளிதல்லவே என்று கூறுவதாக அமைந்த பாடல் இது.

தாள் - தண்டு, முன்னிய - படைத்த. பிள்ளைமை எய்தா - குழவிப் பருவம் அடைந்து. பிதாமகன் - பிரமன். நான்முகத்து - நான்கு வாய்களால். தேர்வரும் - தெளிதற்கு இயலாத. ஓதாது உணர்வினுட் கொள்பவன் - நம்மாழ்வார். தமிழ்மறை - திருவாய்மொழி. புள்ளுயர்கேதனத்தான் - கருடக்கொடி கொண்ட திருமால். மகிழ்த்தார் - மகிழமாலை. வள்ளல் - நம்மாழ்வார். துடரிவாய் - துடரிமலையிலே. எண்ணெண்கலை - அறுபத்து நான்கு கலைகள். தெற்றென - தெளிவாக. பனுவலின் துறை - நூல் துறைகள். புரவலன் - தலைவன். குழல் - கூந்தல், முடிமுச்சி - முடிந்த உச்சி. முகை - மலர்மொட்டு. விண்டு - மலர்ந்து. மதுத்தூய் - தேன் சொரிந்து. சுவல் - பிடரில். உய்த்து - அனுபவித்து. எழுதுவது - எழுதக் கூடியது ஒன்றோ!

இருட்பாவை-மடமை. பொறிப்பவர்-எழுதுபவர்.

உராய் - உராய்ந்து. கச்சு - இரவிக்கை. நித்திலவடம்-முத்துமாலை. மீவாவும் - மேலே தாவுகின்ற. பண்ணப்படுமோ - எழுத இயலுமோ? மென்கால் - மெல்லிய காற்று. உறினும் - வீசினாலும். தெண்டமது உட்கொண்டு - வளைந்து. ஒசிதல் - ஒடிந்து போதல், பண்டிதர் - வல்லவர்.

மறித்து - மீண்டும். கிழி - திரைச்சீலை. செறித்துளது என்னில் - எழுதியதுண்டேல். கொடுபோதுகவே - அதை எடுத்துக் கொண்டு மடல் ஏறுவாயாக.

தாமரை மலரில் பிறந்து பிள்ளைப் பருவத்திலேயே பேரறிவு பெற்றுப் பிதாமகனாகிய பிரமன் நான்கு வாய்களால் ஓதியும் தெளிதற்கு இயலாத நான்மறைகளை ஓதாமலே உணர்வினுட் கொள்பவர் ஆகி, திருவாய் மொழியைத் திருமாலுக்கு அருளிய நம்மாழ்வாரின் துடரி மலையிலே.



அறுபத்து நான்கு கலைகளும் தெளிவாகத் தரும் பல நூல்களைச் சார்ந்து உணர்ந்த கேள்வி பொருந்திய பழி பிறங்காத புரவலனே!

இவள் கூந்தல் உச்சியில் வைத்த மொட்டுக்கள் விரிந்து மதுச்சொரிந்து பிடரியில் புரளும் அழகு அனுபவித்து எழுதுதற்கு இயலுமோ?

கூந்தலின் அழகை ஒருவாறு எழுதுபவர் இருந்தாலும் கண்களின் அருட்பார்வையை யார் தீட்டுவார்?

காந்தள் மலர்போலும் கைகளை எழுதினாலும் அக்கைகளில் வளையல் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து ஒலிப்பதை எழுதத் துணிபவர் யார்?

இரவிக்கைக் கட்டுத் தெறிக்கப் பருத்து முத்துமாலை மேலே புரள்கின்ற பூண்முலைமேல் அழகை எழுத இயலுமோ?

உண்டோ இல்லையோ என்று ஐயந்தரும் இடையைக் கண்டு எழுதுபவர் யார்? மெல்லிய காற்று வீசுனாலும் வளைந்து ஒசிந்து போகும் தன்மையை எழுத வல்லார் எவர்?

பலவாறு மீண்டும் மீண்டும் சொல்வது ஏன்? தலைவியின் உறுப்புக்களை நான் சொன்னபடி கிழியில் எழுதியுள்ளாய் என்றால், இந்தச் சிற்றூரில் நின் குழுவொடும் கொண்டு மடலூர்வாயாக! என்பது திரண்ட பொருள். (109)

கதழ்பரி பூண்ட கடுந்தேர் கடாஅய்
மதனுடை நோன்தாள் வலவனி னீயற்
புதம்இவள் எய்தல் புதனழிந்தீர் போலும்
திதமகிழ் மாறன் நிருக்குரு கூர்வாழ்
இதமருள் எங்கையர் ஈதுறில் இன்பம்
சுதனுறும் தேர்மீளத் தூண்டு.

மடநல்லாய்!

தவறொன் றிழையாத் தமியேனை யீன
இவற லுடையாய் எனலால் இப் போழ்து
கவர்வுற் றதுநெஞ்ச கம்.

புனலூர!

பொய்யினைப் பொய்யாகப் புறம்போக்கி மேதக்க
மெய்யினை மெய்யாக்கும் விழுமியவர் மாறாடும்
செய்கைப் பொதுமகளிர்ச் சேர்ந்தாங் களவளாய்
மையலுறாநின் மனோவாக்கும் வெண்பளிங்காய்
எய்திற்றுஎன் சொல்வது இனி.

இன்சொல்லாய்!

சொல்வன்மையரார் துயவற் றவர்விறற்சொல்
வெல்வன்மையர் ஆர் விளம்பு.

புரவல கேட்டி!

நனி நீ ரவரும் நகுதற் பொருட்டாய்த்
தொனிநீர் வளைமுக்கைத் கோதகம்கூர் மாதர்
முனிநீர் மையராக முள்ளுகிராற் செய்புண்
பனிநீர்பெய் சாந்தெழுதும் பண்பின் மறைத்து உட்
கனிநீர் மையர்போலக் கைபிருதாள் பற்றித்
தனிநீ குறையிரப்பத் தாழ்ந்ததுளம் நின்கண்
இனிமேல்என் செய்குவல் யான். (110)

(இஃது உறழ் கலி என்னை)

கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாதல் உறழ்கலிக்கு இயல்பே
(தொல். செய். 157)

என்னும் விதியால் ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும் போக்கின்றி இற்றவாறு கண்டுகொள்க. 'அரிநீர் அவிழ் நிலம் அல்லி அனிச்சம்' என்னும் மருதக் கலியும் இது.)

கதழ்பரி - வேகமான குதிரை. கடாஅய் - செலுத்தி. மதன் - வலி. நோன்தாள் - வலியமுயற்சி. வலவனின் - பாகனுடன். புதன் - சிந்தை. திதம் - நிலைபெற்ற. மகிழ்மாறன் - நம்மாழ்வார். எங்கையர் - பரத்தையர். ஈது உறில் - இஃது உணர்ந்தால். சுதம் - கேடு. ஈனம் - அற்பம். இவறல் உடையான் - காமுகன். கவர்வுற்றது - துக்கமடைந்தது.

(தொடரும்)



# ஹரிதாஸரின் இருசமய விளக்கம்

*இதழ் 171இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**2ஆவது, சதுவிதப்புருடார்த்தப்பரிச்சேதம் தொடர்ச்சி.**

*29.* நன்றான மோக்கதரு மத்தினிடு நளினத்து
நாபி யவனே
குன்றாத முக்திதரும் மற்றுளோர் கள்கொடைகா
மியத்தி னளவே
என்றாத ரத்தினுட னோதுநூல்கள் எவையும்சொல்
கின்ற திவையால்
மின்றாவு நேமியரி நல்குநாலு விதசித்தி
என்ப துளதே.

(பரம்பொருளாகிய பத்மநாபனே அழியாத வீடுபேற்றை அளிக்கும் ஆற்றலுடையவனாவான். மற்றுள்ள ஏனைய பிரமன் முதலான தேவர்கள் சாமானிய பயன்களைக் கொடுக்கும் பெற்றியராவர்; என்று மோக்ஷதர்மம் நன்கெடுத்தோதியது. இவ்வாறே பல நூல்களும் ஓதுகின்றமையால் திருவாழி ஏந்திய திருமகள் நாதனே நான்குவகையான உறுதிப் பொருள்களை அளிப்பான் என்பதில் ஐயமில்லையன்றோ!).

3ஆவது - பரமபதப்பரிச்சேதம்
(எழுசீர் ஆசிரியவிருத்தம்)

*1.* அதிசய மான சிவாகம மெல்லாம் அடைவுறத்
தெளிந்தஆ ரணங்கே
சதுவித பலமும் அன்பருக் கருள்வான் தண்டுழாய்
முகுந்தனென் பதற்கு
முதுமொழி வேத புராண சாத்திரமே முதலவா
நூல்க ளினாலே
இதமுறப் பிரமாணங் களைச்சிறி திங்கியம் பினேன்நீ
ஈதெலாம் நிற்க;

(வியக்கத்தக்கதான சிவனுடைய ஆகமமெல்லாம் அடைவாகத் தெரிந்துள்ள ஆகம மடந்தாய்! இதுவரை யான் நான்கு வகைப் பயன்களையெல்லாம் அடியார்களுக்கு உகந்தளிப்பவன் அச்சுதனான இறைவனே யாவான் என்பதற்கு, வேத புராண முதலிய சாஸ்திரங்களிலிருந்து பல பிரமாணங்களை எடுத்தியம்பினேன்.)

*2.* *விண்டுவின் உலகே உலகுகட் கெல்லாம் மேலதாம்*
*உலகமும் வேறு*
*தண்டலில் பரம பதமெனும் பெயரால் தழைப்பதும்*
*சந்ததா அனந்தம்*
*கொண்டுநித் தியசூரி யரெலாம் வாழ்வு கூர்வதும்*
*அப்பிரா கிதமாம்*
*எண்டகு மகிமை யுடையதும் இன்றிங் கியம்புவன்*
*கேள்பிர மாணம்.*

(மேற்சொன்ன இவையெல்லாம் ஒருபுறமிருக்க), ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளியிருக்கின்ற உலகமே எல்லாவுலகங்கட்கும் சிறந்ததாகும். இது, பரமபதமென்றும் அப்பிராகிதமென்றும் தெளிவிசும் திருநாடு முதலான பெயர்களால் வழங்கப்பெறும். இந்த உலகத்தில் நித்திய சூரியர்கள் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்திப் பல்லாண்டு பாடி பரமானந்தத்தை அடைகின்றனர். இது, அளவற்ற மகிமையுடையது. இத்தகைய சிறப்புடையதென்பதற்குப் பல பிரமாணங்களுள. அவற்றையும் இங்கெடுத்து இயம்புகிறேன் கேளாய்.)

*3.* *பைத்தலை அரவில் துயின்றிடும் பகவான்பரமமாய்*
*மருவிய பதந்தான்*
*எத்தனை யுலகங் களுக்கு மேலாகி யிருக்குமென்*
*பதனைநல் லியல்பால்*
*மொய்த்தசீர் இருக்கிலா தியதாக மொழியும் அட்ட*
*கத்தினில் இரண்டாம்*
*அத்தியா யத்தில் ஏழதாம் வருக்கம் அகிலமேல்*
*வெளிபெற அறையும்.*

(அழகிய ஆயிரந்தளைகளையுடைய ஆதிசேஷன் மீது அறிதுயிலமரும் ஆதிபகவனான நாராயணன் மகிழ்ந்துறையும்



பரமபதமே எல்லாவுலகங்களிலும் மிகச் சிறந்ததாகும் என்பதனை, ருக்வேதம் முதல் அட்டகம் இரண்டாம் அத்தியாயத்திலுள்ள ஏழாம் வருக்கம் இனிது எடுத்தியம்பும்.)

*4.* *ஆயசீர் இருக்கில் அட்டகம் ஏழின் அஞ்சதாம்*
*அத்தியா யத்தில்*
*சேயசீர் வருக்கம் இருபதோ டெட்டாய்ச் சிறந்தபின்*
*நின்றசே டத்தின்*
*மாயயால் உலகம் அனைத்தையும் மயக்கி வளம்புனை*
*மாதவப் பெயரால்*
*மேயசீர்ப் பரமப தமெனும் பெயரால் விளங்கிய*
*தென்பதும் விளங்கும்.*

(எல்லாவுலகங்களையும் தனது மாயயால் மயக்குகின்ற மாதவனாகிய இறைவன் மகிழ்வுற்று எழுந்தருளியிருக்கிற உலகமே பரமபதம் என்ற பெயரால் வழங்கப்பெறும் என்று, அழகிய பெருமையையுடைய ருக்வேதத்தில் ஏழாமட்டகத்தில் ஐந்தாம் அத்தியாயத்தில் உள்ள இருபத்தெட்டாம் வருக்கத்திறுதியில் எடுத்தோதியது.)

*5.* *கருதிய வெசுரு வேதத்தி லாதி காண்டமூன்*
*றாம்பருச் சத்தில்*
*நிரைபெறும் அனுவா கங்களோ ராறில்நித் தசூரியர்*
*கள்சே விப்ப*
*அருள்பொழிந் தருளா நின்றுகொண் டவரோடச் சுதானந்*
*தன்வாழ் பதத்தைப்*
*பரமமாம் பதமென் றுரைக்குமங் கதுவும் பயிலுமந்*
*தணர்க்கெலாம் பாடம்.*

(நித்திய சூரிகள் சேவிக்க அருள்சுரந்து அவர்களோடு பரமானந்தமுடன் எழுதருளியிருக்கின்ற பரந்தாமன் என்ற ஸ்ரீமந் நாராயணன் வாழும்பதமே ஸ்ரீவைகுந்தமென்ற பரமபதமாகும் என்று, எசுர்வேதத்தில் முதற்காண்டத்தில் மூன்றாம் பருச்சத்தில் உள்ள ஆறாவது அநுவாகம் நன்கொடுத் திசைத்தது. இஃது, அந்தணர் அனைவர்க்கும் மனப்பாடமாக இருப்பதொன்றாகும்.)

6. *அந்தவே தத்திலி ரண்டதாங் காண்டத் தந்தமா*
*கியஅனு வாகத்(து)*
*இந்துநேர் நுதலாய்! முக்குணத் தியல்பால் எண்ணிய*
*பகுதியைக் கடந்தால்*
*பந்தமாம் பாசம் பற்றெலாம் அறுத்துப் பயின்றிடும்*
*பரமஞா னியர்தம்*
*சிந்தையால் லயமாம் செங்கண்மா தவனார் சிறந்தசீர்*
*உலகெனச் செப்பும்.*

(பரமஞானிகள் பாசமனைத்தையும் அறுத்துப் பிரகிருதி மண்டலத்துக்கப்பாலுள்ள செங்கண்மால் உலகத்தையடைந்து செழிப்புற்று நித்யமாக வாழ்வார் களென்று, எசுர் வேதத்தில் இரண்டாம் காண்டத்திலுள்ள இறுதியநுவாகம் நன்றாக எடுத்தியம்பும்.)

7. *ஆமெசு வேத சாகையி லிரண்டாம் அட்டகத்*
*தெட்டதாம் பருச்சத்(து)*
*ஏமவா டையன(து) இருக்கையைப் பரமமெனும் பெயர்வி*
*யோமமென் றிசைக்கும்*
*தோமிலுத் தரநாராயண புருடசூத் தமென்றி*
*சைத்தவா ரணத்தும்*
*நாமமால் பதமே பரமமாம் பதமாய் நலம்பெறு*
*தன்மையை நாட்டும்.*

(பீதகவாடைப்பிரான் எழுந்தருளியிருக்கிற உலகம் பரமவியோமம் என்ற பெயரால் அழைக்கப்பெறுமென்று எசுர் வேத சாகை இரண்டாம் அட்டகத்தின் தொடக்கப் பருச்சம் நன்கெடுத் திசைத்தது. திருமகள் கேள்வன் சிறப்புடன் உறையும் பதமே ஸ்ரீவைகுண்டம் என்கிற பரமபதமாம் என்று, உத்தரநாராயண புருஷ சூக்தம் உரையாநிற்கும்.)

(தொடரும்)

# எறும்பியப்பாவின்
# விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

*இதழ் 171இன் தொடர்ச்சி.* *விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**விளக்கத்தின் தொடர்ச்சி.**

பகவதம்சம் கலவாத வெறும் ஆத்மஸ்வரூபமென்றால், பல பிரமாணங்களுக்கு விரோதம் வருமாகையால், (304) ''முதல் அவதாரம் ஆதிசேடனாகவும், இரண்டாவது இலக்குமண அவதார மாகவும், மூன்றாவதாக பலராமாவதாரமாகவும் அநந்தன் அவதரித்தான்'' என்று பலராம அவதாரம் ஆதிசேடன் அவதாரமாயிருக்கச் செய்தேயும்.

**மூலம்:**

**நிக்ருஷ்ட பகவதம்ஶமும் கலந்து இதுவுமொரு பகவதவதாரமாய் தஶாவதார அந்தர்பூதமானாபோலே, ஆதேயத்வ ஶேஷத்வ லக்ஷணங்களையுடைய முக்ய தநுபூத ராய் பரமைகாந்திகளான விலக்ஷண ஆத்மாக்களை யதிஷ்டித்து தப்தாய: பிண்டவத் பஹிஸ்புரணமாக அத்யுஜ் வலமாய் நின்றுள்ள விலக்ஷணாத்ம விசிஷ்ட பகவத் ஸ்வரூப மென்று கொள்ளவேணுமென்று, ஜநந்யாசார்யர் அருளிச் செய்தார் ஆகையாலே, பரத்வாதி பஞ்சப்ரகாரங்களிற் காட்டிலும் இது, பகவத் விலக்ஷண அவதாரமாயிருக்கும். (305) ''விலக்ஷணபே₄தாத் விஶிஷ்ட பே₄தாத:'' (   ) என்று, நிஷ்க்ருஷ்ட பகவத்ஸ்வரூபத்துக்கும் ஆசார்ய ஸ்வரூபத் துக்கும் விஶேஷண விஶேஷ்ய பேதமுண்டாகப் பெறுகை யாலே, விஶிஷ்ட பேதமுண்டாய், விஶேஷணத்வாரா பேதமும் விஶேஷ்யத்தாலே அபேதமாக இரண்டும் சொல்லலாமாயிருக்கும். இந்த ஆசார்யத்வம் அநிதர**

**ஸாதாரணமாக ஆழ்வாரிடத்திலிருக்குமது, ஒன்றாகையாலே, அவர் சரணஸ்தாநீயராய் எம்பெருமானாரே, ஸர்வ உத்தாரகாசார்ய ரென்னும் அர்த்தம் ஸர்வகுரபிப்ராய ஸித்தமாயிருக்கும்.**

**விளக்கம்:**

வடிக்கட்டிய பகவதம்சமும் கலந்து இதுவும் ஒரு பகவதவதாரமாய் தசாவதாரத்தில் சேர்ந்தவாறுபோலே, பகவானாலே தாங்கப்படுதல், அவனுக்கு வசப்பட்டிருத்தல், அடிமையாயிருத்தல் ஆகிய இலக்கணங்களையுடைய ஆந்மாக் களை உட்புகுந்து, நெருப்பில் காய்ச்சப்பெற்ற இரும்புத்துண்டம் புறத்தே சுடர்விட்டு மிக்கு ஒளிர்வதுபோலே இராநின்ற சிறப்புடன் கூடிய பகவத் ஸ்வரூபம் என்று கொள்ள வேண்டும் என ஜநந்யாசார்யர் அருளிச் செய்தாராகையாலே பகவானுடைய பரத்துவம் வியூஹம் விபவம் முதலான ஐந்து நிலைகளிற் காட்டிலும் நம்மாழ்வார் ஸ்வரூபத்தில் சேர்ந்த இது பகவத் விலட்சண அவதாரமாயிருக்கும் (305) ''சிறப்புடைய வேறுபட்ட பொருளோடு கூடியிருந்தே வேறுபட்டிருப்பது'' என்று வடிகட்டிய பகவத் ஸ்வரூபத்துக்கும் ஆசாரிய ஸ்வரூபத்துக்கும் அடை, அடைகொளி என்னும் வேற்றுமையுண்டாகையாலே, கூடி யிருக்கும் வேறுபாடுமுண்டாகி, அடையாலே வேறுபாடும், அடைகொளியாலே வேறுபாடின்மையும் ஆகிய இரண்டு தன்மையும் சொல்லும்படியாயிருக்கும். இப்படி இறைவனும் ஆழ்வாரும் சேர்ந்த ஆசாரியராயிருக்கும் தன்மை நம்மாழ்வார் ஒருவரிடத்திலேயே இருக்கும் ஆகையாலே, அவருடைய திருவடியாயிருக்கும் எம்பெருமானாரே எல்லார்க்கும் உயர்ந்த ஆசாரியர் என்னும் பொருள் எல்லா ஆசாரியராலும் ஒருமுகமாக அங்கீகரிக்கப்பட்ட பொருளாகும்.

**மூலம்:**

**இவ்வர்த்தம், இந்த வ்யக்தி நமக்கடியுமாய் நங்கார் யத்துக் கடவதுமாயிருக்குமென்று, ஆழ்வார் தாமே அருளிச் செய்தாராகையாலே, அவரிடத்திலே தன்னுடைய அநந் யார்ஹ ஶேஷத்வாத்யாகாரங்களை அநுஸந்தித்துக் கொண்டு;**



**(306)''ஜகதாசார்யரசிதே ஸ்ரீமத் வசநபூ$_4$ஷணே - தத்வஜ்ஞாநஞ்ச தந்நிஷ்டாம் தே$_3$ஹிநாத யதீந்த்ரமே'' (ஸ்ரீவசந.பூ.தனியன்) என்று, ப்ரார்த்தித்துக் கொண்டு, ஆநுகூல்யவ்ருத்திகளுக்கு ஶக்தியில்லையானால், ''இடகி லேன் ஒன்றட்ட கில்லேன் (திருவாய்.4-7-9) என்கிற அநுதாபத்தோடே, ப்ராதிகூல்யங்களெல்லாம் ஸவாஸநமாக விட்டு, எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிருக்கிற வதிகாரிகளுமாய், பரம விலக்ஷணருமான வீதராகரோடே கூடி வசநபூஷணாதி ரஹஸ்யார்த்த அநுபவத்தாலே கால க்ஷேபம் பண்ணிக்கொண்டு;**

**விளக்கம்:**

இப்பொருளை ஆழ்வார்தாமே, 'இவ்விராமாநுசன் நமக்கு அடியராய், உலகைத் திருத்துவதாகிய நமது காரியத்திற்கடவராயி ருக்குமென்று அருளிச் செய்கையாலே, அந்த இராமாநுசரிடத்திலே தந்தாமுடைய பிறர்க்குரிமையில்லாதிருத்தல், அடிமையாயிருத்தல், வசப்பட்டிருத்தல் போன்ற நிலைகளை அநுசந்தித்துக் கொண்டு;

(306) ''முக்கோல்முநிவர்க்கெல்லாம் அரசாக விளங்கும் எதிராசரே! ஸ்வாமியே! பிள்ளைஉலகாசாரியராலே இயற்றப்பெற்ற ஸ்ரீமத் வசநபூஷணம் என்னும் திவ்விய சாத்திரத்தில் உண்மை ஞாநத்தையும், அதிற்கூறியவாறே ஒழுகும் ஒழுக்கத்தையும் எனக்குத் தந்தருள வேண்டும்'' என்று எம்பெருமானாரைப் பிரார்த்தித்துக் கொண்டு பணத்தையோ திரவியத்தையோ ஆகியவற்றைக் கொண்டு திவ்வியதேசங்களில் கைங்கர்யஞ் செய்ய சக்தியில்லையானால், ''இடகிலேன் ஒன்றட்ட கில்லேன் ஐம்புலன் வெல்லகில்லேன், கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித்து ஏத்த கில்லேன்'' என்று, இயலாமையை நினைத்து மனம்வருந்தியும் வைஷ்ணவத்துக்கு விரோதமான எல்லாவற்றையும் முழுவதும் விட்டு, எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்றிருக்கக் கூடிய அதிகாரிகளாய், மிக்க சிறப்புடையவருமான ஐம்புலன் விஷயத்தில் ஈடுபாடு அற்றவரோடு கூடி ஸ்ரீவசநபூஷணம் ஆசார்யஹ்ருதயம் போன்ற இரகசிய நூல்களின் அநுபவத்தாலே காலங்கழித்துக் கொண்டு;

**மூலம்:**

**(307) ''இதம்தேநாதபஸ்காய'' (கீதா.18.67) என்கிற படியே, அதபஸ்கர் முதலான அநதிகாரிகளுக்கு இப்பரமார்த் தங்களை வெளியிடாதே அத்யந்த பக்தியுக்தர்க்கே சொல்லிக் கொண்டு, (308) ''ராமாநுஜம் ப்ரபந்நாயே ரக்ஷா தீக்ஷாக்ருபா நிதிம் கரம்வக்ஷஸிநிக்ஷிப்ய நித்ராம் குர்வந்தி நிர்ப$_4$யா:'' (   ) என்கிறபடியே, நிர்பயராக ஸுகமே இருங்கோளென்று அருளிச் செய்தருளினார்.**

**விளக்கம்**

(307) ''இந்த சரமச்லோக இரகசியத்தைத் தவமில்லாத வனுக்குச் சொல்லாதே'' என்று கீதையில் கூறியபடியே, தவம், பக்தி, நம்பிக்கை முதலானவையில்லாத அதிகாரியாயில்லாதவர்க்கு யான் மேல் கூறிய மேலான அர்த்த விசேடங்களை வெளியிடாமல், இறைவனிடம் மிகவும் பக்தியுடையவர்க்கே சொல்லிக் கொண்டு, (308) ''தம்மையடைந்தோரைக்காப்பதையே விரதமாகக் கொண்ட அருட்செல்வம் என்னும் நிதியையுடையவரான எம்பெருமானாரை யாவர் சரணமடைகிறார்களோ அவர்கள் அச்சமற்று மார்மேல் கைவைத்து உறங்கக் கடவர்கள்'' என்கிறபடி, பயமற்று சுகமாக வாழ்ந்திருங்கோ என்று எறும்பியப்பா தமது சீடர்களுக்கு அருளிச் செய்தருளினார் என்றவாறு.

**ஜீயர் திருவடிகளே சரணம்.**

**எறும்பியப்பா திருவடிகளே சரணம்.**

**போரேற்று நாயனார் திருவடிகளே சரணம்.**

**விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் ஸம்பூர்ணம்.**

விளக்கவுரை முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.



# தமிழ் இசை இலக்கிய வரலாற்றில் - வைணவ பாசுர காலம்

ஆசிரியர்: மு. அருணாசலம். (தமிழ் இசை இலக்கிய வரலாறு என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது). இதழ் 171இன் தொடர்ச்சி.

குலசேகராழ்வார்

சேர மன்னர், இவர் இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இராமனுக்கு பெருமாள் என்பது ஸம்ப்ரதாயத்தில் பெயராகும். அதனால் இவருக்கு குலசேகரப்பெருமாள் என்ற சிறப்புப்பெயர் அமைந்துள்ளது. அதுபற்றியே இவருடைய பாசுரங்களின் தொகுப்பிற்கு 'பெருமாள்திருமொழி' என்ற பெயர் வழங்குகிறது. பெருமாள் திருமொழியில் 105 பாடல்கள் அமைந்துள்ளன. அவையாவும் இசைப்பாடல்கள். ஆகவே இவை முதலாயிரத்துள் தொகுக்கப்பெற்றுள்ளன.

இவர் சேரமரபில் அவதரித்து, திருமாலுக்கடிமை பூண்டு, பாகவதர்களுக்குப் பேருதவி செய்து வந்ததைப் பொறுக்க மாட்டாத மந்திரிகள் முன் பாம்புக்குடத்தில் கையிட்டு, 'பாகவதர் தவறற்றவராயின் இப்பாம்பு என்னைத் தீண்டாது ஆகுக' எனக்கூறி, பாகவதர் ஒரு தவறும் புரியார் என்று நிரூபித்து, ஆட்சியில் விருப்பமின்றி மகனுக்கு முடிசூட்டிவிட்டு, திருவரங்கத்திற்குச் சென்று, அங்கேயே வாழ்ந்து, அதன்பின்பு பரமபதம் பெற்றார்.

இவர் பாடல்கள் 105உம் பத்துத் திருமொழி களாயுள்ளன. அவற்றுக்குப் பண் குறிப்பில்லை. ஆயினும் பண்டைப் பதிப்பாசிரியர் பத்துக்கும் பத்து இராக தாளங்களைக் குறிப்பிட்டுள்ளனர். அவைமுறையே; பந்துவராளி - ஆதி, ஸ்ரீராகம் - ரூபகம், சௌராஷ்டிரம் - அடதாளம், தன்யாசி - திரிபுடை, சங்கராபரணம் - ரூபகம், செஞ்சுருட்டி - ஆதி கேதாரகௌளம் - அடதாளம், நீலாம்பரி - திரிபுடை, காம்போதி - ஆதி, கல்யாணி - ஆதி ஆகும். இவருடைய பாடல்களிலும் அதிக இசைச்செய்திகள் இல்லை.

தம்முடைய பாடல் இன்னிசை, நல்லிசை; பண்பகரும் வண்டினங்கள்; வண்டுகள் பண்பாடும்; வண்டினம் காமரங் கள் (சீகாமரப்பண்) இசைபாடும்; பரவை முழவினோசை காட்டும்; இன்னிசையாழ் கெழுமுகின்றது. இறைவனே அந்தமிழி னின்பப் பாவாக உள்ளான் - என்பன இவர் கூறும் இசைச் செய்திகளுள் சில. இவையொரு புறமிருக்க, குலசேகரர் தாம் 'இன்னிசையில் மேவிச் சொல்லிய இன்தமிழே' என்கிறாரேயன்றி, தாம் பண்பாடுவதாக எங்கும் சொல்லவில்லை. 'நல்லியல் இன்தமிழ் மாலை பத்து' என்று இவர் தம் பாடல்களைப் பொதுவாக இயற்றமிழ் என்றுதான் கொண்டாரோ என்றே கருத வேண்டியுள்ளது.

குலசேகராழ்வார் அகத்துறைப் பாடலாக, கோபியர் வாய்மொழியாய்ப் பாடிய பாசுரம் இங்குச் சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கது. கண்ணன் கோபியருக்கு அருள் செய்ததே தனிநிலை அகத்துறை. அது பாகவதர் மரபில் ராஸக்கிரீடை எனப்பெறும், பெருமாள் திருமொழி ஆறாம்பத்தில் பாடல்கள் 3,4,5,6,7,8 ஆகியவை இத்தன்மை பொருந்தியன. இவற்றை இங்கே ஒரு தொகுப்பாய்த் தருவதன் நோக்கம். பிற்காலத்தில் (16ஆம் நூற்றாண்டு) பக்தி சிருங்காரப் பதங்களைத் தெலுங்கு இசைவாணராகிய க்ஷேத்ரைஜ்ஞர் பாடியதற்கு இப்பாசுரங்கள் வழிகாட்டின என்று ஆன்றோர் குறிப்பிடுவர். அவ் ஆறு பாடல்களையும் கீழே காண்க.

*கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்*
*கடைக்கணித் தாங்கே ஒருத்தி தன்பால்*
*மருவி மனம்வைத்து மற்றொ ருத்திக்கு*
*உரைத்தொரு பேதைக்குப் பொய் குறித்துப்*
*புரிகுழல் மங்கை ஒருத்தி தன்னைப்*
*புணர்தி அவளுக்கும் மெய்யன் அல்லை*
*மருதிறுத் தாய் உன் வளர்த்தி யூடே*
*வளர்கின்ற தாலுன்றன் மாயை தானே* 6-3

*தாய்முலைப் பாலில் அமுதிருக்கத்*
*தவழ்ந்து தளர்நடை யிட்டுச்சென்று*
*பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டு*
*பித்தனென்றே பிறர் ஏசநின்றாய்*
*ஆய்மிகு காதலோடு யானிருப்ப*
*யான்விட வந்தஎன் தூதியோடே*
*நீமிகு போகத்தை நன்குகந்தாய்*
*அதுவுமுன் கோரம்புக் கேற்குமன்றே* 6-4

*மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு*
*வீங்கிருள் வாய்என்றன் வீதியூடே*
*பொன்னொத்த வாடைகுக் கூடலிட்டுப்*
*போதுகின்ற போதுநான் கண்டுநின்றேன்*
*கண்ணு ற்றவளை நீ கண்ணாலிட்டுக்*
*கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன்*
*என்னுக் கவளைவிட் டிங்குவந்தாய்*
*இன்னம் அங்கேநட நம்பி நீயே* 6-5

*மற்பொரு தோளுடை வாசுதேவா*
*வல்விளை யேன்துயில் கொண்டவாறே*
*இற்றை யிரவிடை ஏமத்தென்னை*
*இன்னணை மேலிட் டகன்று நீபோய்*
*அற்றை இரவுமோர் பிற்றைநாளும்*
*அரிவையரோடும் அணைந்து வந்தாய்*
*எற்றுக்கு நீஎன் மருங்கில் வந்தாய்*
*எம்பெருமான் நீ எழுந்தருளே* 6-6

*பையர வின்னணைப் பள்ளியினாய்*
*பண்டையோம் அல்லோம்நாம் நீஉகக்கும்*
*மையரி யொண்கண்ணி னாருமல்லோம்*
*வைகியெம் சேரி வரவொழிநீ*
*செய்ய வுடையும் திருமுகமும்*
*செங்கனி வாயும் குழலும் கண்டு*
*பொய்யொரு நாள்பட்டதே யமையும்*
*புள்ளுவம் பேசாதே போகுநம்பி* 6-7

*என்னை வருகஎனக் குறித்திட்டு*
*இனமலர் முல்லையின் பந்தர்நீழல்*
*மன்னி யவளைப் புணரப்புக்கு*
*மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்,*

**பொன்னிற ஆடையைக் கையில்தாங்கிப்**
**பொய்யச்சங் காட்டிநீ போதியேலும்**
**இன்னமென் கையகத் தீங்கொருநாள்**
**வருதியேல் என்சினம் தீர்வன்நானே 6-8**

**இத்தன்மை ஒருபுறமிருக்க, இவ்வாழ்வார் பாடல்கள் பல தம்மிசையாலே மிக்க சிறப்புப் பெற்றிருக்கின்றன; சிலவற்றை மேற்கோளாகக் காட்டுவோம். திருவேங்கட முடையான் விஷயமாகப் பாடிய 'ஊனேறு செல்வத்து' என்று தொடங்கும் பாசுரம் சிறப்பானது. வேங்கடவனுடைய திருமலைமேல் தாம் குருகு, மீன், செண்பகம் இப்படிப் பிறக்க வேண்டும் என்ற ஆசையைக் கூறுகிறார். இசையில் பாட இது மிக்க இனிமையுடைய பாசுரம். 'எம்பெருமான் மலைமேல் ஏதேனும் ஆவேனே' என்பது உச்சநிலை. 'மன்னுபுகழ்க் கௌசலை' என்ற பாசுரம் உண்மையிலேயே ஒரு தாலாட்டுப் பாசுரம். முதல் தாலாட்டுப் பாசுரம் எனக் கருதத்தக்கது. இதுவே தமிழ்மொழியில் மற்ற தாலாட்டு நூல்களுக்குத் தோற்றுவாய். நீலாம்பரி இராகத்துக்கென்றே இப்பாசுரம் அருமையாய் அமைந்தது. இவ்வாறாக, இவ்வாழ்வார் தமிழை வளர்த்தவர்களில் ஒருவர். இசையிலும் (இந்நீலாம்பரி) இசைப்பொருளிலும் (க்ஷேத்ரஜ்ஞருக்குப் பதம்பாட வழிகாட்டியது) சிறப்புற்று விளங்குகிறார்.**

**பெரியாழ்வார்**

**ஆழ்வார்கள் அனைவருடைய வாழ்க்கை வரலாறு களும் சுவையுடையன. அவற்றுள்ளும் பெரியாழ்வார் வரலாறும், திருமங்கையாழ்வார் வரலாறும் அதிகம் சுவையு டையன. பெரியாழ்வார் பாண்டிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். விஷ்ணுசித்தர் என்பது இயற்பெயர். இவ்வூர்த் திருமாலாகிய வடபெருங்கோயிலு டையானுக்குப் பூவெடுத்துத் திருமாலைகட்டும் தொண்டே புரிந்துவந்தார். அச்சமயம் மதுரையில் அரசுபுரிந்த பாண்டியன் தன் குரு செல்வநம்பிகள் அறிவுரைப்படி, ஒரு பொற்கிழி தூக்கி; சமய வாதிகள் வந்து தங்கள் சமயத்தை நிறுவிப் பொற்கிழியினைப் பெற்றுக் கொள்ளலாமென்று மக்களுக்கு அறிவித்தான்.**

**(தொடரும்)**



# கண்டதும் கேட்டதும்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**1. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மஹனீயரின் சதாபிஷேக மஹோத்ஸவம்.**

காஞ்சிபுரம் அட்டபுயகரத்தான் கோயில் முதல் தீர்த்தமிராசுதாரரும், ஆன்மீக எழுத்தாளரும், அஷ்டகோத்ர சபை தலைவருமாகிய ஸ்ரீ.உ.வே. அஷ்டகோத்ரம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம் 13.8.2013 மற்றும் 14.8.2013 ஆகிய இருதினங்களில் வெகு சிறப்பாகக் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

சதாபிஷேகம் கண்டருளிய ஸ்ரீ.உ.வே. அஷ்டகோத்ரம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி காஞ்சிபுரத்தில் ஸ்ரீமுக வருடம் மாசி மாதம் விசாக நன்னாளில் 74 ஸிம்ஹாசனாதிபதிகளின் வம்சத்தில் ஒருவரான ஸ்ரீ.உ.வே.தி.ந.ச. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி - ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மங்காருக்கு தவப்புதல்வராகப் பிறந்தார்.

இவருடைய சிறுவயதிலேயே தாயார் பரமபதித்து விட்டார். அதன்பிறகு, காட்டுமன்னார் கோயிலில் இருந்த பெரிய தமக்கை ஸ்ரீமதி பத்மாசினி அம்மங்கார் - ஸ்ரீ.உ.வே. சுந்தராசார்யர் ஸ்வாமி அகத்தில் இருந்து பள்ளிப் படிப்பை முடித்தார். மேலும் அவர்களின் திருக்குமாரத்தி ஸ்ரீமதி. குமுதம்மங்காரை 28.3.1950இல் கரம் பிடித்தார். இவர்களின் 60ஆம் ஆண்டு மணவிழாவை 28.03.2010இல் நங்கநல்லூரில் இவர்கள் குமாரர்களும், குமாரத்திகளும் சிறப்பாக கொண்டாடினர்.

காஞ்சி ஸ்ரீ அட்டபுயகரத்தான் கோயிலில் பரம்பரை முதல் தீர்த்த மிராசுதார். இவர் இக்கோயிலுக்கு பல கைங்கர்யங்கள், மஹாஸம்ரோக்ஷணைகள் நிகழ்த்தியுள்ளார். சஞ்சாரங்கள் சென்று வைணவசித்தாந்தங்களையும், ஆன்மீகத்தையும் காலக்ஷேபங்கள்

மூலம் பரப்பி, பல சிஷ்யர்களை பெற்ற மஹான் எனலாம். இவர் இதுவரை 1400 ஆன்மீக கட்டுரைகளை, பல இதழ்களில் எழுதியுள்ளார். இது ஓர் சாதனையாகும். மேலும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ஹ கராவலம்ப ஸ்தோத்திரத்துக்கும் உரையுடன் புத்தகம் வெளியிட்டுள்ளார். ஸ்ரீ ஆண்டாள் திருக் கல்யாணம் என்கிற சிறு புத்தகத்தை எழுதி 8.12.2012 அன்று ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, ஸ்ரீமான். அ.கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி வெளியிட்டு பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெயா டி.வி.யில் காலை மலரில் தோன்றி ஆன்மீகத்தைப் பற்றி சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். பாவை விழாக்களிலும் கலந்து கொண்டு உரை ஆற்றியுள்ளார்.

சதாபிஷேக வைபவத்தின் முதல் நாள் காலை திவ்யப் பிரபந்த கோஷ்டியும், மாலை வேதபாராயணமும், பின் ஸ்ரீமத் பகவத் கீதா விரிவுரைகள் ஆடியோ வெளியீடு நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ.உ.வே. K.B. தேவராஜன் மற்றும் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். முகூர்த்தத்தன்று, முற்பகல் வைபவம் கண்ட ஸ்வாமியின் ஸதாபிஷேக மலரை ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். ஸ்வாமி மேலும் மேலும் பல கைங்கர்யங்களில் ஈடுபட்டு சதமானோத்ஸவம் கண்டருள வேண்டுமென்று அனைவரும் மங்களாசாஸனம் செய்தனர். ✱✱✱

**2. திருக்கோயில் பாதுகாப்பும், அதன் அவலநிலையும்.**

13.8.2013 அன்று பாஞ்சஜன்யம் ஆசிரியர் மற்றும் திருவரங்கம் இந்து முன்னணித் தலைவர் திரு. ராகவன் அவர்களும் காஞ்சிபுரம் அட்டபுயகரத்தான் திருக்கோயிலின் முன்பு ஸந்நிதி தெருவில் அமைந்துள்ள ஒரு இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர். இரவு சுமார் 1 மணிக்கு திருக்கோயிலின் ராஜ கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த Sirenலிருந்து அபாயஒலி சுமார் ஒருமணி நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது. கோயிலின் உள்ளே இருவர் உறங்கிக் கொண்டிருந்தனர். ஒருவர் ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் காவலர். மற்றொருவர் திருமடைப் பள்ளியில் தளிகை செய்பவர். ஒரு மணி நேரம் விடாமல் ஒலித்த



Siren பத்துநிமிட இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் முக்கால் மணி நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது. திருக்கோயிலில் அமைந்துள்ள பூட்டுக்களின் சாவிகள் மூன்று கி.மீ. தூரத்தில் உள்ள அர்ச்சகரிடம் இருந்ததால், அவரை அழைப்பதற்கு பலமுறை முயன்று, பெருத்த போராட்டத்திற்குப் பிறகு செய்தி தெரிவிக்கப்பட்டது. ஜனத் தொகை மிகுந்த காஞ்சிபுரத்தின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கோயிலிலிருந்து வெளிப்பட்ட Siren ஒலி கேட்டு, சுமார் 1000 குடியிருப்புகள் கொண்ட அந்தப் பகுதியிலிருந்து, யாரும் கோயில் வாசலுக்கு வரவில்லை. ''எங்கேயோ இடி இடிக்கிறது. எங்கேயோ மழை பொழிகிறது'' என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள் போலும். ஒரு வழியாக சுமார் மூன்றரை மணிக்கு அர்ச்சகர் வந்து சேர்ந்தார். அங்கே கூடியிருந்த மூன்று நபர்கள் (அதாவது, காவலர், ராகவன், பாஞ்சஜன்யம் ஆசிரியர் ஆகிய மூவர்), கையில் தடியுடன் அர்ச்சகர் கதவுகளைத் திறக்க உள்ளே சென்று பார்த்தால், யாரும் காணப்படவில்லை. Sirenனின் உள் கட்டமைப்பில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். அங்குவந்த தர்மகர்த்தா Siren ஒலி எழுப்பும்போது, காஞ்சிபுரம் காவல் நிலையத்திலும் அதன் ஒலி கேட்கும் என்று கூறினார். ஆனால் எந்தக் காவலரும் வருகை தரவில்லை. இது ஒருபுறம் இருக்க, நாங்களெல்லாம் மகாமண்டபத்திற்குள் நுழைந்தபோது திருமடைப்பள்ளியிலிருந்து தளிகை செய்பவர் வந்து சேர்ந்தார். அவர் காது கேளாதவர் என்று திருக்கோயில் காவலர் கூறினார்.

ஆனால் அவர் வாயிலிருந்து மது அருந்திய நெடி எங்கும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இதுபோன்ற 'பேர்வழிகள்' தளிகை செய்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பதைக் காட்டிலும், நல்ல பழவகை களை ஒவ்வொரு வேளையும் எம்பெருமானுக்கு கண்டருளப் பண்ணலாம். பொதுவாக எல்லோரும் சொல்லும் **ஸமாதானம் ''ஸ்வாமி ஆளே கிடைக்கவில்லை. கொஞ்சம் முன் பின் இருந்தால் கூட ஏதோ எம்பெருமான் வாத்ஸல்ய குணத்தினால் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்கிறான்''** என்பதாகும். இது ஒரு நொண்டிச் சமாதானம். இதுபோன்ற வ்யக்திகள் பல திவ்ய தேசங்களில் காணப்படுகிறார்கள். அவர்களை பணிநீக்கம் செய்து, பழங்களை கண்டருளப் பண்ணுவது ஒன்றே 2013இன் தர்மமாகக் கொள்ள வேண்டும்.

அடியேன் இவ்வாறு எழுதுவது பலருக்கு கோபத்தை உண்டு பண்ணலாம். ஆசார அநுஷ்டானத்தைக் கைக் கொள்ளாமல், கச்சம் தரிக்காமல், வாயில் லாகிரி வஸ்துக்களை அடக்கிக்கொண்டு, நெற்றியில் திருமண்காப்பு தரித்துக் கொள்ளாமல் தளிகை செய்பவர்களை தண்டிப்பதால், எம்பெருமான் மகிழ்ச்சி அடைவான். சமூகத்தில் உள்ள பெரியோர்கள் இவ்வாறு நடைபெறும் அத்துமீறல்களைக் கண்டுகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதும் ஒரு மங்களாசாஸனமே. ✸✸✸

### 3. Landmark Judgement by the Himachal Pradesh High Court. In Case No. CWP No. 4679/2011.

One Mr. Darshan Kalia filed a writ petition in the H.P. High Court against H.P. Hindu Public Religious Institutions and Charitable Board. The High Court heard the petition and gave the following judgement.

5. Mr. Subhash Chand, Temple officer has made a startling revelation that one Tata Sumo, one SX-4, one Gypsy and two tempos have been purchased from the temple funds. As far as the temple funds are being used for buying the vehicle is concerned, Tata Sumo, SX-4 and Gypsy could not be purchased from the temple funds. The temple funds are strictly to be used for providing better facilities for the temple. According to Mr. Subhash Chand, Temple Officer, Tata Sumo is being used by him and SX-4 and Gypsy are attached with the Commissioner Temple, i.e. Deputy Commissioner, Una.

6. The Officers of the State under the Himachal Pradesh Hindu Public Religious Institutions and Charitable Endowments Act, 1984 are the trustees of the offering made by the devotees. These funds are only to be utilized for providing better facilities and for the up keep of the temple. The temple funds cannot be diverted and pemitted to be used for any other purpose. Under the garb of management, the temple and its affairs cannot be run like Governmental office. The objective



of the Himachal Pradesh Hindu Public Religious Institutions and Charitable Endowments Act, 1984 is to provide for the better administration of Hindu Public Religious Institutions and Charitable Endowments. There is a misconception in the minds of the State that the temples/shrines mentioned in Schedule-I have been taken over. In fact, the enactment is only for managing the affairs of the shrines.

7. Every person under Article 25 of the Constitution of India is entitled to freedom of conscience and free profession, practice and propagation of religion, subject to public order, morality and health and to the other provisions of Part-II of the Constitution of India. There should not be any close proximity and intrusion directly or indirectly by the State in the religious freedom of persons. The State and religion are to be kept separate and entanglement between Government and religion is to be avoided.

8. Accordingly, in view of the facts enumeated hereinabove, the following mandatory directions are issued to the respondents:

ii. The Commissioner Temple and Temple Officer are restrained from using vehicles, i.e. Tata Sumo, SX-4 and Gypsy. These vehicles shall be at the disposal of the management committee of the temple constituted under section 5 of the Himachal Pradesh Hindu Public Religious Institutions and Charitable Endwments Act, 1984. These vehicles shall be surrendered by these officers by 2.00 P.M. today itself. They are restrained from using these vehicles.

iii. No vehicle except Ambulance or fire tenders shall be purchased from the temple funds, till further orders.

iv. The Secretary, Language, Art and Culture is directed to ensure that no vehicle is used by the Commissioner Temple

and Temple Officer and other officers of the State purchased from the temple funds throughout the State of Himachal Pradesh.

v. He is also directed to file supplementary affidavit of compliance stating therein why the legislation has been made for Hindu Shrines and religious endowments alone.

vi. The Secretary, Language, Art and Culture shall issue necessary directions to the Commissioners Temple and Temple Officers that there is no interference by the State organs in the shrines in religious ceremonies and rituals performed by the devotees throughout the State of Himachal Pradesh.

(Rajiv Sharma), J.

25.6.2013.

**இதன் தமிழாக்கம்**

ஹிமாசல ப்ரதேச உயர்நீதிமன்றத்தில் 'தர்சன் காலியா' என்பவர் 2013ஆம் ஆண்டு ஒரு வழக்குத் தொடுத்திருந்தார். பேருந்து நிலையத்திலிருந்து திருக்கோயில் செல்லும் வழியில் ஐந்து இடங்களில் கழிப்பறைகள் அமைப்பதற்கான நில ஆர்ஜிதம் செய்யப்படாமல் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. கோயில் நிர்வாகம் நிதிஒதுக்கீடு செய்திருந்தபோதிலும், அது எந்தப் பயனையும் தரவில்லை என்றும், திருக்கோயில் நிதியிலிருந்து ஆடம்பரக் கார்கள் வாங்கப்பட்டுள்ளன, கோயில் நிர்வாகத்தில் அரசின் தலையீடு நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது, இவையனைத்தும் இந்துசமய அறநிலையத்துறைச் சட்டத்திற்கு எதிரானது என்பதே அந்த வழக்கு.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு J.ராஜீவ் சர்மா முக்கியத்துவம் வாய்ந்த ஓர் தீர்ப்பினை அளித்துள்ளார். ***(இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நாம் தமிழ்நாட்டில் இந்துசமய அறநிலையத்துறையின் அத்துமீறல் களுக்கு ஓர் முடிவு கட்டலாம். இதற்கு கறுப்பு அங்கி அணிந்த இந்து வக்கீல்கள் உதவி***



***செய்ய வேண்டும். அவர்கள் தீயைப் போல வேலை செய்ய வேண்டும். செய்ய முன்வருவார்களா?)***

இந்த வழக்கில் அரசாங்கம் உடனடியாக நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் ப்ரமாண பத்திரம் தாக்கல் செய்த கோயில் நிர்வாக அதிகாரி கோயில் நிதியிலிருந்து ஒரு Tata Sumo, ஒரு SX-4, ஒரு Gypsy, இரண்டு Tempo Traveller ஆகியன வாங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருந்தார். மாண்புமிகு நீதிபதி கோயில் நிதியிலிருந்து இவ்வாறான கார்கள் வாங்கக்கூடாது என்று தீர்ப்பளித்துள்ளார். மேலும் கோயில் நிதி யாத்திரிகர்களின் வசதி மேம்பாட்டிற்கு மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். கோயில் நிதியில் வாங்கப்பட்ட கார்கள் அந்த துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளால் உபயோகிக்கப்பட்டு வருகிறது என்ற குறிப்பைக் கண்டு நீதிபதி வெகுண்டார். அனைத்துக் கார்களையும் உடனடியாக பறிமுதல்செய்து கோயில் தர்மகர்த்தாவிடம் ஒப்படைக்கும்படியும், அந்தச் செயல் ஒரு மணி நேரத்திற்குள் முடிவடைய வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

ஹிமாசலபிரதேச இந்துசமய அறநிலையத்துறைச் சட்டம் கோயில்களைப் பராமரிப்பதற்காக ஏற்பட்டதேயொழிய கோயில் சொத்துக்களை அபகரிப்பதற்கு அல்ல என்றும் மாண்புமிகு நீதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசியர் சட்டவிதி 25இன் கீழ் அனைத்து இனத்தைச்சார்ந்த மக்கள் அரசின் குறுக்கீடின்றி தத்தம் மதவழிபாடு களைச் செய்வதற்கு உரிமையுண்டு என்றும், அதை குறுக்கீடு செய்வதற்கு மாநில மத்திய அரசுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் அவர் மேலும் தீர்ப்பளித்துள்ளார்.

கோயில் நிதியிலிருந்து ஆம்புலன்ஸ் அல்லது தீயணைப்பு சாதனங்கள் மட்டுமே வாங்கப்பட வேண்டுமென்றும் ஆடம்பரக் கார்கள் வாங்கக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஹிமாசல ப்ரதேசத்திலுள்ள எந்தக் கோயில்களிலும் கோயில் நிதி கொண்டு கார்கள் வாங்கக்கூடாது என்று, அரசாங்கம் உத்தரவிடவும் மாண்புமிகு நீதிபதி ஆணையிட்டுள்ளார். திருக்கோயில் நிர்வாக அதிகாரிகள் உள்துறை விவகாரங்களில் எவ்விதக் குறுக்கீடும் செய்யக்கூடாது என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறியுள்ளார்.★★★

## 4. திருவரங்கத்தின் பெருமையை பறைசாற்றும் நூல்களின் பட்டியல்

திருமாலின் திவ்யதேசங்கள் நூற்றெட்டினுள் தலைமை பூண்டதும், அடைமொழியேதுமின்றி கோயில் என்று கூறியவள விலேயே குறிக்கப்படுவதும், பூலோக வைகுண்டம் எனப் போற்றப் படுவதும், போகமண்டபம் எனப்படுவதுமாகிய திருவரங்கம் தற்போதைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொள்ளிடம் மற்றும் காவிரி ஆகிய இரு ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளதொரு புனிதத்தலமாகும்.

புராணங்கள், ஆகம நூல்கள், துதி நூல்கள், கோயிலொழுகு எனப்படும் வரலாற்றுப் பெட்டகம், புதினங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்ற பல்வேறு நூல்கள்வழி திருவரங்கத்தின் பெருமையையும், ஆங்கு அரவணைமேல் பள்ளிகொண்டருளும் அரங்கனைப்பற்றியும் முறையான செய்திகளை நாம் பெற முடிகிறது. இனி அந்த நூல்களின் பெயரையும், அவற்றில் குறிப்பிடப்படும் செய்திகள் பற்றிய சுருக்கத்தையும் காணலாம்.

1. 18 புராணங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவது கருடபுராணம். இதில் 108 அத்யாயங்களில் திருவரங்கத்தின் பெருமை பேசப்படுகிறது. இந்த நூலிற்கு சதாத்யாயீ என்று பெயர். அவ்வாறே ப்ரஹ்மாண்ட புராணத்தில் 11 அத்யாயங்கள் கொண்ட பகுதியில் ஸ்ரீரங்கம் மாஹாத்மியம் என்று தலைப்பிடப்பட்டு ஸ்ரீரங்கத்தின் பெருமை மேலும் பேசப்படுகிறது.

2. ஸ்ரீரங்கநாதன் இக்ஷ்வாகுல மன்னர்களால் ஆராதிக்கப் பட்டு வந்ததை ஸ்ரீராமாயணத்தில் ‘‘ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. திருவரங்கத்திற்கே உரியதான ஆகமநூல் ‘பாராமேச்வர ஸம்ஹிதை’ எனப்படும். இந்த நூலை கி.பி. 1953ஆம் வருடம் திரு.கோவிந்தாசார்யர் என்பவர் விளக்கக்குறிப்புகளுடன் ஸ்ரீரங்கம் ஸ்ரீவிலாசம் அச்சுக்கூடத்தில் அச்சிட்டார்.

தொடரும்)

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

இதழ் 171இன் தொடர்ச்சி: ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

இவ்வளவு தொலைவில் உள்ள நட்சத்திரங்கள் சக்தி வாய்ந்த தொலைநோக்கி (Telescope) மூலம் பார்த்தால் கூட, வெறும் புள்ளியாகத் தெரிய அவைகளைச் சுற்றி கிரகங்கள் இருந்தால் நிச்சயம் அவற்றை தொலைநோக்கியால் காணமுடியாது. எனினும் நவீன ஆய்வில் சில கிரகங்களைக் கண்டுபிடித்திருக் கிறார்கள்.

நட்சத்திற்கான கிரகங்களைக் கண்டுபிடிக்க விஞ்ஞான ரீதியான இன்னொருவழி இருக்கிறது. ஒரு நட்சத்திரத்தின் பக்கத்தில் பெரிய அளவிலான ஒரு கிரகம் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால், அந்தக் கிரகத்தின் ஈர்ப்பு சக்தியால் நட்சத்திரத்தின் இயக்கத்தில் சிறிய ஆட்டங்கள் தென்படும். ஸிஞ்சல் (ராஜஹம்சம்) நட்சத்திரத்திற்கு இந்த ஆட்டம் இருப்பதை 1944ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்கள். எனவே, அந்த நட்சத்திரத்திற்கு மிகப்பெரிய கிரகம் இருக்க வேண்டும் என்று ஊகித்து அறிந்தார்கள். (அண்மையில் இந்த அனுமானங்களால் பல கிரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.)

இந்த நட்சத்திர கிரகத்தில் நம்மைப்போல ஜீவராசிகள் இருக்கலாம். இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டு பிடித்தால் ஒரு பெரிய அதிசயமாகும் அது.

**ராசிகள்**

இனி ராசி என்றால் என்ன என்பதை விஞ்ஞான ரீதியாக அறிந்து கொள்ள முயல்வோம். ஆகாயத்தில் நட்சத்திரங்களை ஆராய முற்பட்ட நமது முன்னோர்கள் அவைகளை அடையாளம் கண்டுபிடிக்க ஒரு பகுப்பு முறையைக் கையாண்டார்கள். ஒரு

கொத்து நட்சத்திரங்களைப் பார்த்தால் அவை ஏதாவது ஒரு தெரிந்த வடிவத்திற்கு ஒப்பாக இருப்பதை அறிந்தார்கள். இந்த வடிவங்களை வைத்து அந்தந்தக் கொத்துக்குத் தனித்தனிப் பெயர் வைத்தார்கள். இவைகளை ராசி என்று அழைத்தார்கள். மொத்தம் 88 கொத்துக்களை (Constellations) வானவெளி நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆனால் சூரியன் செல்லும் பாதையில் உள்ள பன்னிரண்டு ராசிகள்தான் முக்கியமானவை அவை, மேஷம் (வெள்ளாடு), ரிஷபம் (எருது), மிதுனம் (பெண்- ஆண்), கடகம் (நண்டு), சிங்கம் (சிங்கம்), கன்னி (பெண்), துலாம் - (தராசு), விருச்சிகம் (தேள்), தனுசு (வில்), மகரம் (முதலை), கும்பம் (குடம்), மீனம் (மீன்) ஆகியவையாகும். விருச்சிக ராசியானது, ஆகாயத்தில் தேள் போன்ற தோற்றத்தை உடையதாய்ப் பெரிதாகத் தெரியும். இதை நாம் நம் கண்களால் பார்க்கலாம். கோடிக்கணக்கான கி.மீட்டர்கள் தூரத்தில் இந்த நட்சத்திரங்கள் அமைந்துள்ளதால், இவை நமக்குக் கொத்தாகத் தெரிகின்றன. ஆனால் இவை ஒவ்வொன்றுக்கும் இடையே லட்சக்கணக்கான கி.மீட்டர்கள் இடைவெளி இருக்கும்.

பூமியின் கிட்டத்தட்ட நடுப்பகுதியில் நாம் (தமிழ்நாடு) இருப்பதால் இருபக்கமும் உள்ள நட்சத்திரக் கொத்துக்களும் நமத்துத் தெரியும். வெகுதூரக் கொத்துக்கள் பனி முதலிய மூட்டம் காரணமாக மட்டும் நமக்குத் தெரியாமல் போகலாம். நமக்குத் தெற்கே தெரியும் நட்சத்திரங்கள் இங்கிலாந்தில் வசிப்பவர் களுக்குத் தெரியாது. ஆகாயத்தில் சூரியன், சந்திரன், பூமி, இதர கிரகங்கள் இயங்கும் ஒருவித வட்டப்பாதையைத் தான் 'ஸோடியாகக்' (Zodiac) என்கிறார்கள். இதில்தான் பன்னிரண்டு ராசிகளும் இருக்கின்றன. இனி வானவெளியில் எப்படி கற்களும், பாறைகளும் வந்தன என்பதைக் கருத்தில் கொள்வோம்.

சிருஷ்டியின்போது மீதியானவை தட்டு தடுமாறி விண்வெளியில் அகப்பட்டு விடும். சூரியனை அவை சுற்றிக் கொண்டிருக்கும். இந்த சிறு கற்களும், தூசுகளும் பூமண்டலத்தை நோக்கிப் பாய்வதுண்டு. அவை நமது வாயு மண்டலத்தில் ஊடுருவும்போது உராய்தல் ஏற்பட்டுத் தீப்பற்றி எரிந்து



போவதுண்டு. இவற்றைத் தான் நாம் 'எரி நட்சத்திரங்கள்' என்கிறோம். வால் நட்சத்திரங்கள் இருக்கும் பகுதியிலும், நட்சத்தி ரங்கள் இருக்கும் பகுதியிலும் தான் இவைகளும் இருக்கின்றன. நட்சத்திரங்கள் எரிந்து விழுவதைப் பார்க்கிறோமோ! அவ்வளவு பிரம்மாண்ட நட்சத்திரங்களா எரிந்து விழுகின்றன? ஆயினும் எரி நட்சத்திரங்கள் உண்மையில் நட்சத்திரங்கள் அல்ல. நட்சத்திரங் கள் எல்லாம் அண்டவெளியில் எரியும் தீ உருண்டைகள். அண்டத்தில் கிரகங்கள் முதலியன உற்பத்தியானபிறகு மிகுந்திருந்த ஆவி, தூசி இனங்கள் கூட்டம் கூட்டமாக சூரியனைச் சுற்றி வருகின்றன. இவற்றில் ஒரு சின்னத்துணுக்குக் கூட சூரியனைச் சுற்றி வருகிறது. அது நிச்சயம் நம் கண்ணுக்குப் புலப் படாது. ஆனால் இந்த துணுக்கு பூமியில் ஆகாய வெளியில் மோத நேர்ந்தால் காற்றுடன் உராய்வதால் தீப்பிடித்து வானத்திலேயே எரிந்து போகின்றன. இது நமக்கு எரி நட்சத்திரமாகத் தெரிகிறது. உண்மையில் இது ஒரு மணல் போன்ற துணுக்குப் பொருளே!.

இவ்வாறு காற்றில் உராய்வதால் நெருப்புப் பிடிக்குமானால் செயற்கைக் கோள்கள் எப்படிப் பூமிக்குத் திரும்பி வருகின்றன என்ற கேள்விக்கு, செயற்கை கோளுக்கும் அதே கதிதான் நேரிடும். ஆனால் அதைத் தடுப்பதற்காக நெருப்புப் பற்றாத பொருட்களைச் செயற்கைக் கோளின் மேல் தோலாகப் பரப்பி விடுகிறார்கள். இது தவிர, காற்றில் நேராக மோதவிடாமல் ஒருவித சாய்வுக் கோணத்தில் காற்று மண்டலத்தில் சேரும்படி செய்கிறார்கள் என்பதே பதிலாகும். 1965ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் சமயத்தில் இங்கிலாந்தில் எரி நட்சத்திரம் ஒன்று விழுந்தது. விழும்போது உடைந்து சிதறி விட்டது. அதன் எடை 220 பவுண்டாக இருந்திருக்க வேண்டும். சின்னச் சின்னத் துணுக்குகளை பலர் பார்த்தார்கள்.

### சூரியக் குடும்பம்

இனி சூரியக் குடும்பம் என்பது எதனைக் குறிக்கின்றது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். சூரியக் குடும்பம் என்பது சூரியனும், சூரியனைச் சுற்றியுள்ள கிரகங்களையும், அதன் சந்திரன்களையும் குறிக்கும். சூரியன் ஒரு நட்சத்திரமே. நமக்கு அருகில் உள்ள நட்சத்திரம் என்பதால் அது பெரிதாகவும்,

வட்டமாகவும் தெரிகிறது. இந்த சூரியனை மையமாகக் கொண்டுள்ளது சூரியக் குடும்பம். இந்தச் சூரியனைச் சுற்றி ஒன்பது பெரிய கிரகங்கள் இருக்கின்றன. இவைத் தவிர எரி நட்சத்திரங்கள், வால் நட்சத்திரங்கள், இன்னும் சில வேறு கிரகங்கள் எல்லாம் உள்ளன. தவிர சில கிரகங்களுக்குத் தனித்தனி சந்திரன்கள் உண்டு. இவை எல்லாம் அடங்கியது நமது சூரியக் குடும்பம். சூரியனை இரண்டடி குறுக்களவு உள்ள வட்டம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இதற்கு அருகில் நெருங்கி இருக்கும் கிரகம் புதன் (மெர்க்குரி) இது நமது இரண்டு அடி விட்டமுள்ள சூரியனுக்கு 83 அடி தூரத்தில் இருக்கும். இதன் பரிமாணம் ஒரு கடுகின் அளவு தான். இதை அடுத்து வெள்ளி (வீனஸ்) கிரகம் இருக்கிறது. இது சூரியனுக்கு 156 அடி தூரத்தில் உள்ளது. இதன் பரிமாணம் ஒரு சிறு பட்டாணிக் கடலை போன்றது.

அடுத்தது நமது பூமி தான். இது சூரியனுக்கு 215 அடி தள்ளி இருக்கிறது. அடுத்தது செவ்வாய் (Mars) கிரகம். இது சூரியனுக்கு 328 அடி தள்ளி இருக்கிறது. இது வெறும் குண்டூசியின் தலை அளவு தான். அடுத்தது வியாழன் (Jupiter) இது சூரியனுக்கு 352 அடி தூரத்தில் இருக்கிறது. இது ஒரு ஆரஞ்சு பழத்தின் அளவில் இருக்கும். அடுத்தது சனி. சூரியனுக்கு 704 அடி தூரத்தில் இருக்கும். இது ஒரு இலந்தம்பழம் போல் அளவு. இதை அடுத்தது நெப்ட்டியூன். இது சூரியனுக்கு ஒன்றரை கி.மீ. அளவு தள்ளி இருக்கிறது. இது ஒரு பெரிய ப்ளம் பழம் போன்ற அளவு.அடுத்தது புளூட்டோ. இது ஒரு குண்டூசி தலைபோல் தான் அளவு. இது சூரியனுக்கு 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இத்தனையும் சேர்ந்ததுதான் சூரியக் குடும்பமாகும்.

சூரியன் எப்போதும் எரிந்து கொண்டு இருக்கிறதா என்ற கேள்விக்கு, சூரியன் ஒரு நெருப்புக் கோளம். இது எரிவது என்பது ஏதோ ஏராளமான கரி எரிவது போன்றது அல்ல. அப்படி எரிவதாக இருந்தால் அதன் அத்தனை எரிபொருளும் இதற்குள் வீணாகி இருக்கும். சூரியனில் ஹைட்ரஜன் இருக்கிறது. இது ஹீலியமாக மாறுவதால் ஏற்படக் கூடிய அணு மாற்றத்தால் வெப்பம் வெளிப்படுகிறது! அதனால் சூரிய வெளிச்சமும், வெம்மையும் ஏற்படுகின்றன. (தொடரும்)